கவிஞர் பொறிஞர் முத்தமிழ் விரும்பியின்

பூ மர நிழலின் களமும் காலமும்

(ஓர் உள்ளடக்கப் பகுப்பாய்வு)

முனைவர் செ. இராஜேஸ்வரி, M.A., M.Phil., Ph.D.,



சந்திரோதயம் பதிப்பகம், மதுரை.

கவிஞர் பொறிஞர் முத்தமிழ் விரும்பியின்

பூ மர நிழலின் களமும் காலமும்

(ஓர் உள்ளடக்கப் பகுப்பாய்வு)

முனைவர் செ. இராஜேஸ்வரி M. A., M. Phil., Ph. D.,

சந்திரோதயம் பதிப்பகம்,மதுரை.

நூல் விவரம்

நூலின் பெயர்	:	*பூ மர நிழலின் களமும் காலமும் (ஓர் உள்ளடக்கப் பகுப்பாய்வு)*
ஆசிரியர்	:	*முனைவர் செ. இராஜேஸ்வரி*
அட்டை வடிவமைப்பு	:	*செ. மீனாட்சி*
பதிப்பாளர்	:	*சந்திரோதயம் பதிப்பகம்* *3/422 தினமணி நகர்,* *மதுரை – 625 018* *தொலைபேசி எண் : 7010997639*
பதிப்பு	:	*இரண்டாம் (டிசம்பர் 2020)*
மொழி	:	*தமிழ்*
பக்கங்கள்	:	*120*
விலை	:	*Rs.200/-*

- - - - -

Title	:	*Puu Mara Nizhalin Kalamum Kaalamum (Oer Ulladakkap Pakuppaayvu)*
Subject	:	*Poetry Criticism*
Author	:	*Dr.C.Rajeswari, M.A., M.Phil., Ph.D.,*
Cover Design	:	*C. Meenatchi*
Publisher	:	*Chandrothayam Pathippagam* *3/422, Dinamani Nagar* *Madurai – 625 018* *Phone : 7010997639*
Month of Publishing	:	*December, 2020*
Pages	:	*120*
Price	:	*Rs.200/-*

முன்னுரை

கோவை பாரதியார் பல்கலைக்கழகப் பேராசிரியர் முனைவர் தே. ஞானசேகரன் அவர்கள் என்னிடம் கவிஞர் பொறிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதைகள் சிலவற்றைக் கொடுத்து அவற்றை மொழி பெயர்க்க வேண்டும் என்று கூறிய போது எனக்கு வரும் பல மொழிபெயர்ப்புப் பணிகளில் ஒன்றாகத்தான் கருதி ஏற்றுக்கொண்டேன் ஆனால் அந்தக் கவிதைகள் ஆழமாகவும் மென்மையாகவும் பொருள் கொண்டிருப்பதை அறிந்து இன்புற்றேன். மேலும் சில கவிதைகளை வாசிக்கவும் விரும்பினேன். கவிதைகளின் மொழிபெயர்ப்பு சிறப்பாக இருப்பதைக் கண்டு இருவரும் கலந்து பேசி பூ மர நிழல் என்ற நூலை மொழிபெயர்த்துத் தரும்படி அனுப்பி வைத்தனர். இது பழம் நழுவி பாலில் விழுந்து அது நழுவி வாயில் விழுந்ததைப் போன்ற நல்வாய்ப்பாக அமைந்தது. இதன் தொடர்ச்சியாக ஐந்து கவிதை தொகுதிகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தென். அவற்றை சென்னை எமரால்டு பதிப்பகத்தார் வெளியிட்டுள்ளனர்.

பூமர நிழல் தொகுதியின் ஒவ்வொரு கவிதையைவாசிக்கும்போது அக்கவிதையின் படிமங்களும் குறியீடுகளும் வியப்பில் ஆழ்த்தின. கவிதை அனுபவத்தில் தொய்ந்து மிண்டும் மிண்டும் வாசித்து மகிழ்ந்தேன். ஒரு கவிதையை வாசித்தோம் மொழிபெயர்த்தோம் என்று மொழிபெயர்க்க இயலவில்லை. திரும்ப திரும்ப வாசிக்க தூண்டின. இதனை இப்படி புரிந்துகொள்வதா அப்படி புரிந்துகொள்வதா என்ற கேள்விகள் மனத்தில் உதித்தன. கவிஞரிடம் இந்த ஐயங்களைக் கேட்டு

தெரிந்து கொள்ளும் வாய்ப்பும் இல்லை. அவர் 'உங்களுக்கு எப்படி தோன்றுகிறதோ அப்படியே செய்யுங்கள்' என்று ஒற்றை வரியில் பதிலளித்துவிட்டார். உள்ளடக்கம் வேறு பிரமிக்க வைத்தது. இதுவெல்லாம் கவிதையின் பாடுபொருளாகுமா என்ற வினா என்னுள் அடிக்கடி தோன்றி மறைந்தது.

கவிதைகளை வாசிப்பதே அன்றாட வேலை ஆயிற்று. அடுத்தடுத்து வாசிக்க வாசிக்க ஒவ்வொரு கவிதையும் ஆழமாகவும் அழுத்தமாகவும் அமைந்திருப்பதை உணர்ந்தேன். படிமங்களுக்கு எனக்குச் சரியெனப் பட்ட பொருண்மையைக் கொண்டு மொழிபெயர்க்கத் தொடங்கினேன். அடுக்கு நிலைக் கொள்கைப் படி பல பொருண்மைகள் கிடைப்பதை அறிந்தேன். முதுகலை தமிழ் படிக்கும் காலத்தில் நான் பிச்சமூர்த்தி, தருமு. சிவராமு, நகுலன் போன்றவர்களின் கவிதைகளைப் பாடமாகப் படித்து ரசித்துப் புரிந்துகொண்டேன். அதன் பிறகு யாருடைய கவிதையும் என்னைப் பெரிதும் கவரவில்லை. கவிதை வாசிக்கும் பழக்கமும் என்னிடம் பெரியளவில் இருந்ததில்லை. கவர்ந்தாள் தானே வாசித்து மகிழ்வோம்.

சங்க இலக்கியத்தின் வைகை பரிபாடல் மற்றும் நாட்டுப்புறப் பாடல்களை மொழிபெயர்த்து அளித்த பொது அது ஒரு மொழிபெயர்ப்பு பணியாகவே மேற்கொண்டேனே தவிர பெரியளவில் ஈர்ப்பு எதுவும் இல்லை. நாட்டுப் புறப் பாடல்களை அதே சந்தத்தில் ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பதை சவாலாக ஏற்றுக்கொண்டு செய்தேன். பரிபாடலை இயைபு சுவையுடன் செய்து இன்றைய வாசகர்கள் படிக்கும் அளவுக்கு எளிமைப்படுத்தினேன். அப்பணியை

அளித்த அமெரிக்கப் பேராசிரியர் முனைவர் பீட்டர் நாபகோவ் அதனை புது கவிதை முறையில் செய்திருக்கலாம் என்று கருத்துத் தெரிவித்தார். இவை தவிர பாரதியார், பாரதி தாசன், ஷெல்லி ஆகியோரின் சில கவிதைகளை மொழிபெயர்த்து இதழ்களில் வெளியிட்டுள்ளேன். கவிதை அல்லது செய்யுள் மொழிபெயர்ப்பில் இத்தகைய அனுபவம் இருந்தாலும் பூ மர நிழல் மொழிபெயர்ப்பு அனுபவம் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும்.

பூ மரநிழல் கவிதைகளை வாசித்தபோது ஒரு கவிதையிலும் ஒரு சொல் கூட வெற்றுச் சொல் இல்லை என்பதை அறிந்து கொண்டேன். கவிதைகள் அனைத்தும் 'நறுக்குத் தறித்தாற் போல' அமைந்திருந்தன. கவிதைகளின் கட்டமைப்பு எங்குமே தொய்வில்லாமல் ஒரு திசையில் இழுத்துக் கொண்டு செல்லாமல் கம்பீரச்சித்தனை போல நிமிர்ந்து நின்றது. கவிதையில் எங்குமே தொய்வில்லை. ஒரு சொல் அல்லது ஒரு தொடர் அல்லது ஒரு வரியை நாம் நீக்கிவிட இயலாது. கட்டு செட்டான கவிதைகள் அவை. குறிப்பாக கடைசி சொல் அல்லது வரி முத்தாய்ப்பாக அமைந்து கவிச்சுவையை மிகுதிப்படுத்தியது. இதனை ஆங்கில இலக்கியத் திறனாய்வாளர்கள் *rheme* என்பர். இச்சொல் அல்லது வரி கவிதையின் வாயில் போல அமைந்தது. இந்தக் கட்டமைப்பு திறன் கண்டு வியந்து போனேன்.

கவிதைகளை வாசித்து இரசித்து அதே உணர்ச்சியை ஆங்கிலத்தில் கொண்டு வரும் முயற்சியில் மொழிபெயர்க்கத் தொடங்கினேன் மொழிபெயர்ப்புப் பணி சிறப்பாக முடிந்து நூல் அச்சில் வெளிவந்த பிறகும் இக்கவிதைகளில் கொண்டிருந்த ஈடுபாடு குறையவே இல்லை.

கவிதையின் ரசனை பற்றி எனக்கு விளக்கிக் கூறத் தெரியாவிட்டாலும் உள்ளடக்கத்தின் சிறப்பு குறித்து ஒரு வாசகி என்ற முறையில் மற்ற தமிழ் வாசகர்களுக்கு எடுத்துச் சொல்வது என்னுடைய தலையாயக் கடமையாகத் தோன்றியது. எனவே இந் நூல் எழுதும் எண்ணம் ஏற்பட்டது.

பூ மர நிழல் கவிதையின் உள்ளடக்கம் அன்றாடம் நாம் காணுகின்ற பல நிகழ்வுகளை கவித்துவத் தகுதி உடையதாக மாற்றி இருப்பதை அறியலாம். பத்மநாபபுரம் அரண்மனை பூட்டி இருக்கும் போது அதனைப் பார்வையிட இயலாத ஏக்கத்தோடு வருத்தத்தோடு திரும்பி வந்தவர்கள் பலர் உண்டு; அந்த அரண்மனையில் இருந்த பெண்களுக்காக இரக்கப்பட்ட இதயம் உண்டு என்றால் அது கவிஞர் பொறிஞர் முத்தமிழ் விரும்பி என்று ஆணித்தரமாக எடுத்துரைக்கலாம்.

பூமர நிழல் கவிதைகளில் வாழ்க்கையின் தத்துவங்கள் இலக்கு, இயக்கம், முகங்கள், நிகழின் இறப்பில் போன்ற பல கவிதைகளில் அழமாகவும் அழுத்தமாகவும் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. ‘எதிர்’ என்ற கவிதை

‘மலரினும் மெல்லிது காமம் சிலரதன்

செவ்வி தலைப் படுவார்’

என்ற வள்ளுவர் வாக்கிற்கு எடுத்துக்காட்டாகும். முனைவர் திருமதி நிகோல் பெர்கர் இக்கவிதையை ஆங்கிலத்தில் வாசித்துவிட்டு இக்கவிதை ஐம்புலன் இன்பங்களையும் ஒரு சேரக் காட்டுவதாக தனது திறனாய்வில் பாராட்டியுள்ளார். அதைப் படித்த பின்பு ‘அறிதோறும் அறிதோறும் அறியாமை’ கண்ட நிலை

எனக்கும் உண்டாயிற்று. நான் அக்கவிதையை மொழிபெயர்க்கும் போது அது ஐம்புலனுக்குரிய இன்பங்களைக் காட்டுவதாக உணரவில்லை. பூமர நிழலின் காதல் கவிதைகள் இனிமை நிறைந்தன. குழந்தையைப் பற்றிய கவிதைகள் கல்லூரி வாழ்நாட்கள் பற்றியவை, தங்கை, அம்மா, அப்பா, அம்மாச்சி மற்றும் உறவினர்கள் காட்டுகின்ற அன்பு, பாசம், பரிவு, கோபம், வெறுப்பு பற்றிய கவிதைகள் வாசிக்கும் அனைவருடைய உள்ளத்தையும் தொட்டு விடும் உணர்ச்சி ஆழம் உடையன.

பூ மர நிழல் கவிதைகளில் பறவை, மரம், செடி, கொடி, மலை, வெயில் என இயற்கை சார்ந்த பல பாடுபொருட்கள் உண்டு. இவை சங்க இலக்கியத்தின் கருப்பொருட்கள் போல கையாளப்பட்டிருப்பதையும் காணலாம். கடல்கோள் 2004 என்ற கவிதை பெறும் அதே முக்கியத்துவத்தை என்ற இயக்கம் என்ற கவிதையும் பெறுவது உறுதி.

தந்தைக்கு மகற்காற்றும் உதவி இவன் தந்தை

என்நோற்றான் கொல்லெனும் சொல்

என்ற குறளின் படி கவிஞர் தன் தந்தை இறந்தது குறித்து இத்தொகுதியில் எழுதி சேர்த்துள்ள பூமர நிழல் என்ற தலைப்புக் கவிதையை ஒரு குறுங்காவியம் என்று கூறலாம்.

பூமர நிழல் என்ற தலைப்புக் கவிதையை மட்டும் ஆய்வுப்பொருளாகக் கொண்டு இனவரைவியல் அடிப்படையில் ஆய்வு செய்ய முனைவர் திருமதி நிக்கோல் பெர்கர் முன் வந்துள்ளார் என்பது மகிழ்ச்சி அளிக்கிறது. இவர் மானுடவியல் துறையில் முனைவர் பட்டம் பெற்றவர். என்னிடம்

தமிழ் படித்தவர். இக்கவிதை நூலின் *The Shade of the Flowering tree* என்ற ஆங்கில மொழிபெயர்ப்பைப் படித்து விட்டு ஒரு கட்டுரை எழுதினார். அவ்வுரை ஆங்கில நூலின் இரண்டாம் பதிப்பில் இணைக்கப்பட்டுள்ளது. .

பூ மர நிழல் கவிதைகளில் நாம் அன்றாடம் சந்திக்கும் நிகழ்வுகள் பெரும் அனுபவங்கள் அழகான கவிதைகளாக உருவாகியுள்ளன. இரயில் பயண அனுபவங்கள் நம்மில் பலருக்கு உண்டு; வேக வேகமாக ரயிலைப் பிடிக்க ஓடுவதும் நாம் அறியாத ஒன்றல்ல; தூக்கம் வராமல் தவிப்பது அதிகாலையில் அயர்ந்து தூங்கும் போது யாராவது வந்து அழைப்பு மணியை அடிப்பதால் ஏற்படும் எரிச்சலும் சராசரி மனிதனுக்கு ஏற்படும் அனுபவங்கள்தான். ஆனால் அவை ஒரு கவிஞருக்கு ஏற்படும்போது உலகில் பலரும் படித்து இன்புறத்தக்க கவிதைகளாக அவை உருவெடுக்கின்றன. இத்தருணத்தில் தான் ஒரு கவிஞன் சமூகத்தின் இன்றியமையாத் தேவையாகிறான்.

எல்லோரும் அறிந்த நிகழ்வுகளை ஏதோ இதுவரை அறியாதவை போல அதனுள் பொதிந்திருக்கும் அழகை வெளிப்படுத்துவதே கவிதை என்ற ஆங்கிலக் கவிஞர் ஷெல்லி கவிதைக்குத் தரும் வரைவிலக்கணம் கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதைகளுக்கு சாலப் பொருந்துகிறது. *[Poetry lifts the veil from the hidden beauty of the wortld, and make familiar objects be as if they were not familiar].*

கலைப்படைப்பு எதுவாக இருந்தாலும் ஒவ்வொரு படைப்புக்கும் பின்னால் உணர்ச்சி பிரதிபலிப்பும் அதனை வெளிப்படுத்துதல் ஆற்றலும்

செம்மையாக அமைந்துள்ளன. அவ்வகையில் இத்தொகுதியில் அமைந்திருக்கும் ஒவ்வொரு கவிதையும் ‘சரியான சொற்களை சரியான இடத்தில் பயன்படுத்தி’ மிகத் திட்டமாக செப்பமாக பொற்சிலை போல செதுக்கப்பட்டுள்ளது

பூமர நிழல் தொகுதியில் நான் மிகவும் ரசித்துப் பாராட்டுவ;

1. எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே; கவிதையின் எந்த ஒரு சொல்லும் சந்தத்திற்காக சேர்க்கப்பட்டதன்று. அனைத்தும் அழமாகப் பொருள் குறித்தன என்பதில் மிகையில்லை. எந்த ஒரு சொல்லையும் நாம் தேவையற்றது என்று நீக்கிவிட இயலாது

2. எந்த ஒரு கவிதையும் எதிர்மறை எண்ணத்தை வாசகர் மனதில் ஏற்படுத்தவில்லை; வன்முறையைத் தூண்டவில்லை; நம்பிக்கை வறட்சியை அற்படுத்தவில்லை; எதிலும் ஆபாச சொற்கள் கிடையாது.

3. சங்க இலக்கியம் தொட்டு தற்காலம் வரையிலான தகவல்களைக் கொண்டிருக்கும் கவிதைகள் ‘முன்னும் பின்னும் அரிமா நோக்கு’ உடையனவாக அமைந்திருப்பதையும் காணலாம்

4. கவிதையில் காணப்படும் செவ்வியல் தன்மை இரண்டாயிரம் ஆண்டுகள் முன்பு இயற்றப்பட்ட சங்க காலச் செய்யுள்கள் இன்றைக்கு மதிக்கப்படுவதைப் போன்று பூமரநிழல் கவிதைகளும் அதன் செவ்வியல் தன்மையை காலப் போக்கில் உறுதி செய்து அதற்குரிய செம்மாந்த

நிலையை அடையும். இத்தகுதியைக் கால தேவனின் கைகளில் இருந்து பெறுவது உறுதி.

5. பூமர் நிழல் கவிதைகள் வாசிப்போருக்கு ஒவ்வொருமுறையும் புதுப்புது பொருளையும் கவிதானுபவத்தையும் அளிக்கும் அட்சய பாத்திரம் ஆகும். .இதனால் ஒரு முறை வாசித்த நூல் தானே என்று தூக்கி ஒரு ஓரமாக வைத்து விட இயலாது. எப்போது இப் புத்தகத்தை எடுத்து ஏதேனும் ஒரு கவிதையைப் படித்தாலும் அதுவரை தோன்றாத ஒரு பொருள் புதிதாகத் தோன்றும். உடனே நாம் அகமகிழ்ந்து இன்னொரு கவிதை வாசிப்போம் அப்போது அதற்கு இன்னொரு பொருள் நம் மனதில் உதிக்கும். எனவெ இக்கவிதைகளின் வாசிப்பு அனுபவம் கவிஞர் கருதிய கருத்தை மட்டுமல்லாது அந்தக் கருத்துக்கு வேறான பலவற்றையும் வாசிப்பவரின் வாழ்வியல் அனுபவங்களுக்கு ஏற்ப புதிது புதிதாக கொடுத்துக்கொண்டே இருக்கும்.

6. கவிதை சரளமான நடையில் ஆற்றொழுக்கு போல சலசலவென்று ஓடிக் கொண்டிருக்கும். நாம் கவிதையை வாசிக்கும்போது எங்கேயும் எந்தச் சொல்லும் தடைக்கல்லாக நின்று இடறி நம் வாசிப்பின் ஓட்டத்தைத் தடை செய்யாது. மாறாக படிக்கற்களாக விளங்கும். கவிச் சொற்கள் அனைத்தும் படிக்கற்களாகி நம்முடைய வாசிப்பு அனுபவத்தை உயர்த்திக் கொண்டே போகும்.

இக்கவிதையின் கவிதானுபவத்தை எனக்குச் சரியான சொற்களில் எடுத்துச் சொல்லத் தெரியாத காரணத்தால் அதனைப் பற்றி அதிகம் விளக்காமல் உள்ளடக்கத்தை மட்டுமே பகுப்பாய்வு செய்து சில கட்டுரைகளை அளித்துள்ளேன். இது மட்டுமே

இந்நூலுக்கு உரிய உள்ளடக்கப் பகுப்பாய்வு அல்ல. இன்னும் இதில் நிறைய ஆய்வுசெய்து அறியவேண்டியது உண்டு. இளைய தலைமுறை அதற்குத் தயாராக இருக்கிறது. அவர்களுக்கான வழிகாட்டியாக மட்டுமே இந்நூல் அமைகிறதே தவிர இந் நூல் பூமர நிழலின் மொத்த உள்ளடக்கத்தையும் ஆய்வு செய்து முடித்து விடவில்லை. ஏனெனில் அதன உள்ளடக்கம்,

சுவை புதிது; பொருள் புதிது; வளம் புதிது

சொற் புதிது; சோதிமிக்க

நவகவிதை; எந்நாளும் அழியாத

மகா கவிதை.

செ. இராஜேஸ்வரி ***செப்டம்பர் 18, 2019***

மதுரை

கவிஞர் யுகபாரதி



கவிஞர் யுகபாரதி தஞ்சை மண்ணில் பிறந்தவர். தமிழ்த் திரைப்படப் பாடலாசிரியர். கட்டுரை நூலாசிரியர்.

முத்தமிழ் விரும்பியின் முதல் கவிதைத் தொகுப்பாகிய 'பூ மர நிழல்' 13.3.2005 அன்று கோவை பி.எஸ்.ஜீ.டெக் கல்லூரி அரங்கில் கவிஞர் சிற்பி தலைமையில் வெளியிடப்பட்டது. இந்நூலின் இரண்டாம் பதிப்புக்கு (மார்ச் 2019) கவிஞர் யுகபாரதி எழுதிய முன்னுரை

அன்பே உருவான ஒருவரைப் பற்றி எழுதுவதற்கு அன்பைத் தவிர வேறு ஏதேனும் இருக்கிறதா? என்ற கேள்வியிலிருந்து ஆரம்பிக்கலாம். உண்மையில், அது கேள்விபோல தோன்றினாலும், அதற்கான பதிலாகவும் அதுவே இருக்கிறது, முத்தமிழ் விரும்பியின் "பூமர நிழலில்" நூலிலுள்ள கவிதைகளை, ஏற்கனவே பலமுறை வாசித்திருக்கிறேன். அக்கவிதைகளைக் கொண்டாடியும் மகிழ்ந்தும் பலரிடம் வாசிக்கச் சொல்லி சிபாரிசும் செய்திருக்கிறேன். சின்னச் சின்ன வாக்கியங்களில் அவர் எழுதும் முறையை மேற்கோள்களாக காட்டி, கல்லூரி விழாக்களிலும் கவிதை பற்றிய கூட்டங்களிலும் பேசியிருக்கிறேன். என்னைப் போலவே முத்தமிழ் விரும்பியின் கவிதைகளை சிலாகிப்பவர்களுடன் கூடுதல் சிநேகம் கொண்டிருக்கிறேன். இதெல்லாம் ஏனென்று தெரியவில்லை. கணையாழி பத்திரிகையின் கடைசிப் பக்கத்தில் சுஜாதா குறிப்பிட்டு எழுதிய காலத்திலேயே இந்நூல் எனக்கு அறிமுகமாகிவிட்டது. முத்தமிழ் விரும்பிதான் யாரென்று தெரியாமல் இருந்தது. எனக்கு மிக நெருக்கமான அவர், இப்படியொரு பெயரைச் சூட்டிக் கொண்டதால் சிலகாலம் வரை அவரை நான் அறிந்துகொள்ள முடியாமல் போனது. எப்படியோ ஒருநாள் முத்தமிழ் விரும்பியைச் சந்திப்பேன் என்றே எண்ணியிருந்தேன். ஆனால், சந்தித்த பிறகுதான் தெரிந்தது, அவர் எனக்குத் தெரியாதவரல்ல. தெரியாதபடி இருந்தவரென்று.

அபரிமிதமாக ஒரு நூலையோ கவிதையையோ நமக்குப் பிடித்து விட்டால், நம்முடைய நடவடிக்கைகள் வழக்கத்திற்கு மாறான வகையில் அமையும். அப்படித்தான் பலநேரங்களில் அவர் கவிதைகள் என்னை ஆட்டுவித்தன. ஆட்டுவித்ததோடு மட்டுமல்ல, அதிக அதிகமான சிந்தனைகளையும் கிளர்த்தி விட்டன. தொடர்ந்து அவர் கவிதைகள் எங்கு கிடைத்தாலும் வாசிக்கும் ஆர்வத்தை ஏற்படுத்தின. முத்தமிழ் விரும்பி என்று எழுபதுகளில், அதுவும் திராவிட இயக்கத்தவர்கள் சூட்டிக்கொள்ளும் பெயராக இருந்தபோதும் கூட அவர் கவிதைகள் என்னை ஏமாற்றவில்லை. நவீனக் கவிதை எழுதக்கூடிய ஒருவர், முத்தமிழ் விரும்பியாக இருக்க வாய்ப்பே இல்லை. மேலும், அவர் கவிதைகள் என்னை ஆதூரத்துடனும் அகலாத பேரன்புடனும் தழுவிக் கொண்டன அத்துடன் நிறுத்தவில்லை. தொடர்ந்து பதினான்கு ஆண்டுகளாக படாதபாடு படுத்திக் கொண்டிருக்கிறது. முதல்பதிப்பாக அந்நூல் வெளிவந்த

சமயத்திலேயே அதன் சிறப்புகளைப் பற்றியெல்லாம் பேசி முடித்த நிலையில், இரண்டாவது பதிப்புக்கு என்னை எழுதச் சொல்லியிருக்கிறார்.

முத்தமிழ் விரும்பியின் நிறைவடையாத படைப்பு மனநிலையை யூகிப்பது எளிதல்ல. ஒருசித்திரத்தையோ, கவிதையையோ, அதீத அன்புடனும், அக்கறையுடனும் நடத்தப் பழகியிருக்கிறார். எழுதத் தொடங்கிய ஆரம்ப காலத்தில் எனக்கான மேடையை ஏற்படுத்திக்கொடுத்து, கவிதைத்துறையில் நான் மேலேறி வரக் காரண-மான அவர், என்னைவிடவும் குறைவாகவே எழுதியிருக்கிறார். களச்செயல்பாட்டிலும் கருத்துருவாக்கத்திலும் கவனம் செலுத்தியதால் அவரால் அதிகம் எழுத முடியாமல் போயிருக்கிறது. அவர்தான் அதிகமாக எழுதவில்லையே தவிர, அவரைச் சுற்றி இருப்பவர்கள் பலரையும் அவர் ஊக்கிக் கொண்டே இருந்திருந்திருக்கிறார்.

கடற்குதிரை, நெருஞ்சி என்று சதா இலக்கியச் சக்கரமாகச் சுழலும் அவர், இவ்வளவு நெருக்கடிக்கு இடையிலும் தம்முடைய கவிதைமொழியைக் காப்பாற்றி வந்திருக்கிறார் என்பதுதான் ஆச்சர்யத்துக்குரியது. எங்கே பார்த்தாலும் எப்போது பார்த்தாலும் ஒரே மாதிரியான அவருடைய புன்னகையைப் போல அவர் கவிதை களும் பழசே ஆகாமல் பரவசப்படுத்துகின்றன. பதினான்கு ஆண்டுகள் என்பது, மிக நீண்ட இடைவெளி அல்ல. ஆயினும், இந்த பதினான்கு ஆண்டுகளில் நவீனக் கவிதைகளின் போக்குகளும் நீக்குகளும் மாறியுள்ளன. கவிதைகளுக்கு தேவையான அடிப்படைகளிலும் சிந்தனை ஓட்டங்களிலும் எதிர்த்திசைக்கு வந்திருக்கிறோம். எதிர்த் திசையெனில், எதிர் முகாமென்று அர்த்தப்படுத்திக் கொள்ளக்கூடாது. ஏற்கனவே பார்க்காத திசை என்னும் அர்த்தமே என்னுடையது.

சமூகக் கவிதைகளிலிருந்து தன்னுணர்ச்சியைக் கவிதைகள் கைகொண்டு விட்டன. இடதுசாரி தத்துவம் பின்னுக்குத் தள்ளப்பட்டு வலது சாரிகள் ஆட்சிக்கும் அதிகாரத்திற்கும் வந்திருக்கின்றனர். மதங்கள் முழு நிறுவனமயமாக்கப்பட்டு அதை போஷிக்கிறவர்களுக்கு வியாபாரமாகவும் ஆகியிருக்கின்றன. முன்னெடுப்பதைக் காட்டிலும் சாதியவாதம் சகல மேடைகளிலும் பேசு பொருளாகியுள்ளது. ஆணவக் கொலைகளும்அராஜகநடவடிக்கைகளும்மிகுந்துள்ளன. திராவிட இயக்கங்கள்தங்கள் தடங்களில்இருந்து பிறழ்ந்து, மீண்டும்விட்ட இடத்தைத் தேடிக்கொண்டிருக்கின்றன. தமிழ்த்தேசிய கருத்தியலுக்கு இளைஞர்கள் மத்தியில் செல்வாக்கு கூடியிருக்கிறது. அடுக்குத் தமிழ் சொற்றொடர்கள், பொய்மை நிறைந்ததாகவும் போற்றுதலுக்கு அற்றதாகவும் விளங்கிக் கொள்ளப் பட்டிருக்கின்றன. இத்தனைக்கு இடையிலும் முத்தமிழ் விரும்பியின் கவிதைகளுக்கு சிறு சிராய்ப்புக்கூட ஏற்படவில்லை. எழுதப்பட்ட காலத்தில் எப்படி இருந்தனவோ அப்படியே இருக்கின்றன.

முதல் வாசிப்பில் இக்கவிதைகள் என்னவிதமான தாக்கத்தையும் பாதிப்பையும் ஏற்படுத்தினவோ அதே பாதிப்பையும் தாக்கத்தையும் மறு வாசிப்பிலும் இக்கவிதைகள் தருகின்றன. மறு வாசிப்பென்பது, மறு பதிப்பிற்கான வாசிப்பென்று புரிந்து கொள்ளவும். இது, சாதாரண விஷயமில்லை. கவிதைக்கான மொழியை அவர் கண்டடைந்த அல்லது கட்டமைத்த நுட்பத்தினால் நேர்ந்திருக்கும் நன்மைகளில் இதுவும் ஒன்று. இயக்கம், ஞானம், காத்திருத்தல், ஆசுவாசம், தத்தரிகிட தகதிமி, காத்திருக்கும் புள்ளியின் ஒளி ஆகிய கவிதைகளை இன்னும் நூறாண்டு கழித்து வாசித்தாலும், அதன் அடர்த்தியும் செழுமையும் அப்படியே தானிருக்கும். இயக்கத்திற்கேற்பவும் காலத்திற்கேற்பவும் ஒரு கவிதை மாற வேண்டாமா? எனக் கேட்கலாம். மாறவேண்டும் தான். அதுபடி இக்கவிதைகளும் மாறித்தான் இருக்கின்றன. ஆனால், அம்மாற்றங்கள் நற்றிசையை நோக்கியே நகர்ந்திருக்கின்றன என்பதுதான் நான் சொல்லவருவது கவிதைக்கென்று முத்தமிழ் விரும்பி உருவாக்கியிருக்கும் பிரத்யேக மொழியின் விளைவுகள் அவை.

கவிதைகள் எது குறித்து அமைய வேண்டும் எனும் தீர்மானத்தை காலம் ஏற்படுத்துகிறதா? இல்லை கவிஞனே தன்னியல்பாக ஏற்படுத்திக் கொள்கிறானா? என்ற கேள்வியை இரண்டு வகையில் எதிர்கொள்ளலாம். முதலில், காலத்தின் வழியே கவிஞனும், பிறகு கவிஞனின் வழியே காலமும் அத்தகைய தீர்மானங்களை இலக்கியச் சூழலுக்குத்தக்கவாறு அமைத்துக் கொள்ள நேர்கின்றன. முதல் நிலை படைப்பாளிகளைப் பார்த்து இரண்டாம் நிலை படைப்பாளிகள் எழுதவருவதும், அதன்பின் இரண்டாம் நிலை படைப்பாளிகள் பார்த்து முதல் நிலை படைப்பாளிகள் ஊக்கம் பெறுவதுமான தொடர்ச் சங்கிலியில் எந்தக் கண்ணியில் முத்தமிழ் விரும்பி இருக்கிறார் என்பது முக்கியமானது. முதல்நிலையிலும் இரண்டாம் நிலையிலும் அவரே இருக்கிறார்.

ஆர்வத்துடன் கவிதைகளை அணுகுவதில் முதல்நிலையிலும், அதை ஆக்கப்பூர்வமான செயல்பாடாக ஆக்குவதில் இரண்டாம் நிலையிலும் இருப்பதை இக்கவிதைகளை வாசிக்கையில் விளங்கிக் கொள்ளலாம். "வாழ்த்துத் தந்தி / வந்திருக்கக்கூடாது / தூங்கும் அகாலத்தில்" என்றொரு கவிதை. தந்தி / வந்திருக்கக் கூடாது / அகாலத்தில் என்று கூட அக்கவிதையை எழுதலாம். வாழ்த்தும், தூங்கும் என்ற இரண்டு சொற்களில் தான் முத்தமிழ் விரும்பி தமது கவிதை மொழியை கட்டமைக்கிறார். துக்கமான செய்தியைத் தாங்கிய தந்தி வந்திருந்தால் அதுகுறித்து சொல்வதற்கு ஒன்றுமில்லை. தவிர, தந்தி என்றதுமே நம்முடைய மனப்பதிவில் துக்கத்திற்கான படிமங்களே பதிந்துள்ளன. அதை மாற்றி, வாழ்த்துத் தந்தி என்று எழுதியிருக்கிறார். அதேபோல, தூங்கும் அகாலத்தில் என்பதிலும் ஒரு குறிப்பு இருக்கிறது. அகாலத்தில் தூங்காமல் இருப்பவர்க்கு வரக்கூடிய செய்திகளில் பரிதவிக்கவோ, பரவசப்படவோ எதுவுமில்லை. கவிதையின் மையத்தை நோக்கி நகரும் சாதுர்யங்களை வார்த்தைகளின் சூட்சமத்திலிருந்து பெற்றுக் கொள்பவராக முத்தமிழ் விரும்பி தெரிகிறார்.

சௌந்தர்ய லஹரி என்றொரு கவிதை. அக்கவிதையில் இடம்பெற்றுள்ள சிறுமிகளின் பெயர்களை சமூக அடுக்கங்களின் படியே அமைத்துள்ளார். ராதா, லாவண்யா, சுதா, அனிதா, சுகன்யா என்று அவர் வரிசைப்படுத்தியவை பெயர்களல்ல. அச்சிறுமிகள் தனக்குக் கற்று கொடுத்தவற்றைப் பற்றிய குறிப்பாக அக்கவிதை விரிந்தாலும், அதற்கப்பாலும் அக்கவிதை எதையோ சொல்வதாக எனக்குப் படுகிறது. ஆதி சங்கரரின் சௌந்தர்ய லஹரியை கவிதைக்குத் தலைப்பாக வைத்திருப்பதும் கவனிக்கத்தக்கது. சிறுமிகள் உலகத்தில் கடவுள் நடமாடுகிறார். ஒரு கட்டத்தில் சிறுமிகளே கடவுளாக முத்தமிழ் விரும்பிக்குத் தெரிகிறார்கள். குழந்தையும் தெய்வமும் ஒன்று என்ற ஒன்றை வாக்கியத்தை வைத்துக் கொண்டு, மிக அழகான கவிதையை அவரால் ஆக்க முடிந்திருக்கிறது. 'பூமர நிழல்' என்ற நீள்கவிதையைப் பற்றி தனி ஆய்வு நூலே எழுதலாம். ஏழு சித்திரங்களாக விரியும் அக்கவிதை, வாழ்வின் நெருக்குதலையும் நினைவுகளின் இழைகளையும் ஒரு சேரக் காட்டுகின்றன. அன்பே உருவான என்று நான் இப்பதிவின் ஆரம்பத்தில் எழுதியிருக்கும் வாக்கியத்தை நினைவில் வைத்துக் கொண்டு அக்கவிதையை வாசித்தால், எல்லோரிடமும் முத்தமிழ் விரும்பி தன்னைப் பார்த்திருப்பது தெரியும். தன்னைப் பிறரில் பார்த்ததைப் போலவே பிறரையும் தாமே பார்க்கும் இயல்பு அவருக்கு வாய்த்திருக்கிறது. அவருக்கு மட்டுமே வாய்த்திருக்கிறது என்று கூடுதல் அழுத்தத்தையும் கொடுக்கத் தோன்றுகிறது.

பூமர நிழலிலுள்ள கவிதைகளில் பெரும்பகுதி, தொண்ணூறுகளில் முத்தமிழ் விரும்பி எழுதியவை. சமூகம் சார்ந்தும் அன்றாட நிகழ்வுகள் சார்ந்தும் அவருக்குத் தோன்றியவற்றை பகிர்ந்திருக்கிறார். எழுதப்படும் அல்லது எழுதப்பட்ட கவிதையில் காலம் இல்லாமல் போவது குறித்து, நவீன விமர்சகர்கள் பலபேர்

ஆய்வு செய்திருக்கிறார்கள். காலம் அவசியமென்றும் காலமே கவிதைகளுக்கு இடைஞ்சலென்றும் பலவாறாக வந்துள்ள ஆய்வு முடிவுகளில் முத்தமிழ் விரும்பியின் கவிதைகள், காலமே அவசியமில்லை என்கிற தரப்பை ஆதரித்துள்ளன. காலத்தை ஒட்டியோ, காலத்தைத் தாண்டியோ கவிதைகள் எழுதப்பட வேண்டும் என்பதற்கு மாற்றாக, காலத்திற்கும் நிற்கும் கவிதைகளாக இவற்றைக் கருதலாம். நிகழ்வுகளின் நீட்சியாக கவிதைகளைப் பார்க்காமல், கவிதைகளையே நிகழ்வாக ஆக்கும் முயற்சியை மேற்கொண்டிருக்கிறார். 'நினைந்து' என்னும் தலைப்பில் அமைந்த கவிதை, முக்காலத்திற்கும் பொருந்துவது.

தேவையற்ற ஓசைகளையும் அளவுக்கு அதிகமான வார்த்தைகளையும் முற்றாக விலக்கியிருக்கும் முத்தமிழ் விரும்பி, கவிதைகளை நிகழ் தருணத்தின் சாட்சியமாக்கியிருக்கிறார். "இதற்கு முன்பும் இருந்தேன் / இதற்குப் பிறகு இருப்பேன் / இருந்து கொண்டிருக்கிறேனா? தெரியாது" என்றொரு கவிதையை ஜென் கவிதை களின் பாதிப்பில் எப்போதோ நான் எழுதியிருக்கிறேன். ஒரு நல்ல படிமத்தையோ குறியீட்டையோ தரிசித்து விடும் மனம், அதைப் போலவே எழுதிப் பார்க்கும் ஆவலில் எதையாவது எழுதுவது இயற்கை. தற்செயலாக நிகழக் கூடியதும் அதுதான். எனக்கு மட்டுமல்ல. எல்லாப் படைப்பாளிகளுமே இம்மாதிரியான தாக்கத்திற்கு உள்ளாகி இருப்பார்கள். ஒன்றின் தொடர்ச்சியை இன்னொன்றாக்கி அதன் வழியே எதையோ கண்டடையும் முயற்சியில் சிலர் தோற்றும், சிலர் அதனாலேயே ஜெயித்தும் விடுவதுண்டு. முத்தமிழ் விரும்பி இந்தப் பிரயத்தனங்களிலெல்லாம் ஈடுபடுபவராகத் தெரியவில்லை. அவருக்கு வாய்த்திருக்கும் கவிமனம், அவருடைய வாசிப்பினாலும் ஆர்வத்தினாலும் விளைந்தவை அல்ல. சதா மனசுக்குள் பேசிப் பேசி ஒரு வாக்கியத்தை உருவாக்குகிறார். ஒரு கட்டத்தில் அந்த வாக்கியத்திலும் அந்த வாக்கியத்திற்காகவும் வாழத் தொடங்குகிறார். பின் அந்த வாக்கியத்தை நம்மிடம் கடத்தி, அதே வாழ்வை அதே உணர்வுகளைச் கிளரச்செய்திருக்கிறார். இது, வித்யாசமான கவிதை அணுகுமுறை என்றே எனக்குப்படுகிறது. ஏற்கனவே இருக்கும் கித்தானில் வண்ணங்களை பரப்பி ஓவியத்தை உருவாக்காமல், தம்மிடமுள்ள வண்ணங்களின் சிதறல்களைக் கொண்டு ஓவியம் தீட்டுவது போன்ற காரியமிது. நம்முடைய புத்திக் கூர்மையையும் நம்முடைய புரிதலையும் கொண்டே நமக்கு ஒருகவிதையைத் தருகிறார். அக்கவிதை எவ்வளவு சிறப்பென்றால், அது நம்முடைய சிறப்பைப் பொறுத்தது.

ரசனை மட்டமும் அறிவு மட்டமும் இணையும் புள்ளியை அவர் கவிதைகள் காட்டுகின்றன. வெறும் வாசிப்பனுவத்திற்கு கவிதை எழுதாமல், அனுபவத்தை நோக்கி கவிதைகளில் வழியே நம்மைப் பயணப்பட வைக்கிறார். மிகை உணர்வுகளில் திளைத்து இப்படியான கருத்துக்களை நான் வைக்கவில்லை. தவிர, முத்தமிழ் விரும்பியின் கவிதைகள் மிகை உணர்வுகளை முற்றாக நிராகரிப்பவை. வியத்தலும் இலமே என்கிற முழக்கத்தை வைத்துக் கொண்டு தான் எல்லாவற்றையும் அணுகியிருக்கிறார். அப்படியிருக்கையில், அவர் குறித்தும் அவர் கவிதைகள் குறித்தும் மிகையாக நான் சொல்லி ஆகப்போவது ஒன்றுமில்லை. சிறுகவிதைகளுடன் புழங்கிய அவர், ஒரு நேர்கோட்டு எல்லையைப் பூமர நிழலில் தொட்டிருக்கிறார். அதுவே அவருடைய எல்லையில்லை. "சொன்ன போதெல்லாம் விடைபெறவில்லை / விடைபெறும் போது சொல்லவே இல்லை" என்றொரு கவிதை இந்நூலில் இடம் பெற்றிருக்கிறது. வார்த்தைகளை மடக்கிப் போட்டதுபோல் தோன்றலாம். ஆனால், அதை ஓர் அனுபவத்தை வெளிப்பாடாக துயரத்தின் செய்தியாக புரிந்து கொண்டால், நாமே மடங்கிவிழ நேரும். ஒரு கவிதை'யின் ஆகப்பெரும் சிறப்பாக நான் கருதுவது, யாருடைய கவிதையாக இருந்தாலும், அது நமக்குள் என்ன மாதிரியான உணர்வை உண்டு பண்ணுகிறது என்பதைப் பொறுத்துத்தான் ஏற்கவோ நீக்கவோ செய்வேன். அதே வாழ்வியல் எனக்குக் கிட்டாமல் போயிருந்தாலும் பரவாயில்லை. அந்தக் கவி-தையின் வாயிலாக 'எதையேனும் நான் பெறுகிறேனா என்பதை உத்தேசித்தே ரசிக்கத்

தொடங்குவேன். முத்தமிழ் விரும்பியின் பல கவிதைகள் என்னை உந்தித் தள்ளி ஓட வைக்கின்றன. ஓடிக்கொண்டிருந்த என்னை உட்காரவும் வைக்கின்றன. ஏக காலத்தில் இரண்டாகவும் கூட சில கவிதைகள் என்னை சலனப்படுத்துகின்றன. இதைவிட, ஒரு கவிதைக்கு என்ன தேவை?

"முகங்கள்" எனும் தலைப்பில் அமைந்த கவிதையைப் பற்றி திரும்பத் திரும்ப யோசித்துக் கொண்டிருக்கிறேன். ஒரு சாயல் என்பதாக அக்கவிதை முடிகிறது. ஒவ்வொருவரிடமும் நாம் யாரோ ஒருவருடைய சாயலை தேடிக் கொண்டிருக்கிறோம் அல்லது பார்த்துக் கொண்டிருக்கிறோம். முத்தமிழ் விரும்பியின் சாயலில் நான் என்னையே பார்த்துக்கொள்ளும் வாய்ப்பினை இந்நூலிலுள்ள கவிதைகள் நல்கின. அவருடைய கவிதை அணுகுமுறையும் என்னுடைய கவிதை அணுகுமுறையும் வெவ்வேறு என்றாலும், சாயல்கள் ஒத்திருப்பதை உணர்ந்துகொள்கிறேன். மொழியின் தேர்ச்சியிலும் உணர்வுகளைக் கடத்துவதிலும் அவர் பலபடி மேலே இருக்கிறார். நிகழ்வுகளைக் கவிதையாக்குகையில் மிக ஜாக்கிரதையாகவும் நடந்துகொள்கிறார். எனக்கு எந்த முன்யோசனையுமில்லை. நேரடியாக எதையும் எழுதிவிடுவேன். கவிதைகள் அனுபவமாக மாறவேண்டும் என்றெல்லாம் நான் கருதுவதில்லை. ஒருவகையில் இப்படிச் சொல்லலாம். நான் தேடுகிற அல்லது என்னிடம் இல்லாத சாயலை அவர் கொண்டிருக்கிறார். இல்லாத ஒன்றின் மீதான ஈர்ப்புதான் அவரை நான் அதிகமாக நேசிக்கக் காரணமோ? அன்பே உருவான ஒருவரைப் பற்றி எழுதுவதற்கு அன்பைத் தவிரவும் ஒன்றிருக்கிறது. அது என்னவெனில், நாம் அவருடைய சாயலையோ, அவர் நம்முடைய சாயலையோ கொண்டிருப்பதே அது. மழை வரும்போல் இருக்கிறது. இதுவரை பயன்படுத்திய குடையை உடனே தொலைக்க வேண்டிய கட்டாயத்தில் நாமிருக்கிறோம். ஏனெனில், இது நேற்றைய மழையல்ல. இரண்டாவது முறையாக வரும் அதே மழை.

●

பூ மர நிழலின் முதல் பதிப்புக்கு கவிஞர் முத்தமிழ் விரும்பி வழங்கிய கருத்துரை:

தோட்டக் குறிப்புகளும் வழித் துணைகளும்

எழுதுவது என்பது முழுநேர வேலை.
அதற்குத் தொழில் நுணுக்கமும்,
ஒன்றிப் போகும் குணமும், அளவற்ற பொறுமையும்,
சகிப்புத் தன்மையும் வேண்டும்.

- சாமர்செட்மாம்

ஆடலும் பாடலும் நாடகமுமாக என்னை அரங்கேற்றியவர் யார் என்பது என் சுற்றத்திற்குத் தெரியும்; அது தளர் நடைப் பருவம்.

"கன்னலும் செந்நெல்லும் செழித்து வளரும் சோழ வள நாட்டினிலே" என வசனமெழுதி என்னை இயக்கிய ஒரத்தூர் கலியமூர்த்தி ஆசிரியர். பொது அறிவு, வினாடி வினா, வரலாறு என ஆர்வத்தைத் தூண்டிய நேமம் கணேசன் ஆசிரியர் - ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளியில்.

பேச்சு, கட்டுரை, கவிதை, சிறுகதை நாடகம் - தூய அந்தோணியார் மேல்நிலைப் பள்ளியிலிருந்து நகர, ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தில், மாநில, தேசிய அளவில் என்னை நம்பிக்கையோடு அனுப்பி பல பரிசுகளைப் பெறக் காரணமாய் புலவர் செ.ஆசை. அவருக்குத் துணை நின்ற அருட்திரு. பாக்கியநாதன் அடிகளார், திரு. என். ஹரிஹரன், அமல்ராஜ் அப்பாவு - உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிக்காலம்.

10-07-1985 : எனது 'தமிழ்க் காதல்' என்ற சித்திரத்தை எழுத திருச்சிராப்பள்ளி சந்திப்பில் தாள் வாங்கி தந்து எழுதச்சொன்ன கேசவன், சேதா, ராஜமன்னார் மற்றும் தொடக்கப்பள்ளி முதல் என்னைச் சீண்டி மோதிய சிவ. நாகராஜன், ஒரு இருபது நாட்கள் மட்டுமே என்னை மாணவனாக்கிக் கொண்ட தேசியக் கல்லூரி, இயற்பியல் துறை.

04-08-1985 : கோவையில் கல்லூரியில் அன்று காலை நடந்த நேர்காணலில் எனது சான்றிதழ்களைப் பார்த்துப் பரவசப்பட்ட பி.எஸ்.ஜி. நிறுவனங்களின் தலைமை நிர்வாக அரங்காவலர், சென்னைப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் முனைவர் ஜி.ஆர்.தாமோதரன்.

கல்லூரி, விடுதி நாட்களில் 'ராகிங்' மூலமாக என்னைக் கண்டுகொண்ட சீனியர் மாணவர்கள், குறிப்பாக தமிழ் மன்றத்தின் முத்துக்குமார், க.து.இளங்கோ, டெக் இசைக்குழுவின் ப்ளூட் பாலு,

கோமுராஜ், ஆர்கன் ரமேஷ், நாடக மன்றத்தின் 'தக்காளி' சீனிவாசன்.

எனது காவிரி கவிதையைக் கண்டெடுத்து என்னை பூ.சா.கோ. பொறியியற் கல்லூரி தமிழ் மன்ற ஆலோசகர் முனைவர் தெ.பொ.மீ. காமேசுவரன் அவர்களிடத்தில் அழைத்துச்சென்ற 1985 -ம் ஆண்டு முதல் என்னைத் துணையாய்க் கொண்ட அந்த ஊரக்கரை நண்பன்; நுண்கலைகளில், வாசிப்பில் எனது சக போட்டியாளர்களாய் ஈரோடு கு. திருமாறன், செம்பனார் கோவில் எ.ஜி. ஜவஹர்.

கோவை வானொலியின் ஜெ.கமலநாதன், சித்ரலேகா; என்னை ஓடியாடி விளையாட அனுமதித்த கொங்கு மண்டலம், வானம்பாடிகள், குன்றக்குடி அடிகளார், வேதாத்திரி மகரிஷி, சாலை இளந்திரையன், சாலினி இளந்திரையன், சுஜாதா, சிவசங்கரி, பாலகுமாரன், எம்.எஸ்.உதயமூர்த்தி, பதின்கவனகர் இராமையா மகனார், விஜயா மு.வேலாயுதம், பாமரன்; சுழற்கழகங்கள், கல்லூரிப் பேராசிரியர்கள் தி.ரா. நமச்சிவாயம், ஜோஷி, மோகன்தாஸ் மற்றும் கலைவிழா மேடைகள்.

1987-ல் கல்லூரியில் அரங்கேறிய முப்பத்தெட்டு நிமிட நாடகத்தில் நான்கு நிமிடங்களே வந்த என்னை எனக்கு வசனமெழுதிக் கொள்ள சுதந்திரம் தந்த நாடக மன்றச் செயலர் கரூர் நாராயணன்; அந்த நான்கு நிமிடங்களைக் குறிப்பிட்டு மேடையில் பாராட்டிய நடிகர் சிவக்குமார்; முதல் பருவத்தில் வேதியியல் வகுப்பில் பாடச் சொல்லிப் பாராட்டிய பேரா. ஓ.பி. வித்யாகர்; மெட்டுக்குப் பாட்டு, பாட்டுக்கு மெட்டு, பாட்டுக்குப் பாட்டு - என்னோடு இசைக்கணத்தைப் பகிர்ந்து கொண்ட வகுப்புத்தோழன் 'கிட்டார்' முரளி கிருஷ்ணன்.

1989-ஜனவரியில் கல்லூரிகளுக்கிடையேயான பாரதி விழா - கவிதைப் போட்டியில் பாரதியார் பல்கலைக்கழக அளவில் கவிதை முதல்வன் என அறிவித்து எனக்குப் பரிசு கொடுத்த மேடையில் திரு.ம.பொ.சி., கிருஷ்ணபாரதி IAS, தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் ஜெயராமன், மொழியியல் துறைத் தலைவர் முனைவர் கி.கருணாகரன்; நண்பர்களும் மகிழ்ந்தார்கள். அடுத்தவாரம் தஞ்சையில் இருந்து ஒரு கடிதம்: "கவிதை, நாடகம், பாட்டு என்று சுற்றியலையாமல் ஒழுங்காகப் படிக்கவும். இது பொறியியல் பட்டப்படிப்பின் நிறைவாண்டு. இப்படிக்கு அன்புள்ள அம்மா".

1989-ல் மார்ச் 7-ம் தேதி மாலையில் தமிழ் மன்ற நிறைவு விழா. "கவிதைத் தொகுப்பைப் போட்டால் எங்களுக்கு மறக்காமல்

அழைப்பிதழ் அனுப்பி வை" என்று சொன்ன வகுப்பிலேயே தைரியமான பெண் என்று சொல்லப்பட்ட சக மாணவி ஆறாண்டு களுக்குப் பிறகு நல்ல பதவியில் இருந்த நேரத்தில் தற்கொலை செய்து கொண்டதாய்ச் சொன்னார்கள்.

1990-ஜனவரியில் சென்னை ராசகிளி அச்சகத்தில் கவிதை நூலை அச்சிட விலைப்புள்ளி வாங்கி அனுப்பிய நண்பன் காயல்பட்டிணம் தமிழ்ச்செல்வன், எப்போது நூல் வெளிவரும் என்று கடிதம் எழுதிய ராஜபாளையம் சமுத்திரராஜன், பொள்ளாச்சி மயில் சந்திரசேகர், தாம்பரம் எம்.எஸ்.பாரிராஜ். அச்சேறவில்லை; ஆனாலும் அத்தொகுப்பு 'நேற்றின் பாதங்கள்' என்ற தலைப்போடு இன்றும் கோப்பில் உறங்குகிறது.

கணையாழி, முன்றில், தளம், சுபமங்களா, திருச்சி இலக்கியக் கழகம், தஞ்சைத் தமிழ்த்தாய் பேரவை, சுபமங்களா நாடக விழாக்கள், பேரா.சே.இராமானுஜம், பேரா.ஆல்பர்ட், முனைவர் அமுதன்அடிகள் கலந்துரையாடிய இலக்கியப் பட்டறைகள்.

பிற துறை நூல்களை அறிமுகப்படுத்திய தந்தையார், இதழ்கள் வாசிக்கத் தந்த சரபோஜி கல்லூரி மாணவர் மாமா ராஜேந்திரன், பூதலூர் தொடக்கப்பள்ளி நூலகம், தஞ்சை, திருச்சி, மதுரை, கோவை மாவட்ட மைய நூலகங்கள்.

02-07-1992 முதல் மதுரையில் வசித்த நாட்களில் இலக்கிய ஆர்வம் இல்லாவிடினும் நட்புக்காக கருத்தரங்குகள், நூல் வெளியீட்டு விழாக்கள், அரசியல் பொதுக்கூட்டங்கள், திரைப்பட அரங்குகள் என சுற்றித்திரிந்த பொறிஞர் சுரண்டை கோபாலகிருஷ்ணன் மற்றும் மதுரை ரவீந்திரநாத், எழில், வன்மீகநாதன். மதுரை அழகர்கோவில் கோட்டை வாசலில் இருந்து திருச்சி, தஞ்சை, சென்னை, திருவள்ளூர், ஊத்துக்கோட்டை, திருப்பதி, கோவை, ஓசூர் என்று தொடர் பயணங்கள்.

2000 - நவம்பரில் பூமர நிழல் என்ற நூலை வெளியிடலாம் என்று ஒளியச்சு செய்த கவிதைகள் ஏஞ்சல் அச்சுக்கூடத்தில் குமாரபாண்டியனின் கணிப்பியில் காத்துக்கிடக்க, காதல் மனம் கொண்ட காதல் மணம் நான்கு ஆண்டுகளைப் பின்னோக்கித் தள்ளியது. கசப்பேறிய சொந்தங்கள்; வியப்படைந்து விலகிய நண்பர்கள்; காரணம் மதம் பிடித்தாட்டும் யானை மனிதர்கள்.

23-12-1990 காலையில் தென்னாற்காடு மாவட்டம் வளவனூரில் குறு மற்றும் ஆவணப் படங்களுக்கான பட்டறையில் அறிமுகமாகித் தொடர்ந்த நட்பில், "அக்டோபர் 93,

கணையாழியில் சுஜாதா பாராட்டிய கவிஞர், ஏன் உங்களுடைய தொகுப்பை வெளியிடக்கூடாது" என்று உத்வேகப்படுத்தி கோமல்சுவாமிநாதன், ஓவியர் மருது, எழுத்தாளர் பிரபஞ்சன், வண்ணநிலவன், எஸ்.ராமகிருஷ்ணன், வேல. ராமமூர்த்தி, கூத்துப்பட்டறை ந.முத்துசாமி ஆகியோரிடத்தில் அறிமுகப் படுத்தியும் இன்று வரை தொகுப்பு வெளிக்கொண்டு வராததால் என்னோடு ஊடலும் கேலியும் பேசுகின்ற எனது தஞ்சை நண்பர் கவிஞர் இளையபாரதி.

08-03-2002 அன்று நண்பர் ஓசை காளிதாசனால் எனக்கு அறிமுகப்படுத்தப்பட்ட இலக்கியத் தோழர்கள் மற்றும் விமர்சகர்களாய் என்னுடன் பயணிக்கும் கவிஞர்கள் பா.மீனாட்சிசுந்தரம், இந்நூலுக்கு முன்னுரை தந்திருக்கும் தென்பாண்டியன்; இவ்விருவர் இல்லையேல் இன்றும் இத்தொகுப்பு வெளிவந்திருக்க வாய்ப்பில்லை. நாங்கள் இயங்க உந்துதல் தந்தது 19-10-2003 அன்று கோவையில் ஒரு மழைக்கால மாலையில் தொடங்கப்பட்ட நெருஞ்சி இலக்கிய முற்றம் மற்றும் அதன் புளியமரத்தடி சந்திப்புகள்.

என்னை உயரத்தில் வைத்துப் பார்த்திட நாளும் நினைத்திடும் சகோதரர்கள் பேராசிரியர் முனைவர் தே.ஞானசேகரன், வங்கியாளர் த.செயக்குமார், வணிகவரித்துறை நிபுணர் க.பழனிச்சாமி, வருமானவரித் துறை இணை ஆணையர் மா.கிருஷ்ணசாமி IRS.

விரும்பிய புத்தகங்களை வாங்கித் தந்த தந்தை, நினைத்த நேரத்தில் பயணம் மேற்கொள்ள அதிக பணம் தந்த தாயார், பயணப்பெட்டி தயார் செய்து தந்த தங்கை, நான்கு ஆண்டுகளாக என்னோடு சேர்ந்திசை நடத்தும் மழலை யாழ்களாய் தங்கையின் குழந்தைகள் மற்றும் எனதிரு குழந்தைகள், இலக்கியத்திற்கும் நட்புக்கும் நேரம் ஒதுக்கச்சொல்லும் மனைவி; எனது எழுத்தார்வம் புரிந்து துணை நிற்கும் மைத்துனர்,

இப்படி ஒரு பட்டியல் இங்கே இடம் பெறலாமா? இவர்கள் என் தோட்டத்து மலர்களாய்க் குறிப்புகள் காட்டாமல் போயிருந்தால் இருபது ஆண்டுகளுக்கு முன்னரே இறந்திருப்பேன். ஈராண்டுகள் இடையிலே எழுதாமல் இருந்தும் இங்கே 13-10-1990 முதல் 27-12-2004 வரை எழுதப்பட்ட, தேர்ந்த கவிதைகளை மட்டும் தொகுத்துள்ளேன்.

தொகுக்கும் போது தெரிகிறது
தொலைந்த கவிதைகளின் அருமை.

முகாம் : ஒதூர்
30-12-2004

செந்தமிழ் விலம்பி

பூ மர நிழலின் ஆங்கில மொழிபெயர்ப்புக்கு அமெரிக்காவைச் சேர்ந்த மானுடவியலாளர் முனைவர் நிகோல் பெர்கர் வழங்கிய அணிந்துரை.

Dr C. Rajeswari's translation of Muththamizh Virumbi's collection of poems, *The Shade of a Flowering Tree* is a gift to English-speaking readers who are interested in Tamil literature and contemporary poetry. Dr. C. Rajeswari takes care to preserve both the larger feeling and the linguistic structure specific to each poem. Many of the poems are also annotated with short descriptions of the untranslatable place names, Tamil months, and cultural references which are likely to otherwise evade a non-Tamil-speaking reader. As a result, each poem's meaning is not lost in translation, but will, instead, be found by a wide audience of readers unable to access the original Tamil poems.

Dr. C. Rajeswari has taken care to preserve Muththamizh Virumbi's tendency to build towards a final powerful image in the ending lines or stanzas of his poems. This is a difficult task since the sentence structure of Tamil differs greatly from English.The poem "Encounter" illustrates this tendency well, as it gradually builds towards a climactic final stanza. In this poem, the early stanzas establish a sensual mood, invoking each of the senses: smell ("Fading smell of the jasmine"); taste ("the cherry fruits shared"); touch ("kisses gathered on red lips"); hearing ("a husky moan"); and sight ("silence of your smile"). The final lines recount the encounter for which the poem is titled:

I, sliding down

from the zenith,

encounter you

Rising up and up

Through the inclusion of rich, often sensorial, details, the poems in this volume offer the reader various slices of life, which are powerfullydescriptive of both natural environments and lived experiences. Through the poems, we are transported to the landscapes—both geographic and emotional—which the poet has conjured through verse. The length of the poems presented varies considerably, with even the shortest feeling complete, and even the longest maintaining a certain sense of measured literary restraint. Reading the poems, I got the impression that each one contains only the exact amount of words required to get across the intended mood and meaning. "Stagnation" for example, has only four short lines:

One day rain

Needs one week to drain

Lots of things to write

Letter not yet written

These spare lines containinsights about the wider word, which evoke a whole host of mental pictures. The first two lines include broader observations from the natural world—the powerful downpours of the rainy season in Tamil Nadu, and the built environment—the way that water collects on roads and various places, causing frustration to those who must navigate around it not only during the rainstorm, but for the week following. The second stanza links these external events to a personal, interior world, sure to be relatable to any reader: the uncompleted task of writing a letter, which becomes more daunting day by day, as the

list of things to write about never ceases to lengthen. Like the stagnation of the rain is the feeling of stagnation that comes from the unwritten letter. The two realms, the exterior and interior, mirror each other.

In contrast to the contemplative minimalism of "Stagnation," the titular poem, "The Shade of a Flowering Tree," the volume's longest poem, is almost novelistic in its scope, interweaving moving autobiographical recollections with descriptions of the natural landscape and allusions to it historical and cultural significance. The opening stanzas takes care to position the reader in the particular landscape in which the poem is set. Beginning, "In the food affluent Tanjore district, / Of the ancient Chola kingdom," the extensive description of the landscape and its waterways paints a picture of the district in the mind of the reader,before the remainder of the poem personalizes the landscape by linking each of the localities named in the opening lines with a richly detailed memory that reveals the life of its inhabitants. One such memorable description is of the poet's childhood dance performance—at the urging of his father—during a Mariyamman Festival along the banks of the Vennaaru river. He describes the accolades received in the aftermath of his star performance:

> Parents of the school
> Whose kids are the students of
>
> My father, uncle and aunt,
>
> Hold me and pat me.
> Circled my face
> With their fingers and knuckled
>
> The gesture –a ritual
> to drive away the evil eye.

Talcum powder on my face

Wiped off and gone.

Through this single sentimental recollection we learn not only about the poet’s childhood experience, and his family’s position in their community, but also about the people’s beliefs and customs, all beautifully encapsulated in just a few short lines. Throughout the poem, which ultimately memorializes the author’s father and brother-in-law, the poet’s own emotional landscape intertwines with larger historical events, both contemporary (to the time frame of the poem) and very ancient. This is apparent in the following section, in which Muththamizh Virumbi recalls how his father taught him to swim:

“I learnt to swim

With the empty hollow bottle gourds;

As a warrior of Indian army

Took part in the Chinese battle “

In Kollidam and Kuulaiyaaru

During the overwhelming floods;

From this bank to the other

Swam across the river;

Me, the romantic hero Attanathi

Of the twentieth century.’’

In combining these historical and cultural details with intimate recollections, the poem moves easily from the

scale of a single moment, richly described, to the passage of generations, and even dynasties. Another notable poem in the collection, “Tsunami [2004],” recounts that tragic disasterby linking it to ancient historical narratives of the flooding of coastal Tamil kingdoms, while remaining bitterly aware of the specificity of the present:

> Total demolishing in modernity
>
> Those mangroves that lined the coasts
>
> were destroyed by the shrimp farms.
>
> The river beds beside the oceans
> Now turned to ditches of the towns.
>
> Strong hands that row the boats
> to the coasts on the sunrise
> Now bloat as unmoved oars.

Yet while “Tsunami [2004]” and “Shade of a Flowering Tree” link the joys and sorrows of the present to a longer historical past, Muththamizh Virumbi’s poems also capture the kind of intimate, everyday experiences which seem to lie outside of history (or at least, never make their way into history books). These poems serve as a window onto various scenes, each of which is made distinctive through rich details unique to their particular time and place, but which also capture emotions and experiences that transcend any single context. For example, “In Sleep” captures the relatable frustration of insomnia, likely to be familiar to readers anywhere in the world.

> Though the eyes are closed
>
> Sleep plays hide and seek;

Yet the final stanza reveals a scene unique to Tamil villages:

> At a distance
> A drumming sound of udukkai with songs
> Narrating the past and future
>
> Tears this night and the sleep

The notes provided with the poem describe the udukkai (hand drum) and its use, so that even a reader who has never heard one can, through reading the poem, know its purpose and imagine its sound puncturing the peaceful night.

The Shade of a Flowering Tree invites us into the landscapes—both emotional and geographic—described in the poems it contains. With Dr. C. Rajeswari's translation from Tamil to English, the invitation is now extended to a new English-speaking audience. I hope that many readers will accept this invitation and enjoy, as I have, a journey through the poems of *The Shade of a Flowering Tree.*

Dr. Nicole Berger

நூலாசிரியர் பற்றி



முனைவர் செ. இராஜேஸ்வரி மொழி பெயர்ப்பியல் துறையில் முனைவர் பட்டம் பெற்றவர். **புலமை, செந்தமிழ், வளர் தமிழ், ஓங்கு தமிழ் நா.வா.வின் ஆராய்ச்சி** போன்ற ஆய்விதழ்களில் ஆய்வுக் கட்டுரைகள் வெளியிட்டார். **மொழி பெயர்ப்பியல் ஆய்வு** என்ற ஆய்வுக் கட்டுரைகள் அடங்கிய நூல் ஒன்றை 1992இல் வெளியிட்டார். இந்நூல் இணையத் தமிழ் பல்கலைக்கழகத்தின் மின் நூல் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.

1988 முதல் தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளார். *Indian Women–Changes and Challenges, Urban Theology, Vaigai Paripatal, Assisted reproductive technologies and its Impact on Women, Eco Vision and Mission, Bachelor's Study Materials for Social Science [IGNOU], Neuro Ophthalmology Articles* போன்ற பல துறை சார்ந்த பனுவல்களைத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். 1993இல் ஆசியவியல் ஆய்வியல் நிறுவனத்தில் இணைப் பதிப்பாசிரியராகப் [Associate editor] பணியாற்றினார். அப்போது ஜப்பானிய மொழியைத் தமிழில் கற்பது எளிது என்பதை அறிந்து அதற்கான நூல் உருவாக்கும் பணியில் ஜப்பானியப் பெண் யூகோ ஃபுகுரோயியுடன் இணைந்து செயல்பட்டார். அந்த நூல் மூன்று பாகங்களாக வெளி வந்துள்ளது. ஆசியவியல் ஆய்வியல் நிறுவனத்தில் வெளிநாட்டு மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்தார். தமிழ் மாணவர்களுக்கு ஜப்பானிய மொழி இலக்கணம் கற்பித்தார். யுக்கோ சான் அம்மாணவர்களுக்கு ஒலிப்பயிற்சி அளித்தார்.

1986 முதல் சமயச் சொல் அகராதி, எபிரேயம் - தமிழ் அகராதி; கிரேக்கம் - தமிழ் அகராதி உருவாக்கத்திற்காக மக்கள் கல்வி அறக்கட்டளையின் இயக்குனர் மறை திரு.இராபின்சன் லேவி ஐயா அவர்களுடன் இணைந்து இருபது ஆண்டுகள் தீவிரமாகப் பணியாற்றினார். ஈரோடு மகளிர் கலை, அறிவியல் கல்லூரி, திருச்சி ஸ்ரீமத் ஆண்டவன் கலை, அறிவியல் கல்லூரி, மதுரை அமெரிக்கன் கல்லூரி போன்றவற்றில் சில ஆண்டுகள் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றினார்.

2000இல் மதுரையில் அமெரிக்காவின் விஸ்கான்சின் பல்கலைக்கழக மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்தார். அப்போது வெளி நாட்டவருக்கு தமிழ் கற்பிக்கப் பாட நூல் ஒன்றை உருவாக்கினார். அரவிந்த் கண் மருத்துவமனையில் மொழி பெயர்ப்பாளராகவும் வேற்று மாநிலம் மற்றும் வெளிநாட்டு மருத்துவர்களுக்கு, தமிழ் ஆசிரியராகவும் பணியாற்றினார். அப்போது தமிழ் தெரியாத கண் மருத்துவர்களுக்குத் தமிழ் கற்பிக்க Tamil for Non-Tamils என்ற பாட நூலை உருவாக்கினார். இன்றும் அந்தப் பாட நூல் அங்குப் பயன்பாட்டில் உள்ளது. அது போல அங்குச் செவிலியர் பயிற்சி பெறும் இளம் பெண்களுக்கு ஆங்கிலம் கற்பிக்க Easy English என்ற ஆங்கிலப் பாட நூலை உருவாக்கினார். மக்கள் கண்காணிப்பகத்தில் வெளி மாநிலத்தவருக்கு ஆங்கிலமும் வெளி நாட்டவருக்குத் தமிழும் கற்பித்தார்.

தமிழ் கற்கும் வெளிநாட்டு மாணவர்களுக்காக சென்ட்டர் ஃபார் லேங்குவேஜ் ஸ்டடீஸ் [Centre for Language Studies] என்ற பெயரில் தனி மையம் ஒன்றை அமைத்து அவர்களுக்குத் தமிழ் கற்பித்தார்.

எம்.ஜி.ஆர். பற்றி ***"ஒப்பனையும் ஒரிஜினலும் எம்.ஜி.ஆர். 100"*** *என்ற தலைப்பில் விகடன்.காமில் (காம் இணைய தளத்தில்) முப்பது கட்டுரைகள் வெளியிட்டார்.*

அதன் தொடர்ச்சியாக கனடாவில் இருந்து வரும் www.tamilauthors.com என்ற இணைய இதழில் தொடர்ந்து கட்டுரைகள் எழுதினார். எம்.ஜி.ஆரின் ரசிகர் மன்றங்களின் தனித்தன்மை குறித்து ஆங்கிலத்தில் ஒரு நூல் எழுதிவருகிறார். எம்.ஜி.ஆர். பற்றி நூறு நூல்கள் எழுத வேண்டும் என்பது இவர் இலட்சியம். அதில் தற்போது **வெற்றித் திருமகன்** *என்ற பெயரில் தொடங்கும் வரிசையில் 18 நூல்கள் வெளிவந்துள்ளன.*

தஞ்சையைச் சேர்ந்த தமிழ் இலக்கியச் செம்மல் கவிஞர் முத்தமிழ் விரும்பி அவர்களின் பூ மர நிழல், வறட்சியின் பாடல்கள், உன்னொடு உரையாடுதல் காதலின் மொழி, திட்டிவாசல் பெண்ணொருத்தி, மற்றும் தேனடையும் வரலாறு என்ற கவிதை நூல்களை இவர் முறையே **"Shade of the Flowering Tree, Songs of Dryness, Speaking with You, Language of Love, The Flower Moon (A Lady at the little gate) and Honey Hive, Ambrosial Kiss (Editor)",** *என்று ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். இந் நூல்களைச் சென்னை எமரால்டு பதிப்பகம் வெளியிட்டுள்ளது.*

தமிழிலக்கியச் செம்மல் கவிஞர் பொறிஞர் முத்தமிழ் விரும்பி அவர்களின் பூ மர நிழல் மற்றும் திட்டி வாசல் பெண்ணொருத்தியின் தொகுப்புகளில் உள்ளடக்கப் பகுப்பாய்வு மேற்கொண்டு அவற்றைப் ***பூ மர நிழலில் களமும் காலமும் மற்றும் கவிஞர் பொறிஞர் முத்தமிழ் விரும்பியின் பாடுபொருளும் பாசப்பொருளும் [திட்டிவாசல் பெண்ணொருத்தி மட்டும்], என்ற நூல்களையும் '2020 தை மாதத்தில் இன்று' கவிதையில் அடிக்கருத்தியல் ஆய்வு, முத்தமிழ் விரும்பியின் கவிதையில் காதல், முத்தமிழ் விரும்பியின் கவித்திறம்*** *என்ற நூலையும் வெளியிட்டார்.*

பண்பாட்டு ஆய்வு நூல் வரிசை என்ற தலைப்பில் ***பண்பாட்டு நகர்வுகள் [தமிழ் நாட்டில் இருந்து***

ஜப்பானுக்கு], தேவேந்திரன், பெண் தெய்வ வழிபாடு, மருத நிலப் பெண் தெய்வங்கள் *ஆகிய நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.*

சென்னைப் பெருநகராட்சியின் முன்னாள் மேயர் மனித நேயச் செம்மல் சைதை சா. துரைசாமி அவர்களின் சிறப்புத் திட்டங்களும் செயல்பாடுகளும் *என்ற பெயரில் ஒரு நூல் எழுதி வெளியிட்டார். இவர் சத்தியபிரபா என்ற புனைப்பெயரில் எழுதிய சிறுகதைகள்* ***'அமராவதியின் காதல்'*** *என்ற பெயரில் தொகுக்கப்பட்டு அமேசானிலும், அச்சிலும் வெளிவந்தது. நெருஞ்சி இலக்கிய இதழில் இவரது கட்டுரைகள் வருகின்றன. தினகரன் ஜோதிட மலரில் இவர் எழுதிய* ***"என்னோட ராசி நல்ல ராசி"*** *என்ற தொடர் வந்து கொண்டிருக்கின்றது. மாதமிரு முறை வரும் ஆன்மீகம் இதழில் இவரது கட்டுரைகள் தொடர்ந்து வெளிவருகின்றன.*

தஞ்சையில் உள்ள நெருஞ்சி இலக்கிய இயக்கம் இவருக்கு 'சிறந்த மொழி பெயர்ப்பாளர் விருதை வழங்கியது. மதுரை லேடி டோக் கல்லூரி இவருக்கு மொழிபெயர்ப்பு மற்றும் ஆராய்ச்சிக்கான 'பெண் சாதனையாளர்' விருதை வழங்கியது.

உள்ளடக்கம்

1. பூ மர நிழல் தொகுப்பில் 'பெண்'

'பூ மர நிழல்' கவிதை நூலில் கவிஞர் முத்தமிழ் விரும்பி பெண்களைப் பற்றிய சமூக அக்கறையோடும் பொறுப்புணர்ச்சியோடும் பாசத்தோடும் பல கவிதைகள் வடித்துள்ளார். பத்மநாபபுரம், கைக்குட்டை, சௌந்தர்ய லஹரி, அலகிலா விளையாட்டு, பூ மர நிழல் போன்ற கவிதைகள் பெண்களைப் பற்றிய கவிஞரின் கவலையையும் அக்கறையையும் தெரிவிக்கின்றன.

'பத்மநாதபுரம்' கவிதையில் மன்னரின் அந்தப்புரவாசிகளாக இருந்த பெண்களின் நிலை குறித்து ஆழ்ந்த கவலை தெரிவிக்கப்படுகிறது. 'அலகிலா விளையாட்டு' என்ற கவிதை தனது அன்பு மகளின் விளையாட்டை இரசிக்கின்ற கவிதையாகும். 'கைகுட்டை' என்ற கவிதை அம்மா காதலி தங்கை என பலரை பற்றிய அவதானிப்பை வெளிப் படுத்துகின்றது. 'சௌந்தர்ய லஹரி' என்பது சிறுமிகள் கள்ளம் கபடமில்லாமல் வெள்ளை உள்ளத்துடன் பேசுவதையும் கேலி செய்வதையும் விளையாடுவதையும் காட்டுகின்றது. 'குடும்பம்' என்ற கவிதை ஒரு குழந்தை, குடும்பத்தின் தகுதிக் கணிப்பாக விளங்குவதை வெளிப்படுத்துகிறது. பூ மர நிழல் என்ற நீண்ட கவிதை கவிஞரின் தந்தை இறப்பு பற்றிய கவிதை ஆகும். தனது மகள் கணவனை இழந்துவிட்டாள் என்பதற்காக உருகி அழும் தாயின் பாசத்தையும் பெண் குழந்தை வளர்ப்பின் நேர்த்தியையும் விளக்குகிறது. இவ்வாறு பல பரிணாமங்களிலும் பெண்களைப் பற்றிய அவதானிப்புகளை கவிஞர் கவிதை ஆக்கியுள்ளார்.

பத்மநாபபுரம் என்ற கவிதையில் பத்மநாபபுரம் அரண்மனையைக் காணச் சென்ற கவிஞர் அரண்மனையை பார்வையிட அன்று பார்வையாளருக்கு அனுமதியில்லை என்பதை அறிகிறார். அரண்மனையை வெளியில் இருந்து பார்க்கும்போது அங்கு ஓர் அணில் மட்டும் ஆளரவமற்ற அந்த இடத்தில் விளையாடுவது அவரது மனதில் பதிகிறது. இக்காட்சி அணிலாடு முன்றிலை நமக்கு நினைவுறுத்துகிறது. அந்த அரண்மனையில்

சுவர்க் கடிகாரம் சுற்றிய பார்வையில்

எந்த மகாராஜா

எந்தெந்த வீடுகளில்

துயின்றிருப்பார்

என்ற நான்கு வரிகள் மன்னர்கள் காலத்தில் பெண்கள் அவர் விருப்பத்திற்கு ஏற்றபடி அரண்மனையில் குடியமர்த்தப்பட்டதையும் பின்னர் அவர் தனது விருப்பத்திற்கு ஏற்ப ஒவ்வொரு இரவும் ஏதேனும் ஒரு அரசியின் அந்தப்புரத்தில் சென்று தங்கியதையும் கவலையோடு சுட்டிக்காட்டுகிறது. இதனால் பெண்களின் சுயம் அழிக்கப்பட்டு அவர்கள் நுகர்ச்சிப் பொருளாகக் கருதப்பட்ட நிலையின் பரிதாபம் உணர்த்தப்படுகிறது. அப்பாவிப் பெண்களின் மீதான கவிஞரின் கவலையை இந்த நான்கு வரிகளில் காணலாம்.

‘***கைக்குட்டை***’ பழைய வெள்ளை வேட்டியைத் துண்டு துண்டாகக் கிழித்து கைக்குட்டையாகப் பயன்படுத்தும் சிக்கனத் தன்மையோடு தொடங்குகிறது. வாழ்க்கையில் பல்வேறு காலகட்டங்களில் கைக்குட்டை ஏற்படுத்திய நினைவுகளையும் முக்கியச் சம்பவங்களையும் தொடர்ந்து அடுக்குகிறது.

பழைய வெள்ளை வேட்டி

துண்டு துண்டாய்

தாத்தாவின் காற்சட்டைக்குள்

வண்ணங்களில்.

துவைத்து அடுக்கி

ஒவ்வொன்றாய்

எடுத்துக் கொள்ளும் அப்பா

என்று தொடங்கும் இக்கவிதை அடுத்து இன்னொரு சம்பவத்தை விளக்குகிறது.

ஏழாவது படிக்கையில்

சட்டைக் காலருக்குள்

அழுக்குப் படியாமலிருக்க

வைத்துவிட்டு

வகுப்பில் மடித்து விளையாடி

தொலைந்து போனபோது

அடித்து போட்டதும் அம்மா

என்று அம்மாவைப் பற்றிய நினைவுகளையும் பதிவு செய்கின்றது. அம்மாவின் கண்டிப்பு இக்கவிதையில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

நினைவுப் பரிசாக ஏதேனும் ஒன்றை எனக்குக் கொடு என்று கேட்ட பெண்ணுக்கு கைக்குட்டை வாங்கிக் கொடுத்ததும் அவள் அதை நிராகரித்ததும் கைக்குட்டையின் நினைவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேல்நிலை வகுப்பில்

எனக்கு நினைவாக ஏதாவது

என்றவளுக்கு

பர்மா பஜாரில்

வாங்கிக் கொடுக்க

இதுவல்ல தேவையென

நிராகரித்தவள்

ஸ்ரீவில்லிபுத்தூரில் குழந்தைகளோடு

என்ற வரிகள் தன் மீது மையல் கொண்ட பெண் தான் கொடுத்த கைக்குட்டையை நிராகரித்துச் சென்றாள். இப்போது திருமணமாகி குழந்தைகளுடன் ஸ்ரீவில்லிபுத்தூரில் வசிக்கிறாள் என்பதையும் பதிவு செய்துள்ளது. கைக்குட்டை பரிசாகக் கொடுத்தால் காதலர் பிரிந்து விடுவார்கள் என்பது தொன்று தொட்டு இருந்து வரும் நம்பிக்கை. ஆனால் இங்கு கைக்குட்டையை வேண்டாம் என மறுத்த பெண்ணும் பிரிந்து விட்டாள். ஆனால் கவிதையாகி விட்டாள்.

அம்மா, வகுப்பு தோழி ஆகியவர்களுக்கு அடுத்து, தங்கையின் பாசம் வருகிறது.

பயணத்தில்

வெள்ளை கைக்குட்டையை

ஜவ்வாது வாசத்தோடு

ஒற்றிக்கொள்ள

ஒன்றிரண்டு தயாராய்

எடுத்துத் தருவது

நிச்சயமாகியிருக்கும் தங்கைதான்

இவ்வரிகள் அன்புத் தங்கையின் பாசத்தை சுட்டிக்காட்டி நிறைவடைகிறது.

சௌந்தர்ய லஹரி என்ற கவிதையில் அனிதா, சுதா, லாவண்யா, ராதா, சுகன்யா என்ற பெயருடைய சிறுமிகள் அன்போடு விளையாடும் காட்சிகள் கவிதை ஆக்கப்பட்டுள்ளன. அனிதா தொலைக்காட்சி நிகழ்ச்சி நின்று போன சமயத்தில் திரையில் தோன்றும் கருப்பு வெள்ளைப் புள்ளிகளை எறும்புகள் மொய்ப்பதாகக் கூறி சிரிக்கின்றாள். சுதா ரம்மி விளையாட தெரியாதா உங்களுக்கு எனக்கேட்டு கவிஞருக்கு ரம்மி விளையாட சொல்லிக் கொடுக்கிறாள். லாவண்யா முல்லை, ஜாதி, பிச்சி, செண்பகம் போன்ற பூக்களின் வகைகளைக் கற்றுத் தருகிறாள். ராதா தன்னுடைய வீட்டுப்பாட நோட்டில் பல்வேறு வகையில் வண்ணங்களைத் தீட்ட முடியும் என்கிறாள். கவிஞரது தலையசைப்பையும் அவர் விரல் நீட்டி பேசுவதையும் செய்து காட்டி சிரிக்கிறாள் சுகன்யா. இவ்வாறு சிறுமிகளின் உலகம் அழகானதாக விரிகின்றது என்று இக்கவிதை நிறைவு பெறுகிறது.

மலர்களைப் போல சிறுமிகளின் சிரிப்பும் மலர்ச்சியும் அவர்களின் கேலியும் பெரியவர்களுக்குத் தெரியாதவற்றைச் சொல்லித்தரும் முதிர்ச்சியும் இப் பெண்கள் சிறுமிகளாக இருந்தாலும் கூட ஒவ்வொரு கட்டத்திலும் தாயாகவும் தோழியாகவும் ஆசிரியையாகவும் மாறுகி றனர் என்பதைச் சுட்டிச் செல்கின்றன. சிறுமிகளின் பொறுப்புணர்ச்சியும் விளையாட்டுத்தனமும் இக்கவிதையில் அழகுறக் கவிதையாக்கப்பட்டுள்ளன. ஆதிசங்கரர் தேவியைப் பற்றி எழுதிய சௌந்தர்யலஹரி என்ற நூலை நினைவுபடுத்தும் விதமாகக் கவிஞர் இக்கவிதைக்கு பெயர் சூட்டி இருக்கிறார். சௌந்தர்யலஹரி என்ற நூல் தேவியின் உருவ வர்ணனையை கேசாதி பாதமாக வர்ணிக்கும். தேவி அழகு நிறைந்தவள் அருள் நிரம்பியவள் என்ற கருத்து நூல் முழுவதும்

சொல்லப்பட்டிருக்கும். அதுபோலவே இக்கவிதையும் இச்சிறு பெண்கள் அழகும் அறிவும் அன்பும் அருளும் நிறைந்தவர்கள். அவர்களிடம் கள்ளம் கபடம் இல்லை என்ற கருத்தை உறுதிப்படுத்தும் வகையில் தலைப்பும் உள்ளடக்கமும் அமைந்திருக்கின்றது.

தாய் தங்கை தோழி மற்றும் பக்கத்து வீட்டுச் சிறுமிகளைக் கவிப் பொருளாக்கிய கவிஞர் தனது மகளைப் பற்றி **அலகிலா விளையாட்டு** என்ற தலைப்பில் அருமையான கவிதை ஒன்றைப் படைத்துள்ளார். குழந்தை காகிதத்தை கிழித்து விளையாடுவது, அது எழுதி முனை மழுங்கி போன பென்சில்கள், காலணிக்குப் பூசும் கருப்பு மையால் சுவரில் கிறுக்கிய கோடுகள், இணைத்து விளையாடும் நெகிழிப் பொருட்களை இணைக்க இயலாமல் புது வடிவில் இணைத்துப் பார்த்த நவீன வடிவங்கள் என அதன் ஒவ்வொரு செயற்பாட்டையும் கவிஞர் ரசித்துக் கவிதையாக்கியுள்ளார். நிறைவாக அதன் தளர் நடையையும் கவிதையாக்கி

இணைக்கவியலாத

நெகிழிப் பொருட்களின்

விளையாட்டு விரல்களின்

செதுக்கப்படும் புதுச் சிற்பங்களோடு

நடந்து விழும் மகள்

என நிறைவு பெறும் கவிதை குழந்தை என்பது வாழ்க்கையின் மகிழ்ச்சிக் களம் என்பதை உணர்த்துகிறது. குழந்தையும் தெய்வமும் ஒன்று என்பர். அதே பொருளில் அலகிலா விளையாட்டுடையான் என்று அறுபத்தி நான்கு திருவிளையாடல்களுக்காக சிவபெருமானைப் போற்றிய தொடரை எடுத்துக் கொண்டு கவிஞர் தனது குழந்தையின் விளையாட்டை

'அலகிலா விளையாட்டு' எனக் குறிக்கின்றார். குழந்தையின் விளையாட்டுக்கு ஓர் அளவே இல்லை. அது எப்போதும் விளையாடிக் கொண்டே இருக்கும் . இறைவன் தனது விளையாட்டு மூலமாக தன் அடியவருக்கு அருள் பாலிப்பார். குழந்தை தனது விளையாட்டு முலமாக தன்னைச் சுற்றி இருப்பவர்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும். குழந்தையும் இறைவனைப் போன்ற 'அலகிலா விளையாட்டு' உடையது தான். எனவே பொருத்தமான தலைப்பு அளித்திருக்கிறார் கவிஞர்.

'குழந்தைகள் தங்களுக்கான வேற்றுலகத்தை உருவாக்கி விளையாடும் ஆற்றல் மிக்கவர்கள். அவைகள் மாந்திரீக உலகிற்குள் நாம் எவரும் அனுமதி சீட்டற்றவர்களே . ஆனால் ஒரு கவிஞன் மட்டுமே தனக்கான பிரத்யேக ஜன்னலைத் திறந்துகொண்டு எட்டிப்பார்க்க முடிகிறது.'என்று தென்பாண்டியன் கவிஞர் முத்தமிழ் விரும்பியின் குழந்தை கவிதைகளின் அழகையும் அவை தரும் ஆனந்தத்தையும் பாராட்டுகிறார்.

குடும்பம் என்ற கவிதையும் குழந்தையின் மகத்துவம் பற்றி பேசுகிறது. ஒரு குடும்பத்தில் எத்துனை சிக்கல்கள் இருந்தாலும் அங்கு ஒரு குழந்தை மட்டும் வந்துவிட்டால் அனைவரது நாட்டமும் குழந்தையின் பக்கம் திரும்பி விடும் என்பதை விளக்கும் கவிதையில் அதன் சிரிப்பை கனிக்கு நிகரானதாக்கி

அன்பை வளர்க்கும்

காதலின் சூத்திரம்,

குழந்தையின் கனிச் சிரிப்பு

என்கிறார். குடும்பத்தில் நடந்த காதல் கல்யாணத்தின் கசப்பையும் போக்கி புதிய மலர்ச்சியைக் கொண்டு வரும் சிறப்பினைப் பெற்றது என்பதை

கண்ணீரும் மழலையின் குழறலும்

காதலை வளர்த்து

நாட்களைப் பூப்பிக்கும்

என்கிறார். மேலும் இத்தகைய ஆற்றல் மிக்க குழந்தை வந்த பின்பு அவர்களின் குடும்ப வாழ்க்கையில்

நாட்களின் பரமபதத்தில்

கண்ணீர் திவலைகளோடு

சில ஏணிகள்

உண்டு என்பதையும் அறிந்துகொள்ளலாம். குழந்தை குடும்பங்களை இணைக்கும்; குதூகலத்தைப் பெருக்கும்.

கவிஞர் தன கவிதைகளில் பெண்களைத் தாயாக தங்கையாக தோழியாக பக்கத்து வீட்டு சிறுமிகளாக குழந்தையாக [மகளாக] கண்டு ரசித்துப் போற்றிய பண்புகளை கவிதையாக்கி மகிழ்கிறார். அவற்றை அழகிய ஆவணமாகப் பாதுகாக்கிறார். மற்றவர்களும் படித்து ரசிக்க நூலாக்கி உள்ளார். ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கச் செய்து பிற மொழியினரும் நாட்டவரும் வாசித்து இன்புற வழி வகுக்கிறார்.

2. பூ மர நிழல் தொகுப்பில் கோடை காலம்

‘மண்ணிலிருந்தும் மக்களிடம் இருந்தும் ஒவ்வொரு நாள் வாழ்விலிருந்தும் உற்பத்தியானவை முத்தமிழ் விரும்பியின் கவிதைகள். வாழ்வு இயற்கை முதலியவற்றைப் பொதுமைப்படுத்தி கற்பனை விண்ணில் சிறகு விரிப்பதை ஒதுக்கி விட்டு அன்றாட வாழ்வின் தடங்களிலிருந்து கவிதைகளைக் கண்டெடுத்து தன் கூர்மையான மொழிநடையில் நமக்குத் தருகிறார் முத்தமிழ் விரும்பி. தமிழ் கவிதையில் இவரது நுழைவு மிகுந்த மகிழ்ச்சியோடு வரவேற்கத்தக்கது’ என்று பாராட்டிய கோவை ஞானி ‘ஆறுகளோடும் காடுகளோடும் மண்ணோடும் உயிரினங்களோடும் பயிர் வகைகளோடும் நமக்கு என்ன உறவு? இவற்றோடு எத்தகைய உறவில் நாம் அன்று இருந்தோம் என்ற சிந்தனையை முத்தமிழ் விரும்பி இக்கவிதைகளில் எழுப்புகிறார்’ என்றும் குறிப்பிட்டுள்ளார்.

முத்தமிழ் விரும்பியின் கவிதைகள் தஞ்சை மண்ணில் இருந்து மலர்ந்தவை. காவிரி நதி தீரத்தில் இருந்து முகிழ்த்தவை. எனவே அவை கிராமிய வாழ்க்கையின் சிறப்புக்களை சுட்டிக் காட்டுகின்றன. நகர வாழ்க்கையின் போலித்தனத்தையும் செயற்கைத் தன்மையையும் குத்திக் காட்டுகின்றன. இக்கட்டுரையில்

கிராமத்தில் வெயில் காலம் ஏற்படுத்தும் மாற்றங்களையும் தவிப்புகளையும் கவிஞர் முத்தமிழ் விரும்பி கவிதைகளாக வார்த்திருப்பதைக் காணலாம்.

கோடைக் காட்சிகள்

சிற்றூர்களில் வெயில் காலத்தில் கோடைப் பந்தல் என்று ஒரு ஓலை பந்தல் வீட்டுக்கு முன்பு போடப்பட்டிருக்கும். இதனால் வெயிலின் சூடான கதிர்கள் வீட்டிற்குள் நுழையாமல் கொஞ்சம் நிழல் கிடைக்கும். இக்காலகட்டத்தில் கிணறுகள் வற்றிப் போகும். சித்திரை மாதப் பிறப்பன்று பொன்னேர் பூட்டி உழும் மரபு கிராமங்களில் உண்டு. இம்மாதத்தில் கோடை கடுமையாக இருப்பதால் குளங்களில் நீர்ப் பரப்பு குறைந்து விடும். சிறுவர்கள் சேற்றில் மீன் பிடித்து வருவார்கள். சிலர் தம்முடைய நிலங்களில் சொட்டு பாசனம் ஏற்பாடு செய்திருப்பார். வறண்ட நிலங்களில் ஆடு மேய்ப்பவர்கள் ஆடு மாடுகளுக்கு புல் இல்லாமல் மழை சிறிதாவது பெய்யாதா என்று வானத்தை ஏக்கத்துடன் பார்ப்பார். ஆடுகளுக்குப் புல்தரை வேண்டுமே என்று வருந்துவர். மழை இல்லாமல் வறட்சி உண்டாவதால் மனிதர்களுக்கும் தவிப்பு உண்டாகிவிடும் கோழிகள் சீக்கு பிடித்து ஒவ்வொன்றாக சாகும். அதற்குச் சொட்டு மருந்து கொடுப்பதற்காகக் கால்நடை மருத்துவர்கள் கிராமங்களுக்கு வருவார்கள்.

பள்ளிகளில் விடுமுறைக் காலம் என்பதால் பிள்ளைகள் பல்லாங்குழி தாயம் நொண்டியாட்டம் விளையாடுவது உண்டு. மரங்கள் இலைகளை உதிர்த்து குச்சி குச்சியாக நிற்பதால் பனைமர நிழலில் உட்கார்ந்து மணலைக் கூட்டாஞ்சோறு ஆக்கி பிள்ளைகள் விளையாடுவார்கள். மரங்களின் வேர்கள் கூடக் காய்ந்து கிளைகள் உலர்ந்து தோன்றும். ஊருணிகளில் நீர் வற்றிவிடும். ஆனால் இந்த வறட்சியிலும் கூட

செம்பருத்திப் பூக்கள் அழகாக சிவப்பாகப் பூத்து வாழ்க்கையில் விவசாயிகளுக்கு ஒரு நம்பிக்கையைக் கொடுக்கும். இதுபோன்ற காட்சிகளை எல்லாம் கவிஞர் முத்தமிழ் விரும்பி தன்னுடைய கவிதையாக்கிக் கொடுக்கின்றார்.

வேனில் பந்தல்

வெயில் காலத்தில் வெயிலின் கொடுமை தாள முடியாமல் வீட்டிற்கு முன்பு போடப்பட்டிருந்த ஓலை பந்தலுக்கு முன்பு வீட்டு வாசலில் தங்கை அதிகாலையில் கோலம் போட்டு இருக்கிறாள். மதியத்தில் அந்த பந்தலுக்குள் கோரைப் பாயை விரித்துப் படுக்கின்றனர். கோரைப் பாய் வெயிலுக்கு குளிர்ச்சியாகவும் மழைக்கு வெது வெதுப்பாகவும் இருக்கும். அவ்வாறு படுத்துத் தூங்கும் போது பந்தலின் கீற்று வழியாக சூரியனின் ஒளி வளையம் வளையமாக பூமியில் விழுகின்றது. பந்தல் காலில் கூடு கட்டியிருக்கும் கறையான்களைக் கோழிகள் கொத்தித் திண்கின்றன. பந்தலின் குறுக்குக் கம்பு மீது நின்று காகம் கரைகிறது. இதனால் விருந்தினர்கள் வரக்கூடும்; சில வேளை தபால்காரரர் வந்து ஒரு கடிதத்தை தந்து விட்டுச் செல்வார்.

ஓலைப்பந்தலுக்குள் வருவோர் குனிந்து வராததால் மேலே இருந்த மூங்கில் கம்பில் பலர் முட்டிக்கொள்வதுண்டு. அப்போது அங்குச் சாய்வு நாற்காலியில் படுத்திருக்கும் தாத்தா அவர்களுக்காக வருத்தப்பட்டு ‘தலையை நன்றாக அழுத்தித் தேய்த்து விடுங்கள்’ என்பார். பல்லாங்குழி, தாயம், நொண்டி விளையாடும் சிறுமிகள் வெயில் அதிகமான பிறகு விளையாடுவதில்லை. அவ்வாறு வாசலில் விளையாடும் பிள்ளைகள் இல்லாத வேளையில் மூச்சிரைக்க ஓடி வரும் நாய் பந்தல் காலில் பின்னங்காலைத் தூக்கி நிற்கும். இந்த நாயை விரட்டுவதற்காக அங்குத்

தாழ்வாரத்தின் மூலையில் ஒரு மூங்கில் கழியை சார்த்தி வைத்திருப்பார்கள். இத்தகைய காட்சிகளை **பந்தல்** என்ற கவிதை விளக்கிச் செல்கின்றது. பந்தலுக்குள் என்னென்ன நடக்கும் என்ற பட்டியல் கவிதையாக உருப்பெற்றுள்ளது.

'பந்தல்' கவிதையின் வெற்றி அதன் சரளமான ஆற்றோட்டமான் நடை ஆகும். படிக்கத் தொடங்கியதில் இருந்து எங்குமே நிற்காமல் இறுதி வரை வாசிப்போரை இழுத்து சென்றுவிடும். காட்சிகள் ஒன்றன் பின் ஒன்றாகப் படக் காட்சி போல விரியும். இக்கவிதை காணொளியாக படம் எடுக்கப்பட்டு காட்டுவதற்கு மிகவும் பொருத்தமான காட்சியமைப்பை கொண்டுள்ளது. கவிதையில் காட்டப்படும் நிகழ்ச்சிகளை ஒன்று இரண்டு என்று வரிசைப்படுத்தி செல்லலாம்.

வீட்டின் முன்னே

கோடைக்குபோட்டது

ஓலைப் பந்தல்

- தங்கை போட்ட

  அதிகாலை கோலத்திற்குக்

  குடையாகும்

- மதியத்தில்

  கோரைப்பாயின் தூக்கத்தில்

  திண்ணைஏறி

  தேகம் சுடுகின்ற ஒலி வளையங்கள்

- பந்தல் காலில்

  நீள் கூடு கட்டும்

  கறையான்கள்

  கோழிக்கு விருந்தாகும்

- குறுக்கு கழி மீது

  கரையும் காகம்

  வராத விருந்தாளிகளை

  நினைவில் காட்ட

  தபால்காரர் என்றாவது

  தருவார் கடிதம்

- மூங்கிலில் தலை தட்டி

  உயரம் தணிந்து போகும்

  விருந்தினரை அழுந்தத்

  தேய்த்து விடச் சொல்லும்

  சாய்வு நாற்காலித் தாத்தா

- பல்லாங்குழி தாயம் நொண்டியாட்டம்

  விளையாடும் சிறுமியர்

  இல்லாத பொழுதில்

  மூச்சிரைக்க ஓடி வந்து

  மூன்று கால் தரையிறுத்தி

பந்தற்காலில்

பின்னங்கால் தூக்கும்

நாய் விரட்ட

- *மூங்கில் கழியொன்று*

இருக்கும் தாழ்வாரத்தில்

பந்தலில் தோன்றிய காட்சி வருணனை கடைசியில் சார்த்தி வைக்கபப்ட்டிருக்கும் மூங்கில் கழியில் வந்து நிற்கிறது. அருமையான கிராமியக் காட்சி ஒன்றை விவரிக்கும் ஓவியக் கவிதை இது.

சித்திரை வெயில்

புதிது *என்ற கவிதை கோடையின் கொடுமையை விவரிக்கின்றது. சித்திரை பிறந்த பிறகு மழை இல்லாத காரணத்தால் நஞ்சை வயல்களில்*

அடி நீர் எடுத்து

வேர் கண்டு

துளிரச்

செய்யும்

சொட்டுப் பாசனம்

அவ்வேளையில் மழைக்காக ஏங்கி நிற்கும். புல்தரைகள் அங்கு

ஆடுகளை ஒட்டிய ஒரு மூதாட்டி

கண் இடுக்கி

சூரியனில் நேரம் பார்க்கிறாள்.

விரல்களின் மறைப்பில்

மழை வருவதற்கான அறிகுறியே தென்படவில்லை.

புது சித்திரையின் நிறைவில்

இன்னும் எத்தனை நாட்களில்

கனமாய் வரும் கோடை மழை?

என்ற கேள்வி எல்லோர் மனதிலும் எழுகின்றது. மழை பெய்து புல் பூண்டுகள் தழைத்தால் மட்டுமே ஆடு மாடுகளுக்கு இரை கிடைக்கும். ஆடுமாடுகளுக்காக் இரங்கும் அன்புள்ளங்கள் கிராமங்களில் வாழ்வதைக் காட்டும் ஜீவ காருண்யக் கவிதை இது. கிராம்னகளில் கால்நதெளஇகலெ செல்வமாகப் போற்றப்படுவதால் அவற்றின் வளமும் செழிப்பும் முக்கியமாகிறது.

சேற்றுக்கால் செல்வர்கள்

*‘**புத்தாண்டுப் பிறப்பில்**’ என்ற மற்றொரு கவிதை, கோடைக்காலம் ஆரம்பித்ததும் கோயில் குளத்தில் நீர் மட்டம் குறைந்து விட்டது. வெள்ளத்தனைய மலர் நீட்டம் என்று வள்ளுவர் சொன்னது போல குளத்துத் தாமரைகள் உயரமான நீர்மட்டம் வேண்டித் தள்ளாடுகின்றன. மாலையில் மலரும் அல்லி மலரின் இலைகள் பகலில் சுடுநீரில் வெப்பத்தால் தகிக்கின்றன. தண்ணீர் வற்றியதால் கெண்டை மீன்கள் சில மேல்மட்டத்திற்கு வந்து நீந்துகின்றன. சேற்றுக்குள் மீனை அளைந்து தேடிப் பிடிக்கும் நடராசனுக்கு நேற்று சில விரால் மீன்கள் கிடைத்தன.*

வேலாயுதம் என்பவன் ஆடிப் பெருக்கின் போது நுரைத்துப் பெருகிவரும் வெண்ணாற்றில் வலை போடுவதற்காக வலைகளை செப்பம் செய்து கொண்டிருக்கிறான். இரண்டு வருடத்திற்கு முன்பு பஞ்சாயத்து இரண்டு பட்டதால் விவசாயம் செய்யாமல்

தரிசாகப் போட்ட நிலத்தில் இந்த புதுவருடப் பிறப்பன்று பொன்னேர் பூட்டி உழுகிறார் முன்னாள் மாவட்டச் செயலாளரான அரசேந்திரன். மேலத் தஞ்சையின் சேற்றுக் கால் செல்வர்கள் கல்லணை கால்வாய் நீர் வரத்தினால் வாய்க்கால் வரப்புகளை வெட்டிச் சரி செய்கின்றனர் என்று கோடை காலத்தில் வேளாண் பணிகள் தொடங்கி விட்டதை இக்கவிதை உணர்த்துகின்றது.

எரிக்கும் வெயிலிலும் கோடை காலத்தில் சிறுவர்களும் பெரியவர்களும் என்னென்ன வேலைகளைச் செய்து கொண்டிருக்கின்றனர் என்ற விளக்கம் கிடைக்கிறது. நிறைவுப் பகுதியில்

கல்லணைக் கால்வாயில்

வேலைக்கு அரிசி

நல்ல நாளதுவுமாய்

வாய்க்கா வரப்பு வெட்டி

காலில் கொப்புளத்துடன்

நீர்க் குழாயில் ஈரிழைத்துண்டை

நனைத்து மேனி தடவும்

மேலத் தஞ்சையின்

சேற்றுக்கால் செல்வர்கள்

என்று வேளாண் குடிமக்களின் கடும் உழைப்பு போற்றப்படுகிறது; சேற்றில் இறங்கி காலில் கொப்புளம் வரும் அளவுக்கு உழைக்கும் இவர்களே இந்நாட்டின் உண்மையான செல்வர்கள் ஆவர். இக்கவிதை தஞ்சாவூர்த் தமிழ் மண்ணில் கோடைக்காலத்தின் கடும்

வறட்சி மாறி வரும் மண்ணின் மனம் ஆகியவற்றைக் காட்சிப்படுத்துகிறது. கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதைகளில் ஒரு சொல் கூட வெற்றுச் சொல் இடம் பெறாது. இக்கவிதையை அவர் சொல்லோவியமாகத் தீட்டியுள்ளார்.

கிணறுகளில் கூடு கட்டும் குருவிகள்

கோடை காலத்தில் கிராமக் கிணற்றில் தண்ணீர் மட்டம் இறங்கியதால் குருவிகள் கூடு கட்டாமல் எங்கோ பறந்து போய்விட்டன. மழை பெய்து தண்ணீர் மட்டம் ஏறினால் வைக்கோல்களை எடுத்துக்கொண்டு வந்து கிணற்றுப் பொந்துகளில் குருவிகள் கூடு கட்டுகின்றன. அவை கூடு கட்டும்போது அந்த வைக்கோல் சிதறல்களால் தண்ணீர் எல்லாம் குப்பையாகி விடுவதைக் கண்டு அந்த நிலத்துக்கு சொந்தக்காரரான தாய் இந்தக் குப்பைகளை அப்புறப்படுத்த வேண்டும் என்கிறார். ஆனால் நீர் மட்டம் குறைந்ததும் குருவிகளைக் காணவில்லை. பெரியவர்களும் அதை மறந்து விடுகின்றனர். மீண்டும் மழை பெய்ததும் இந்தக் குருவிகள் எங்கிருந்தோ வந்து கிணற்றுப் பொந்துகளில் கூடு கட்டி கிணற்று நீரில் தங்கள் முகம் பார்த்து மகிழ்கின்றன.

கேணிக்குள் வாளி விட்டு

நீரள்ள

முயலுகையில்

உள்ளிருந்து பறக்கும்

குருவிகள் இரண்டு

எனத் தொடங்கும் இக்கவிதை

மழை நாளில்

நான்கைந்து

படிக்கட்டுப் பொந்துகள் மூழ்க

கூடொன்று மிதந்து

அடுத்து வந்த நாட்களில்குருவிகளின் நினைவு

இல்லாமல் போனது

கூட்டைப்போல

இறங்கிய நீரோட்டம்

கோடை சொல்லும்

என கோடை காலத்தில் குருவிகளின் நிலை குறித்தும் கவிஞர் அவதானித்துப் பாடியுள்ளார்.

இளைப்பாறல் என்ற இக்கவிதை கிராமத்துக் கவிதையாகத் தோன்றினாலும் ஒரு குறியீட்டுக் கவிதையாகத் தெருவோர வாசிகளைக் குறிப்பதாகக் கொள்ளலாம். மழைக் காலத்தில் காணாமல் போகும் அவர்கள் வெயில் காலத்தில் திரும்பவும் வந்து துணிகளையும் ஃபிளக்ஸ்களையும் வைத்து ஒரு கூடாரம் போட்டு கொள்கின்றனரே என்ற எண்ணத்தையும் நம் மனதிற்குள் கொண்டுவருகின்றது. இருப்பினும் இளைப்பாறல் என்ற கவிதை காட்டும் குருவியும் மனிதனும் இவ்விருவருக்கும் பொதுவாக இருக்கும் கிணறும் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையே உயிர்களுக்கு இன்பம் தரக்கூடியது என்பதை உணர்த்துகின்றது.

கோடை காலத்தில் சித்திரை மாதத்தில் பின் ஏழு முன் ஏழு என்று சொல்லும் வகையில் சித்திரை மாதத்தின் கடைசி ஏழு நாட்களும் வைகாசி மாதத்தின் முதல் ஏழு நாட்களும் கத்திரி நாட்கள் என்றும் அக்கினி

நட்சத்திரம் என்றும் வழங்கப்படும். அந்த 14 நாட்களும் வெயில் மற்ற நாட்களை விட மிகக் கொடூரமாக இருக்கும். இந்த கத்திரி நாட்களில்

வீட்டைச் சுற்றிலும்

வேர்கள்

கூரை எங்கும் உயிரற்ற கிளைகள்

சுவர் நடுவே இழைக்கப்பட்ட மரங்கள்

வானில் மட்டும் பூக்கள்

குளம் எங்கும் தாகம்

வாழ்ந்தோர் சொன்னது.

ஊர் நடுவே ஊரணி

எனத் தொடங்கும் கவிதை கோடையின் தாக்கம் எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்து இருப்பதை உணர்த்துகின்றது. தரையில் புல் பூண்டு பூ இலை எதுவும் தென் படவில்லை. ஆனால் வானில் மட்டும் நட்சத்திர பூக்கள் இரவில் தெரிகின்றன என்ற முரண் சுவை கவிதையின் வெப்பத்திலும் தென்றலை அழைத்து வருகின்றது.

இக் கவிதையின் இடையில் காதலும் வந்து கை கோர்த்துக் கொள்கிறது.

இன்று நல்ல வெயில்

புழுக்கம்

மாலையில்

வரலாம் மழை என்றாய்

நாளை வருமா

நட்பின் நிழல்

என்ற வரிகள் மாலையில் மழை வரலாம். ஆனால் இன்று விட்டு விட்டால் நாளை நட்பின் நிழல் நம் கூட வருமா? எனவே நட்பிற்கு அடித்தளம் இடுவது இன்றைய நம் முக்கியக் கடமை ஆகும் என்று வெப்பத்தின் தகிப்பை நமக்கு வேறு விதமாக சுட்டிச் செல்கின்றன.

கிராமமும் நகரமும்

கிராம வாழ்க்கையையும் நகரத்தையும் இணைத்து ஒரு பகுதி காணப்படுகின்றது. நகரம் சில நாட்களுக்கு முன்பு வரை அதிக வெப்பமாக இருந்ததாகத் தெரியவில்லை. ஆனால் இப்போது இயற்கையை விட்டு நகரம் வெகு தொலைவிற்குப் பயணப்பட்டுப் போய்விட்டது என்ற உணர்வைத் தருகின்றது.

கிராமக் குடில்களை

வயல்களை புல்வெளியைத்

தாண்டி

ஒத்தையடிப்பாதையைத் தொடர்ந்து

ஒரு எல்லையைத் தாண்டியது.

சில காலம் முன்பு

நகர் என்பது

பாலையாய்த் தெரியவில்லை

என்ற வரிகள் இப்போது நகரத்திற்கும் கிராமத்திற்கும் இடையே பெரிய இடைவெளி ஏற்பட்டிருப்பதைச் சுட்டுகின்றன. மேலும்

நேற்றைய நினைவடுக்குகளில்

பச்சையம் கசிய

பால்யம் நனைக்கின்றது

என்ற வரிகள் ஈரமும் பசுமையும் நினைவுகளில் நீங்காமல் கசிந்து கொண்டிருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டியதோடு தொடர்ந்து

வெக்கையைத் தாண்டி

வாசல் கடக்கும் வேளையில்

செம்மையாய் குளிரூட்டும்

வாளி நீர் கண்ட

செம்பருத்திச் செடியின் காடு

என்ற நிறைவுப் பகுதி வெயிலின் கடுமையிலும் செம்பருத்திச் செடி மட்டும் தினமும் ஒரு வாளித் தண்ணீரில் பசுமையாக அடர்த்தியாக பூக்களோடு காட்சியளித்தது மகிழ்ச்சியையும் மனநிறைவை அளிக்கிறது. இச்செடிகள் காடு போல வளர்ந்து பூக்காடாக மாறியுள்ளது என்ற ஆக்கப் பூர்வமான சிந்தனையுடன் இக் கவிதை நிறைவடைகிறது.. கவிஞர் முத்தமிழ் விரும்பி கத்தரி வெயிலில் பனை நிழலில் மணலையே அரிசி கறியாக்கி குழந்தைகள் விளையாடினர் என்று கோடையின் கடுமையை குழந்தைகளின் விளையாட்டு மூலமாகவும் சுட்டிக் காட்டுகிறார். இந்தக் கடும் கோடையிலும்

எல்லா விதிகளையும் மீறி

தன் நிறத்தின் செழுமையை

இலைகளின் பின்னணியில்

ஒளிரச் செய்கிறது

செம்பருத்திப்பூ

என்று சிவப்பாக ஒளிரும் பூவின் வாயிலாக நம்பிக்கையை ஊட்டுகின்றார். 'ஒரு பூ என்பது செடியில் கிளைக்கும் வண்ணப் பிரதியாகவும் அழகும் வாசமும் நிறைந்த மென்பொருளாக மட்டுமே நமக்கு காட்சிப்படுகிறது. ஆனால் அது இந்த உலகோடு நிகழ்த்தும் பிரபஞ்ச உரையாடல்களை கூர்ந்து கவனித்து அதன் தரிசனத்தை [மேற்காணும்] இந்த வரிகளில் பதிவு செய்திருப்பதாக தென்பாண்டியன் கருதுகின்றார். இக்கருத்து கவிஞரின் இயற்கை சார்ந்த கவிதைகள் அனைத்துக்கும் பொருந்துவதால் கோடை காலத்தை விவரிக்கும் கவிதைகளுக்கும் சாலப் பொருந்தும்.

3. பூ மர நிழல் தொகுப்பில் குறியீடு

சொற்கள் அனைத்தும் குறியீடுகளே என்றாலும் சொற்பொருள் [DICTIONARY MEANING] அதாவது அகராதி பொருள் தராமல் அத்துடன் தொடர்புடைய வேறு ஏதேனும் பொருளை குறிப்பனவாக இருந்தால் அதனை குறியீடு [symbol] என்கிறோம். லில்லி மலர் அன்னை மேரியின் தூய்மைக்குக் குறியீடாகவும் செர்ரி மலர் ஜப்பானிய வீரர்களின் உயிர்த் தியாகத்துக்குக் குறியீடாகவும் உலகமெங்கும் வழங்கி வருகிறது.. மேலை நாட்டுக் கவிதைகளில் குறியீடு என்பது ஒரு பொருள் அல்லது ஒரு சொல்லாக இருந்து கண்ணுக்குப் புலப்படாத ஏதேனும் ஒரு பண்பு, உணர்ச்சி அல்லது ஒரு கருத்தினைக் குறிப்பதற்குக் கவிதைகளில் பயன்படுகிறது.

புதுக்கவிதைகள் வருவதற்கு முன்பு மரபு கவிதைகளில் **பிறிது மொழிதல்** அணி இன்றைய குறியீடு போலவே செயல்பட்டது

பீலிபெய் சாகாடும் அச்சிறும் அவை

சால மிகுத்துப் பெயின்

என்ற குறளில் மயிலிறகு எடை குறைந்ததாக இருந்தாலும் அதனை அளவுக்கதிகமாக ஒரு வண்டியில் ஏற்றினால் அந்த வண்டியின் அச்சாணி உடைந்துவிடும் என்ற பொருளைத் தருகிறது. இதில் பிறிது மொழிதல் அணி அமைந்துள்ளது. வள்ளுவர் மயிலிறகுக்கு

மட்டுமே இக்குறளை சொல்லவில்லை. மயிலிறகு போல எதுவாக இருந்தாலும் அன்பு, கோபம் போன்ற உணர்ச்சியாக இருப்பினும் கூட அளவுக்கு அதிகமானால் அமிர்தமும் நஞ்சு என்ற கருத்தை உணர்த்தவே வள்ளுவர் இக்குறளை ஆக்கியுள்ளார். இக்குறள் குறியீட்டு நயம் மிக்கதாகும்.

குறியீடு தன்னுடன் தொடர்புடைய ஒரு பொருளையே உணர்த்தும்; ஆனால் படிமம imagery] தனக்கு சிறிதும் தொடர்பில்லாத ஒறு பொருளை, ஒரு பண்பை அல்லது ஒர் உணர்ச்சியை உணர்த்தும் இதுவே படிமத்துக்கும் குறியீட்டுக்கும் உள்ள வேறுபாடு ஆகும்.

Symbol என்ற ஆங்கில சொல் சிம்பலின் என்ற சொல்லிலிருந்து தோன்றியதாகும். சிம்பலின் என்றால் ஒன்றிற்கொன்று தொடர்புடைய என்பது பொருள். அகராதிப் பொருள் தவிர்த்து அதனுடன் தொடர்புடைய வேறு பொருளைக் குறிக்கவே குறியீடுகள் கவிதைகளில் பயன்படுகின்றன. காற்று என்பது 'பழையன கழிதலும் புதியன புகுதலும்' என்ற கருத்தை உணரத்தும் குறியீடாக அமெரிக்க பழங்குடிகள் இடையே வழங்கி வருகிறது. அதுபோல சில குறிப்பிட்ட இனங்களைச் சுட்டவும், கடவுள் அல்லது ஆவிகளைச் சுட்டவும் காற்று என்ற சொல் அங்குப் பயன்படுகிறது. தமிழகத்திலும் காத்து கருப்பு என்பது ஆவிகளைக் குறிக்கப் பயன்படுவதைக் காணலாம். இது போலச் சில குறியீடுகள் சர்வதேச அளவிலும் சில குறியீடுகள் குறிப்பிட்ட இனம், மொழி, மதம், தொழில் சார்ந்தும் வழங்கி வருகின்றன.

உருவகம் *[metaphor] என்பது இரண்டு பொருளையும் தொடர்புபடுத்தி வெளிப்படையாகப் பொருள் தரும். . ஆனால் குறியீடு ஒன்றை மட்டும் வெளிப்படையாகத் தெரிவிக்க மற்றொரு பொருள் மறைமுகமாக உணரப்படும். குறியீட்டில் இந்தக் குறியீட்டுக்கு இதுதான் பொருள் என்று ஓரளவுக்குத்*

திட்டவட்டமாகக் கூறலாம். உருவகத்தில் பயன்படுத்தப்படும் உவமை உவமேயம் இரண்டும் ஒன்றுக்கொன்று முற்றிலும் மாறுபட்டதாகவும் முரண்பட்டதாகவும் இருக்கக்கூடும்.. ஆனால் குறியீட்டில் அவ்வாறு சொல்லும் பொருளும் முரண்பட்டதாக இருக்காது. இரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாக இருக்கும்.

புதுக்கவிதையை 'நவ கவிதை' என்ற பெயரில் எழுதிய மகாகவி பாரதியார் தன்னுடைய மரபுக்கவிதைகளிலும் குறியீடுகளைப் பயன்படுத்தினார். காளி. கண்ணன். குயில் போன்றவை அவர் பயன்படுத்திய குறியீடுகளாகும். குறியீடுகளை பயன்படுத்திவதில் அப்துல் ரஹ்மான், மு. மேத்தா போன்றோர் புகழ் பெற்றவர்கள் ஆவர். மு. மேத்தா எழுதிய அரளிப்பூ அழுகிறது என்ற குறியீட்டுக் கவிதை

பூக்களில்

நானும் ஒரு பூவாய் தான்

பிறப்பெடுத்தேன்.

பூவாகப் பிறந்தாலும்

பொன் விரல்கள் தீண்டலையே

நான் பூமாலை ஆகலையே

முதிர் கன்னியின் திருமணமாகாத பிரச்சனையைக் குறிப்பிட்டது. . இந்த கவிதையில் முதிர்கன்னி என்ற சொல் எங்கும் இடம்பெறவில்லை. முழுக்க முழுக்கக் குறியீடாக இடம்பெற்றுள்ளன.. இக்கவிதை முதிர்கன்னியரின் திருமணமாகாத நிலையை குறியீட்டு உத்தி முறையில் எடுத்துரைக்கின்றது.

குறியீடுகளின் வகைகள்

குறியீடுகளைப் பொதுவாக அதன் உள்ளடக்கக் கருத்தின் அடிப்படையில் இயற்கைக் குறியீடு, தொன்மக் குறியீடு, இலக்கியக் குறியீடு மற்றும் வரலாற்றுக் குறியீடு என்று நான்காக வகைப்படுத்துகின்றனர்.

இயற்கைக் குறியீடு

பூ மர நிழல் கவிதையில் **கதவும் காற்றும், நடைபாதை, உயிர்ப்பு, பாதை** ஆகியன இயற்கைக் குறியீடுகளைக் கொண்ட கவிதைகளாகும்..

காற்றுக்காக கதவை திறக்க

காற்றடித்துக் கதவடைக்க

தடைபட்டுப் போனது

காற்று

என்ற இந்த நான்கு வரிக் கவிதையில் காற்று என்பது வாய்ப்புகளை குறிப்பதாகவும் கதவு என்பது சிறைப்படுத்துதலைக் குறிப்பதாகவும் அமைந்து உள்ளன. காற்றுக்காகக் கதவை திறக்க என்றது ஒருவர் வேலை திருமணம் போன்ற சில வாய்ப்புகள் வர வேண்டும் என்பதற்காகக் கதவை திறந்து வைக்கின்றார். அந்த வாய்ப்புகள் வந்ததும் கதவுகள் அடைத்து கொள்கின்றன. இப்போது வந்த வாய்ப்புகள் அடைபட்டு விடுகின்றன. அதனால் அவரும் அந்த வாய்ப்புகளுடன் முடங்கிப் போகிறார். காற்று அடைபட்டுப் போகிறது. இதற்கு மேல் காற்று [வாய்ப்பு] வர வழியில்லை. ஏனெனில் கதவு அடைத்துக்கொள்கிறது. காற்று கவிதையின் குறியீட்டுப் பொருளை வாய்ப்பு என்பதாக மட்டுமே கருத வேண்டியதில்லை. அவரவர் வாசிப்புக்கு ஏற்ப வேறாவும் கொள்ளலாம்.

*‘காற்றும் கதவும்’ போன்ற கருத்துடைய இன்னொரு கவிதையும் இந்நூலில் உண்டு. ‘**உயிர்ப்பு**’ என்ற தலைப்புடைய கவிதை*

வியர்த்து விறுவிறுக்கும்

வெளியே வந்தால்

தென்றல்

கற்று கொள்வதெல்லாம்

கடைவிரிக்க

இக்கவிதையில் படிப்பு, திருமணம், வேலை ஆகிய புழுக்கத்தில் இருந்து வெளியே வந்து சுதந்திர காற்றை சுவாசிக்கலாம். உள்ளேயே இருந்தால் முதல் கவிதையில் சொன்னது போல கதவு அடைபடும்; முடங்கிக் கிடக்க வேண்டும்; புழுக்கம் அதிகரிக்கும்; வெளியே வந்தால் தென்றல் உண்டு, என்ற வரிகள் தங்களைத் தானே சிறைப்படுத்திக் கொள்வதில் இருந்து வெளியே வந்தால் ஆசுவாசப்படுத்திக் கொள்ளலாம் என்ற கருத்தை உணர்த்துகின்றன.

கற்றுக்கொள்வது எல்லாம்

கடைவிரிக்க

என்ற கடைசி இரண்டு வரிகள் நாம் நம் வாழ்க்கையில் கற்றுக்கொண்ட விஷயங்களை எல்லாம் மற்றவருக்கு நாம் கற்றுத்தர வேண்டும் என்ற பொருளில் இடம் பெற்றுள்ளது. வாய்ப்புகளால் முடங்கிக் கிடக்காமல் உயிர்ப்புடன் இருப்பதற்கு ஒருவர் வெளியே வந்து தென்றலை சுகிக்க வேண்டும். வேலை, திருமணம் போன்றவற்றிற்குள் புழுங்கிக் கொண்டு இருப்பதால் மூச்சுவிடத் திணறி சிலர் உள்ளுக்குள் அடைபட்டு விடுகின்றனர். இவர்களின் வாழ்க்கையைக் குறிப்பாக

உணர்த்துவதே இந்த உயிர்ப்பு என்ற குறியீட்டுக் கவிதையாகும்.

நடைபாதை என்றொரு கவிதையும் இயற்கைக் குறியீட்டுக்கு எடுத்துக்காட்டாக உள்ளது.

இதே பாதையில் தான்

இத்தனை நாட்களும்;

விடுபடலில்

இந்தத் தோட்டமும்

சில பூக்களும்;

பாதையோரத்தில்

பலமுறை கண்ட முட்புதர்கள்.

இக்கவிதையில் இதே பாதையில் இத்தனை நாட்கள் சென்று வந்த ஒரு மனிதரின் பார்வையில் இருந்து இந்த தோட்டமும் சில பூக்களும் விடுபட்டு விட்டன.. ஆனால் பலமுறை அந்தப் பாதையோரத்தில் இருந்த முட்புதர்களை அவர் கண்டிருக்கின்றார்.

நடைபாதை என்ற கவிதை தரும் நேர் பொருளையும் குறியீட்டுப் பொருளையும் காண்போம். நேர் பொருளாவது, இதுவரை இவரது பார்வையில் முட்புதர்கள் மட்டுமே தென்பட்டன.. அதே பாதையில் இருக்கும் தோட்டங்களும் பூக்களும் அவர் கண்ணில் இதுவரை படவில்லை. அவர் முட்புதர்களை மட்டுமே பார்த்துக் கொண்டு போய் வந்து கொண்டிருந்தார். குறியீட்டுப் பொருளாவது, பல நல்ல விஷயங்கள் அவருக்குத் தெரியாமலேயே போய் விட்டன. தீயவை மட்டுமே அவரது மனதை எளிதில் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளன. வாழ்க்கையில் பல எதிர்மறையான விஷயங்கள் நம்முடைய கவனத்தை அதிகம் ஈர்க்கின்றன. இதனால் நாம் மனம் சலிப்படைந்து

வாழ்க்கையில் விரக்தி கொள்கின்றோம். அந்த எதிர்மறை விஷயங்கள் இருக்கின்ற இடத்தில் சில நன்மையான ஆக்கபூர்வமான வாய்ப்புகளும் இருப்பதை நாம் கண்டுகொள்ளத் தவறிவிடுகிறோம்.

மனதுக்கு மகிழ்ச்சி தரக்கூடிய பயன் அளிக்கக்கூடிய பல நல்ல வாய்ப்புகள் நம் கண்முன்னே இருந்தும் நாம் எதிர்மறையானவற்றை மட்டுமே பார்த்துக் கொண்டு அதன் பக்கமே நம்முடைய கவனத்தை திருப்புவதால் மகிழ்ச்சி தரக்கூடியவற்றை நாம் காணத்தவறி விடுகின்றோம். நடை பாதை என்ற இக்கவிதை நம்முடைய வாழ்க்கையின் யதார்த்தத்தை உணர்த்துவதாக அமைந்துள்ளது.

தொன்மக் குறியீடு

பூ மர நிழல் கவிதை நூலில் '**மௌனம்**' என்ற கவிதை தொன்மக் குறியீட்டினைக் கொண்டுள்ளது. இக்கவிதை தீய செயலில் ஈடுபடுவதற்கு முன்பு எதுவும் பேசாமல் தவத்தில் இருப்பது போல கபட வேடதாரிகள் அமைதியாகக் காத்திருக்கின்ற கபட சூழலை விவரிக்கின்றது. இங்கு மௌனம் என்ற தலைப்பு காவியுடுத்திய முனிவரின் கள்ளத்தனத்தைக் குறிக்கின்றது.

காவி உடுத்தி

மான்தோல் விரித்து

கைவிரல்கள்

மாலை ஒன்றை உருட்டிக்கொண்டு

காத்திருக்க

எங்கே மேனகை?

காவி உடுத்தி இருப்பதும் மான்தோல் விரித்து இருப்பதும் கபட சந்நியாசியின் பொய் வேடத்தைக்

குறிக்கின்றன. கைவிரல்கள் மாலை ஒன்றை உருட்டிக்கொண்டிருப்பது தாம் செய்ய நினைக்கும் தீய செயலை மட்டுமே கருத்தில் வைத்து அது குறித்து மட்டுமே தொடர்ந்து சிந்தித்துக் கொண்டிருப்பதைக் குறிக்கின்றது. 'காத்திருக்க' என்ற வரி தக்க சமயத்திற்காக அந்த கயவன் காத்திருக்கின்றான். 'எங்கே மேனகை' என்பர் கேள்வி அந்த கயவர்களின் வலையில் சிக்குவதற்காக தேடிக் கொண்டிருக்கும் ஓர் அப்பாவியைக் குறிக்கின்றது.

மௌனம் என்ற கவிதை தொன்மத்தை முரண் நோக்கோடு அணுகி விஸ்வாமித்திரரை மயக்கிய மேனகைக்குப் பதிலாக மேனகையைக் கெடுக்க திட்டமிட்டு வந்த விசுவாமித்திரரை மையப்படுத்துகிறது. ஒருவர் தன் உள்ளத்தின் உண்மையான எண்ணங்களைப் புதைத்து கள்ள மௌனத்தோடு காத்திருக்கிறார். விஸ்வாமித்திரர். மேனகையின் வாழ்வை அழிக்க அவளது கண்ணியத்தைச் சிதைக்க நல்லவரைப் போல வேடமிட்டு காத்திருக்கும் நயவஞ்சகன் இந்த கள்ள முனி விசுவாமித்திரன். இன்று உலகில் பலர் பசுத் தோல் போர்த்திய புலிகளாக வந்து மான் வேட்டை ஆடுகின்றனர் என்ற அவல நிலையைக் குறியீடாக்கி கவிஞர் உணர்த்தியுள்ளார்.

ஒரு சராசரி இளைஞனின் பார்வையில் இக்கவிதை விசுவாமித்திரரின் தவத்தைக் கலைக்க முயன்று தன்பால் ஈர்க்க நினைத்த புராண காலத்து மேனகையைப் போல அல்லாது இன்றைய இருபதாம் நூற்றாண்டில் விசுவாமித்திரர் தனது மேனகைக்காக தவம் இருக்கின்றார் என்றும் தோன்றக்கூடும். ஆனால் தொன்மத்தில் விசுவாமித்திரர் மேன்கையின் குழந்தை சகுந்தலையை ஏற்றுக்கொள்ள மறுத்துவிடுவார். ஒரு ஆணை அப்சரஸ் பெண் மயக்கிய காலம் போய்

பெண்ணுக்காக ஆண் தவமிருக்கும் காலம் தோன்றிவிட்டது என்ற எண்ணமும் கருத்தும் வருவதற்கும் இக்கவிதை இடம் அளிக்கின்றது.

இலக்கியக் குறியீடு

தமிழ் இலக்கியத்தில் அம்பிகாபதி அமராவதி காதல் காலங்காலமாக போற்றப்படுகிறது சோழன் மகள் அமராவதியை கம்பரின் மகன் அம்பிகாபதி காதலித்ததாக வரலாறு. அமராவதி அணையை பற்றிய ஒரு கவிதையில் இவர்களைப் பற்றிய ஒரு குறியீடு அழகாக இடம்பெற்றுள்ளது.

அணை ஒன்று

நீரலை அடித்து

நீராகி தெளிந்து

தண்ணீர் தட்டாமல்

தாழப் பறக்கும் கொக்கு

ஆழம் காட்டாமல்

அமைதி காக்கும் அமராவதி

அசையும் நதி காட்டும்

கருவூர் திசை

அணை நீர் அறியா

அம்பிகாபதி அலைகள்

அணையின் பெயர் அமராவதி. அதனுள்ளே இருக்கும் நீர் அம்பிகாபதி. எப்போதும் அம்பிகாபதி தன் அலைக்கரங்களால் அமராவதி அணையை தொட்டுத் தடவுகின்றான். . ஆனால் அம்பிகாபதிக்கு அமராவதி கட்டுப்பட்டு அடைபட்டிருக்கும் ஓர் அணை என்பது

தெரியாது. அமராவதிக்குப் பாய்ந்தோடும் சுதந்திரம் கிடையாது. . இங்கு அலையும் நீருமாக இருக்கும் அம்பிகாபதியை அமராவதி [அணைக்கட்டு] தனக்குள் கட்டுப்படுத்தி வைத்திருக்கின்றாள். அம்பிகாபதி அலைகள் தான் அடிபட்டு இருப்பது அணைக்கட்டு என்பதை அறியாமல் அமராவதியைத் தொட்டுத்தடவி மகிழ்கின்றன

மன்னன் மகள் அமராவதி கட்டுப்பட்டவளாக நிற்கின்றாள். அதற்குள் அம்பிகாபதி என்ற வீரியம் மிக்க ஒரு புலவனும் மென்மையான அலைகளாக மீண்டும் மீண்டும் வந்து அமராவதியின் சுவர்களைத் தட்டித் தடவிப் பார்க்கிறான். இருவருக்கும் விடுதலை இல்லை. இருவரும் நதி நீராக ஓடி விளையாடி அலைக்கரங்களை வீசிச் செல்ல இயலாது. . இதுவே அம்பிகாபதி அமராவதி காதலைக் குறியீடாகக் கொண்டு எழுதப்பட்ட **அணை ஒன்று** என்ற கவிதையின் சிறப்பாகும். அணைக்கட்டு வேளாண்மைக்கு உதவினாலும் நதியின் இயற்கை ஓட்டத்தை தடுத்துவிடுகின்றது. நதிநீரை அணைக்கட்டுக்குள் அடக்கி வைப்பது காதலைக் கட்டுப்படுத்தி வைப்பதைப் போன்றதாகும் என்பதை இக்கவிதை குறிக்கின்றது.

வரலாற்றுப் படிமம்

'பத்மநாபபுரம் அரண்மனை' என்ற கவிதையில் மன்னர்களின் வாழ்க்கை சுட்டிக்காட்டப்படுகின்றது.. ஒரு காலத்தில் மன்னர்கள் தமது அரண்மனை அந்தப்புரங்களில் ஏராளமான பெண்களை வைத்திருந்தனர். அவர்களின் உறவினர்கள் மற்றும் பணியாளர்கள் என்று அரண்மனையில் பல நூறு பேர் இருந்தனர். ஆனால் இன்று வெறும் காட்சிப் பொருளாக இருக்கும் பத்மநாபபுரம் அரண்மனைக்கு வாரத்திற்கு ஒரு நாள் விடுமுறை விடப்படுவதால் மற்ற நாட்களில்

ஐம்பது, நூறு பேர் வந்து பார்த்தாலும் விடுமுறை நாளன்று அங்கு ஒரு ஆள் கூட கிடையாது.

அன்று, தினமும் நூறு இருநூறு பேர்கள் புழங்கிய அரண்மனை; நூற்றுக்கணக்கில் பெண்கள் அந்தப்புர வாசிகளாக இருந்த அரண்மனை; மன்னரின் ஏகபோக உரிமையாக இருந்த அரசாங்க அதிகாரம் மிக்க கட்டிடம்; இன்று ஆளரவமற்று ஒரே ஒரு அணில் ஓடி விளையாடும் இடமாக மாறிவிட்டது. அணில் ஓடி விளையாடும் காட்சி தான் இங்கு அரண்மனையின் அதிகாரம் வற்றிப் போனதற்கான குறியீடு. இதற்கு அடுத்தபடியாக அங்கு உள்ள சிமெண்ட் பெஞ்சில் மீது படுத்திருக்கும் ஒரு வெள்ளை நாய்.

அடைத்த அரண்மனைக் கதவில்

அணிலொன்று

அரவமற்ற வேளையில்

விளையாடித் திரிய

சிமென்ட் பெஞ்சில் குதித்தேறிப்

படுத்தது வெள்ளை நாய்

அணிலாடு முன்றிலார் எழுதிய சங்கப்பாடலில் ஊரே விழாக் கொண்டாட போய்விட்டது ஒருத்தி மட்டும் தனியாக இருக்கிறாள். அதனால் முற்றத்தில் ஒரு அணில் மட்டும் ஓடி விளையாடிக் கொண்டிருக்கிறது. அதுபோல இங்கு அரண்மனையில் இருந்த எல்லோரும் இன்று காணாமல் போய்விட்டார்கள்; அரண்மனையை விட்டு வெளியேறி விட்டார்கள்; அரண்மனையைப் பார்வையிட வருபவர்களுக்கும் இன்று அனுமதி இல்லை.; எனவே ஒரே ஒரு அணில் மட்டும் விளையாடிக் கொண்டிருக்கிறது. பெரும் செல்வாக்கு

படைத்த இடங்களும் மன்னர்களும் ஆட்களும் கோட்டை கொத்தளங்களும் ஒரு காலத்தில் வெறும் காட்சிப் பொருளாகி விடக்கூடும். அப்போது அங்கிருந்த அதிகாரம் எல்லாம் காணாமல் போய்விடும் என்பதை குறிக்கும் வகையில் அணில் ஒரு குறியீடாக இக்கவிதையில் இடம்பெற்றுள்ளது.

பூ மரநிழல் கவிதையில் பல இடங்களில் குறியீடுகள் காணாப் பொருளை குறிக்கும் வகையில் கவிதைகளில் சிறப்பான வலிமைமிகு உத்தியாக பயன்பட்டுள்ளது. கவிஞர் முத்தமிழ் விரும்பி குறியீடுகளையும் உருவகங்களையும் உத்திகள் என்பதற்காக எங்கேயும் வலிந்து புகுத்தவில்லை. **உருவகங்களும் குறியீடுகளும் படிமங்களும் செழித்திருக்கும் மொழி நடை என்பது கவிஞருக்கு இயற்கை அளித்த கொடை ஆகும். பொருத்தமான சொற்களும் குறியீடு, படிமம் போன்ற உத்திகளும் சரளமான கவி நடையும் சந்தமும் அவரது கவித்திறனுக்கு எடுத்துக்காட்டாகும்.** அவரது பெரும்பான்மையான கவிதைகளில் வலிந்து புகுத்தப்படாத உருவகங்களும் உவமை, படிமம், குறியீடு, போன்றவையும் இயல்பாகவே அமைந்துவிட்டன. இயல்பாக வந்தமைந்த இலக்கிய நயங்கள் கவிதை அனுபவத்தை இலக்கிய இன்பத்துடன் இணைக்கின்றன. கவிதைகளைத் திரும்பத் திரும்ப வாசித்து சுவைக்கத் தூண்டுகின்றன. அறிதோறும் அறிதோறும் அறியாமை உணரும் எண்ணத்தைத் தோற்றுவிக்கின்றன. ஒவ்வொரு முறை வாசிக்கும் போதும் இக்கவிதைகள் புதுப்புது கவிதானுபவத்தை அளிக்கின்றன.

4. பூமர நிழல் தொகுப்பில் தனிமனித உணர்வுகள்

பூமர நிழல் கவிதை தொகுதிக்கு முன்னுரை எழுதிய கவிஞர் தென்பாண்டியன் ‘வாழ்வின் சிக்கல்களை எதிர்கொள்ளும் கவி மனம் அதை எப்படி மொழிக்குள் கவிதையாக ஒழுங்கு செய்துகொள்கிறது என்பதை வாழ்விற்கும் மனதிற்கும் அண்மையில் நிகழும் யதார்த்தமான கவித்துவ உரையாடல்கள் நிறைந்த கவிதைகள்’ என்று பாராட்டுகிறார். கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதைகளில் தனி மனித உணர்வுகள் கவி நயத்துடனும் ஆழ்ந்த புரிதலுடனும் சமூக உற்று நோக்குதலுடனும் கவிதை வடிவம் பெற்றுள்ளன. இத்தொகுதியில் தனி மனித உணர்வுகளைப் பாடும் கவிதைகளை மட்டும் இக்கட்டுரையில் காண்போம்.

இலக்கு, அசைதல், மறுபடியும், இயக்கம், நிறுத்தம், நிகழின் இறப்பில், தேக்கம், புரிதல் தஊன்கும் பொழுது, நினைவின் நிகழ, குவியம், மௌனம், வேறு, போன்ற கவிதைகள் தனி மனித உணர்வுகளின் பல பரிமாணங்களைக் கவிச்சுவையுடன் சொல்லிச் செல்கின்றன. கவிஞர் முத்தமிழ் விரும்பி குறியீடு, படிமம் ஆகிய இலக்கிய உத்திமுறைகளைக் கையாள்வதில் தனிச் சிறப்புப் பெற்றவர். கவிஞர் தனி மனித உணர்வுகளைப் பல கவிதைகளில்

படிமங்களாகவும் குறியீடுகளாகவும் படைத்திருப்பதால் வாசகர் தத்தம் வாசிப்புக்கும் வாழ்க்கை அனுபவத்துக்கும் ஏற்ப கவிதைகளை சுவைத்து இன்புறுகின்றனர். இக்கவிதைகளில் ஒரு வேளைக்குத் தோன்றும் பொருள் மறு வேளைக்குத் தோன்றுவதில்லை. மறு போதில் கவிதைப் பொருண்மை வேறோன்றாக மாறி விடுகிறது இதனால் ஒவ்வொரு முறையும் கவிதை வாசிப்பு என்பது ஒவ்வொருவருக்கும் வேவ்வேறு அனுபவத்தைத் தருகின்றது. வாசகருக்கு வாசிப்பு அனுபவம் ஒவ்வொரு முறையும் புத்தம் புது அனுபவமாகத் தோன்றுகிறது. அறிதோறும் அறிதோறும் அறியாமையை உணரும் நிலையை இக்கவிதை அனுபவம் கற்றுத் தருகிறது.

அடுக்கு நிலை கொள்கை [Strata theory] என்ற கொள்கையின் அடிப்படையில் கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதைகள் பொருளுனர்த்துவதை அறியலாம். இவை அவை மேலடுக்கில் ஒரு பொருளும் அதன் அடுத்த அடுக்கில் வேறொரு பொருளும் தருகின்றன. இவ்வாறான அகழ்வாராய்ச்சியில் பல வாழ்க்கைத் தத்துவங்கள் ஒன்றன் கீழ் ஒன்றாகப் பொதிந்திருப்பது புலப்படும். மேலடுக்கில் காணப்படும் பொருளும் மிகச்சரியாகவே இருக்கும். அடுத்த அடுக்கில் நாம் ஆராய்ந்து பெறும் கருத்தும் வெகு பொருத்தமாக இருக்கும். இன்னும் தீவிரமாக வாசித்தால் இக்கவிதையனுபவம் ரசனைக்குரிய வாசிப்பு அனுபவமாக மண்ணைத் தோண்டிப் பொன்னை எடுக்கும் பயனுள்ள இனிமையான அனுபவமாக விளங்குகிறது.

***இலக்கு** என்ற கவிதையின் கருத்து, ஒருவனுக்கு வாழ்க்கையில் இலக்குகள் மாறிக்கொண்டே இருந்தாலும் ஒவ்வொரு காலகட்டத்திலும் ஏதேனும் ஒரு இலட்சியம் அல்லது இலக்கு அவனிடம் இருந்து*

கொண்டே இருக்கிறது. சிறு வயதில் படிப்பு பின்பு காதல், திருமணம், குழந்தை வளர்ப்பு, குழந்தைகளுக்கு நல்ல வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தரும் கல்வியை வழங்குதல், திருமணம் செய்வித்தல், வீடு கட்டுதல் என்று காலப்போக்கில் இலக்கு வெவ்வேறாக மாறிக்கொண்டே இருந்தாலும் இலக்கு என்று ஒன்று இருந்து கொண்டுதான் இருக்கிறது,

காலத்தின்

சிமிட்டலில்

தொலைந்து தொலைந்து

தோன்றும்

சிகரங்கள்

உதிராமல்

ஒரே ஒரு சிகரம்

ஒவ்வொரு முறையும்

என்ற கவிதையில் சிகரம் என்பது இலக்கு என்பதை குறிக்கின்றது, இலக்குகள் மாறி மாறி வருவதை தொலைந்து தொலைந்து தோன்றும் சிகரங்கள் எனக் குறிப்பிடப்படுகின்றது. ஒரு சிகரம் தொலைந்தாலும் மறு சிகரம் தோன்றி ஒருவனது வாழ்க்கைப் பாதையை அச்சிகரத்தை நோக்கி கொண்டு செல்லும். மனிதனுக்கு எப்போதும் ஒரே ஒரு சிகரம் மட்டும் உதிராமல் அவனுள் ஒரே ஒரு இலக்காக இருந்து கொண்டுதான் இருக்கிறது.

ஏறத்தாழ இதே சாயலில் எழுதப்பட்ட '**முகங்கள்**' என்ற கவிதை இச்சமுதாயத்தில் ஒரு மனிதருக்கு ஒரே முகம் எப்போதும் இருப்பதில்லை. ஆனால் எப்போதும் ஒரு முகம் கண்டிப்பாக இருக்கும். அதுவே எப்போதும்

இருப்பதில்லை. அது மாறிக் கொண்டே இருக்கும் என்பதை உணர்த்துவது தான் இக்கவிதை

எப்போதும் போல

இருப்பதில்லை என்றாலும்

ஏதாவது ஒரு முகம்

இருக்கும் நிச்சயம்.

எனத் தொடங்கும் கவிதை

சோகம் போர்க்கையில்

சிற்றிதழ் வாசிப்பில்

தேர்வின் புழுக்கம்

காமம் ஊற்றெடுக்கும் வேளைகளில்

முகங்கள் வேறாக இருக்கும் எனப் பட்டியலிட்டு கழற்றி போடும் முகமூடியில் முந்தைய முகம் ஒளிந்திருப்பதையும் கவிஞர் சுட்டிச் செல்கிறார்.

எல்லா வேளைகளிலும்

கழன்று விழும் மூடிகளில்

காணக் கிடக்குதொரு முகம்

என்கிறார். நிறைவாக

எனதும் உனதுமாய்

இருக்கும் முகங்களில்

ஒன்றாய் இருக்குது ஒரே சாயல்

என முடிக்கிறார். இங்கு ஒரே சாயல் என்பது தோற்றத்தைக் குறிக்கவில்லை சிந்தனையைக் குறிக்கிறது. உனக்கும் எனக்கும் ஒரே கொள்கை ஒரே சிந்தனை என்பதையே ஒரே சாயல் என்கிறார். இச்சாயல் பிறப்பினால் வருவதன்று. வளர்ப்பால் கருத்தால் சிந்தனையால் கொள்கையால் கோட்பாடுகளால் இரு வேறு பட்டவர்களுக்கு இடையே தோன்றிய ஒற்றுமை ஆகும். ஒன்று பட்ட சிந்தனை ஒரே விதமாண முகச்சாயலைத் தருவதாகக் கற்பனை கொள்வது கவி நயம் தொனிக்கும் கருத்தாகும்.

இலக்கைத் தேடி உழைக்கும் மனிதன் ஓடி ஓடிப் பாடுபடும் போது ஒரு கட்டத்தில் சற்று அயர்ச்சி ஏற்பட்டு ஓய்ந்து விடுகிறான். அந்த அயர்ச்சியும் சலிப்பும் **'அசைதல்'** என்ற கவிதையாக உருப்பெற்றிருக்கிறது. ஓட வேண்டும் என்ற எண்ணம் நம்மை விட்டு நீங்கிப் போனதும் சும்மா இருத்தலே சுகம் என்ற ஒருவித சோம்பேறித்தனம் மனதுக்குள் ஏற்பட்டு விடுகிறது.

சிறகுகளின் அயர்ச்சியால்

தொய்வுற்றுக்

கிடத்தல் சுகமாயிற்று.

தூரம் கடத்தல்

தொலைவில் போனது

ஐந்து வரியில் மிக அழகான கவிதை. வாழ்க்கையின் யதார்த்தத்தைச் சுருக்கமாகவும் எளிமையாகவும் சொல்லிச் செல்லும் தெளிவான கவிதை. இது ஒரு குறியிட்டுக் கவிதை. எனினும் வாசிப்போருக்கு அவரவர் அனுபவத்துக்கு ஏற்ப அழகான வாழ்க்கைத் தத்துவங்களை உணர்த்தக் கூடிய வீரியமிக்க கவிதை.

வாழ்க்கைப் பயணத்தில் வெகு தூரம் கடக்க வேண்டும் என்று நினைத்த நினைவு மனிதனை விட்டு இப்போது வெகு தொலைவில் போய் விட்டது. சும்மா கிடைத்த சுகம் என்ற எண்ணம் அவனுக்குள் வேரூன்றிவிட்டது. இதனால் அவன் இலக்கைத் தேடி பயணிக்காமல் சோம்பலை சுகமாக்கிக் கொண்டான். அமைதியாக இருக்கின்றான். இலக்கு அவன் மனதிலிருந்து மறைந்து விட்டது. பறத்தல் மாறி கிடத்தல் தோன்றி விட்டது. கொள்கையிலாது கெட்டேன் என்ற நிலையை அடைகிறான. கவிஞர் முத்தமிழ் விரும்பி பறவையையும் மரங்களையும் கொண்டு பல அழகான கவிதைகளைப் படித்து கருத்துக்களைப் பொறுப்போடு எடுத்துரைக்கிறார்.

இயக்கம் என்ற பெயரிலும் பறவையை எடுத்துக்காட்டாகக் கொண்டு இன்னொரு கவிதை அமைந்துள்ளது. வாய்ப்புக்கள் [வானம்] அதிகமாக இருந்த காலத்தில் வேக வேகமாக பறந்து களைத்த பறவை ஒன்று ஓய்வு பெறலாம் என நினைக்கின்ற போது அதன் இயக்கம் மீண்டும் வேகமடைன்றது. இது கவிதையின் பொருள். வாய்ப்புகள் இளமையில் அதிகமாக இருந்தன. உழைப்பும் கடுமையாக இருந்தது. அப்போது பல்வேறு சிக்கல்கள் இருந்தன. அவற்றை அனைத்தும் விடுவித்து கொஞ்சம் ஓய்வு பெறலாம்; உழைப்பு முடிந்து போய்விட்டது. இனி உழைக்க வேண்டிய தேவை இல்லை; ஓய்வு பெறலாம் என்று நினைத்த காலத்தில் இயல்பாய் இருக்க முடியாமல் வாழ்க்கை வேகமாக இயங்கத் தொடங்கியது, புது இயக்கமும் புது வ்பால்வும் தொடங்குகிறது. முதுமை நிலையில் தோன்றும் வேகத்தை

அப்போதைய வானம்

அகலமாய் இருந்தது

சிறகுகள் முதிர வென

சிக்கெடுத்துக் கொண்டிருந்தேன்;

நனைந்த காலத்தில்

காயட்டுமெனக் காத்திருத்தலாயிற்று.

முதிர்ந்து உதிர்ந்ததென.

உணரும் தருணத்தில்

இயல்பாய் இல்லாமல்

இயக்கம் காட்டும் வாழ்க்கை

இனிச் சிறகுகள் இல்லை பறக்க வேண்டாம், பரபரக்க வேண்டாம் என்று கருதிய இந்த காலத்தில் வாழ்க்கையின் இயக்கம் மீண்டும் வேகம் பிடித்தது என்கிறார் கவிஞர்.

நிகழின் இறப்பில் *என்ற கவிதை ஓய்வைத் தேடும் நேரத்தில் மீண்டும் எண்ணங்கள் தாம் பணி செய்த நாட்களை நோக்கி ஓடுகின்றன. அதிகாலையின் அழகு வேண்டும். என ஆசைப்படும் மனம் மீண்டும் தனது பழைய பரபரப்பான வாழ்க்கையையே விரும்புகிறது என நிறைவு பெறும் கவிதை காலை நேரத்தில் ஒருவனுக்கு ஏற்படும் சலிப்பையும் பின்பு மெல்ல மெல்ல உண்டாகும் உற்சாகத்தையும் சுட்டுகிறது. பயணத்தைக் குறிக்க*

நினைவுகளின் விழுதுகள்

மிதியடிகள் தேட

என்று வரிகளில் 'மிதியடிகள் தேட' என்று சொல்லாடல் அளவற்ற கவிச்சுவையை வழங்குகிறது.

காலப்பெருவெளியில்

கலக்கும் ஒருதுளி

எனது நாளைய மரணம்

என்ற வரியில் காலம் கடந்து போய்க்கொண்டிருக்கும் நிகழ்வு மரணத்துக்கு ஒப்பானது அது திரும்பக் கிடைக்காது என்ற கருத்து வலுப்பெறுகிறது. இவ்வரி உடலுக்கேற்படும் மரணத்தைப் பற்றிச் சொல்லவில்லை ஒவ்வொரு நாளும் பொழுதும் காலப்பெருவெளியில் ஒரு சிறு துளியாக கரைந்து போய்விடுகிறது. ஒரு தனி மனிதனின் உழைப்பும் முயற்சியும் அவனுக்குப் பெரியதாக தோன்றினாலும் காலத்தின் கணக்கில் அவன் ஒரு சிறுதுளி ஆகவே கரைந்து விடுகிறான். காலத்தை பற்றி கவிஞர் பல கவிதைகளை இயற்றியுள்ளார்.

அன்றாடம் காலையில் நாளிதழ் வாசிப்பதையும் கவிஞர் கவிதை வரிகளாக புனைந்துரைக்கிறார்.

நாளிதழ் பார்த்து

தேனீர் குடிக்கையில்

நடப்புகள்

தேவையில்லாது உள்ளிறங்கும்

என்கிறார். அதிகக் கருத்துச் செலுத்தாமலேயே ஒவ்வொரு நடப்பையும் செய்தியாக வாசித்து மனதுக்குள் இறக்குகிறோம்.அவற்றில் பல் செய்திகள் தேவையில்லாதவை என்பதை அவ்வாறு எடுத்துக் கூறுகிறார். ஓய்வாக இருக்க விரும்பும் மனம் மீண்டும் பணி நாட்களை நோக்கியே செக்கு மாடு போல இழுக்கப்படுவதை

சிறகுகள் பற்றி

சிறைப்படும் மனம்

மீண்டும் அந்தப்

பணி நாட்களை நோக்கியே

என்ற வரிகளில் சுட்டிக் காட்டுகிறார். நினைவுகள் மறைந்துவிட்டன, கிளம்பிவிட்டன என்பதை குறிக்கும் குறியீடாக நினைவின் விழுதுகள், மிதியடிகள் தேட' என்கிறார். மிதியடிகளைத் தேடுவது என்றால் புறப்படுவதற்குத் தயார் ஆகி விட்டது என்பது பொருள்.

இணைகளின் உறவில்

விடிகாலை வண்ணத்துப்பூச்சிகளின்

வெளிச்ச உரையாடல்

மீண்டும் சிறகுகளின் வானம்

என்று கவிதை நிறைவு பெறுகிறது.

வண்ணத்துப்பூச்சிகளைப் பார்க்கும்போது அவற்றின் ஊக்கமும் உற்சாகமும் அவனுக்கு மீண்டும் சிறகுகளை விரித்து வானத்தில் பறக்க வேண்டும் என்ற எண்ணத்தைத் தோற்றுவிக்கிறது. அவன் மீண்டும் உழைக்கத் தயாராகின்றான் புறப்படுகின்றான். இக்கவிதையில் 'காலப்பெருவெளியில், கலக்கும் ஒருதுளி, எனது நாளைய மரணம்' என்ற வரிகளும் 'இணைகளின் உறவில், விடிகாலை வண்ணத்துப்பூச்சிகளின், வெளிச்ச உரையாடல், மீண்டும் சிறகுகளின் வானம்' என்ற வரிகளும் திரும்பத் திரும்ப வாசித்து இரசித்து இன்புறத்தக்கன.

தேக்கம் *என்ற கவிதையில் மழை ஒரு நாள் பெய்தாலும் அந்த மழைநீர் வடிந்து செல்வதற்கு ஒரு வார காலம் ஆகும். அதுபோல ஒரு கவிஞனுக்கு ஒரு நாள் கவிதை எழுதுவதற்குரிய சிந்தனை தோன்றினாலும் அந்த கவிதையை முற்றாக எழுதி முடிக்க அவனுக்கு ஒரு*

வாரம் கூட ஆகலாம். இது கவிதைக்கு மட்டுமல்ல கடிதங்களுக்கும் பொருந்தும் என்ற வகையில்

ஒரு நாள் மழை

ஒரு வாரம் வடியும் வெள்ளம்

எழுத இருக்கிறது நிறைய

எழுதப்படாமல் கடிதம்

என்ற கவிதை சிறப்பான ஒலி நயத்துடன் அமைந்துள்ள சின்னக் கவிதை ஆகும். உருவில் சிறியதென்றாலும் முத்தமிழ் விரும்பியின் பொருளில் விரிந்தன ஆகும்.

தேக்கம் கவிதையில் வரும் மழையை மனத்தில் பொதிந்திருக்கும் உணர்ச்சிகளுக்கும் ஒப்பிடலாம். ஒரு நாள் சோகம் கரைவதற்கு ஒரு வாரம் ஆகலாம். ஒரு நாள் கோபம் தீர்வதற்கு ஒரு வாரம் ஆகலாம். அப்போது அவற்றை மற்றவருடன் சொல்லி ஆற்றவும் போக்கவும் வேண்டும். இதுவும் எழுதப்படாத கடிதங்கள் .

இந்நூலாசிரியர் பூ மர நிழல் கவிதை தொகுப்பை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த போது அணிந்துரை வழங்கிய அமெரிக்காவிச் சேர்ந்த மானுடவியல் துறையின் முனைவர் திருமதி நிக்கோல் பெர்கர் தேக்கம் என்ற இக்கவிதையைப் பின்வருமாறு பாராட்டி மகிழ்ந்தார்.

[STAGNATION

One day rain

Needs one week to drain;

Lots of things to write

Letter not yet written

These four lines contain insights about the wider world, which evoke a whole host of mental pictures. The first two lines include broader observations from the natural world – powerful downpours of the rainy season in TamilNadu, and the built environment- the way that water collects on roads and various places, causing frustration to those who must navigate around it not only during the rainstorm but for the week following.

The second stanza links these external events to a personal interior world, sure to be relatable to any reader; the uncompleted task of writing a letter, which becomes more daunting day by day, as the list of things to write about never ceases to lengthen.

Like the stagnation of the rain, is the feeling of stagnation that comes from the unwritten letter. The two realms, the exterior and interior, mirror each other.]

‘**தூங்கும்பொழுது**’ என்று ஒரு கவிதையில் கவிஞர். தூங்காமல் தவிக்கும் மனதின் செயல்பாடுகளைக் கவிதை ஆக்குகிறார். ஓர் இரவில் வெகு நேரமாகியும் தூங்காமல் இருக்கின்றோமே என்ற எண்ணத்தில் தூக்கமும் விழிப்புமற்ற ஒரு நிலையில் ஒருவன் உழன்று கொண்டிருப்பதை.

கண்கள் மூடினாலும்

கண்ணாமூச்சி காட்டும் தூக்கம்

இன்னும் தூங்கலியே

எண்ணமே நெளியும்

தூங்க இடைஞ்சலாய்

என்ற வரிகள் உணர்த்துகின்றன. தூக்கம் இன்னும் கண்களுக்குள் சிக்கவில்லை சிக்காமல் ஓடி ஒளிகின்றது என்கிறார். மேலும் இன்னும் தூங்காமல் விழித்துக்

கொண்டிருக்கிறோமே என்ற எண்ணமும் அந்தத் தூக்கத்துக்கு இடைஞ்சலாக இருக்கின்றதாம்.

ஏக்கத்தின் மூச்சாய்

பிள்ளை அழும் குரலில்

பூனை கத்தும் போது

மணி என்னவாயிருக்கும்,

என மனம் ஒரு வினாவை எழுப்புகிறது. விடிந்துவிட்டால் தேவலை என்ற எண்ணமும் ஏற்படுகிறது. இங்கு பூனையின் ஒலி குழந்தையின் அழுகையை ஒத்திருக்கின்றது.

தூக்கமின்மையைத் தொடர்ந்து கல்லூரி நாட்களில் விடுதிகளில் தங்கியிருந்த தோழர்களோடு கொண்டிருந்த உறவு அதற்கு பின்பு வேலை தேடிய காலங்கள், விரிவாக மனக்கண் முன் தோன்றுகின்றன. இவ்வேளையில் படுக்கையில் ஏதோ ஒன்று விழுந்தது போன்ற உணர்வு ஏற்பட்டது. கண்கள் அவசரமாக விழிக்க எதிரே இருந்த ஜன்னல் வழியாக தெரு விளக்கின் ஒளி கண்ணைக் கூசச் செய்கிறது. வெகு தூரத்தில் எங்கோ எங்கேயோ ஒரு உடுக்கை ஒலி சத்தமும் கேட்கிறது. இவ்வாறாக அன்றைய தூக்கத்தின் நிகழ்வை அந்த இரவு கிழித்துவிட்டது என்று கவிஞர் தூங்காத இரவு பற்றி பாங்கான கவிதை ஒன்றைத் தந்துள்ளார்.

இவ்வாறு கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதைகளில் தனி மனித உணர்வுகள் கவிதையாக்கப்பட்டு மிளிர்கின்றன. மனிதனில் வாழ்வில் மாறி வரும் இலக்குகள், திடீரென ஏற்படும் அயர்ச்சியும், மீண்டும் சுறுசுறுப்படைதலும் என வாழ்வின் பல பரிணாமங்களைக் கவிப்பொருளாகக் கொண்டிருக்கிறார். எந்தக் கவிதையிலும் எதிர்மறை

எண்ணமோ வன்முறையோ புலம்பலோ நம்பிக்கை வறட்சியோ இல்லாமல் வாசிப்போருக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் வகையில் தனது கவிதைகளை அழகிய தமிழில் செம்மையுற யாத்துள்ளார். இவரது ஒவ்வொரு கவிதையின் சொற்செட்டும் பொருள் செறிவும் சுவைத்து இன்புறத்தக்கன.

5. பூ மர நிழல் தொகுப்பில் காதல் கவிதைகள்

கவிஞர் முத்தமிழ் விரும்பி அவர்கள் எழுதிய பூ மரநிழல் எனும் கவிதை நூல் கவிதை உறவு என்ற இயக்கத்தின் பரிசையும் , என் சி பி எச் மற்றும் கலை இலக்கியப் பெரு மன்றத்தின் பரிசையும் பெற்றுள்ளது. இந்நூல் தஞ்சை மண்ணைச் சேர்ந்த மண் மணம், நகரமயமாக்கலின் மாற்றங்கள், காவிரி நதி ஓரத்தில் காணப்படும் வறட்சி, கிராம வாழ்க்கை, தனி மனித உணர்வுகள், சமுதாயப் உணர்வு, காதல், காமம் எனப் பல்வேறு பாடுபொருள்களைக் கொண்டு அமைந்துள்ளது. தஞ்சாவூரின் காவிரி ஆற்றுப் படுகையைத் தாய் மண்ணாகக் கொண்ட இக்கவிஞர் திருச்சி, தஞ்சை, கோவை போன்ற ஊர்களில் வசித்ததால் அவ்வழியே பாயும் காவிரி நதியின் அழகையும் அதன் போக்கையும் பல ஆண்டுகளாகக் கவனித்து வந்த காரணத்தினால் அவற்றையும் தமது கவிதைகளின் பாடுபொருள் ஆக்கியுள்ளார்.

இன்றைய இளைஞர்கள் பலரும் தங்களுக்குத் தெரிந்த வாக்கியங்களை மடக்கி மடக்கி எழுதி அதனைப் புதுக்கவிதை என்று பெயரிட்டுத் தங்கள் மனதில் தோன்றிய காதல் உணர்வுகளைப் பாடுபொருள் ஆக்கிவிடுகின்றனர். அவை ஆழமற்றவை; வெறும் உணர்ச்சிகளின் வெளிப்பாடாகும். நல்ல கவிதை

என்பது உணர்ச்சிகளின் வெளிப்பாடாக இல்லாமல் உணர்வுகளின் பிரதிபலிப்பாக இருக்க வேண்டும். உணர்ச்சிகளை உள்வாங்கி அவற்றின் காரண காரியங்களைத் தெளிந்து நல்ல தமிழில் தெரிவு செய்த சொற்களைக் கொண்டு ஓசை நயத்துடன் படைக்கப்பட வேண்டும். அத்துடன் கவிதைக்கு அணிகலன்களான உவமை, உருவகம், படிமம், குறியீடு போன்றவையும் கவிதையில் இடம்பெற வேண்டும். இவற்றால் கவிதை அழகு பெறும். இத்தகைய சிறப்புக்கள் அனைத்தும் ஒரு சேரப் பெற்ற கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதைகளில் பூ மர நிழல் என்ற தொகுதியில் உள்ள காதல் கவிதைகளைப் பற்றி இக்கட்டுரை விளக்குகிறது.

'நம்பிக்கையூட்டும் விதத்தில் நல்ல கவிதைகளைத் தரும் ஆற்றலுள்ள இளைஞர்' எனக் கவிஞர் முத்தமிழ் விரும்பியைப் சிற்பி அவர்கள் பாராட்டியுள்ளார். மறைந்த எழுத்தாளர் சுஜாதா இவரது 'நீட்சி' என்ற கவிதையை **'ஏராளமாகக் கவிதை எழுதி வருத்தும் கவிஞர்கள் முதலில் படிக்க வேண்டிய நல்ல கவிதை'** என்கிறார். கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதைகள் அறிவார்ந்த வாசகர்கள் வாசிக்கும் கணையாழி, தாமரை, குமுதம் – தீரா நதி, சுகன் போன்றவற்றில் வெளிவந்துள்ளன. பாரதியார் பல்கலைக்கழகத் தமிழ்த் துறை, மற்றும் கொங்கு கலை அறிவியல் கல்லூரி போன்ற பல தனியார் கலை அறிவியல் கல்லூரிகளிலும் பாடமாக இடம்பெற்றுள்ளன.

'மலரினும் மெல்லிது காதல் சிலரதன்

செவ்வி தலைப் படுவார்'

என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க கவிஞர் அதன் சிறப்புக்களை உணர்ந்தவராகக் காதல் என்ற மென்மையான உணர்வை இன்னும் மென்மையான

சொற்களைக் கொண்டு சுகமான தென்றல் வந்து தொட்டுச் செல்வதைப் போல அமைத்துள்ளார்.

காதல் என்பது காதலர்களுக்கு மிகப் பெரிய சுமை; ஆனால் அது ஒரு சுகமான சுமை; மேலும் குடும்பம், சாதி, சமூகம் போன்றவற்றை எதிர்த்து நடத்தும் போராட்டமும் ஆகும். இச்சுகமான சுமையை நெஞ்சில் சுமப்பது எளிதன்று. அது தரும் காயமும் இரணமும் பிற்காலத்தில் உணர்ந்தின்புறத்தக்கது என்றாலும் அந்த இனிய வேதனையையும் அதற்காகச் சந்திக்கும் சோதனைகளையும் எழுத்தில் வடிப்பது எளிதன்று. தமிழ் படித்தவருக்கே சவாலான இத்திறமையும் கலை நயமும் பொறியியல் படித்த இவருக்குக் கைவந்த கலையாய் இருப்பது அரிதினும் அரிதான ஒரு கவின் கலைத் திறன் ஆகும். கவிஞர் முத்தமிழ் விரும்பி இந்த சவாலில் மகத்தான வெற்றி பெற்றுள்ளார்.

காதல் கவிதையின் பாடுபொருள்

காதலியைப் பார்க்க முடியாத வேதனை; அவளோடு பேச முடியாத நிலை இருக்கும் போது அவளோடு பேசுவதாகக் கற்பனை செய்து கொண்டு தனக்குள்ளாகவே பேசிக் கொண்டிருக்கும் ஒரு நிலை; அவளிடமிருந்து கடிதம் வந்ததும் அவளையே சந்தித்தது போன்ற ஆனந்தம், அவளைச் சந்திப்பதற்காக காத்திருக்கும் தருணங்கள் தரும் மகிழ்ச்சியும் மன அழுத்தமும்; காத்திருப்பைத் தவம் எனப் போற்றி மகிழ்வது; என பல்வேறு சூழ்நிலைகளில் ஒரு காதலன் படும் அவஸ்தைகளையும் அவனது மன எழுச்சியையும் கவிஞர் கவிதைகளாக வடித்துள்ளார்.

விழைவு, பயணம், பரஸ்பரம், திரும்பவும், காலம், நினைந்து, பதிலுக்கு, வாழ்நிலம், ஒரு சந்திப்பில், காத்திருக்கும் புள்ளியின் ஒளி, இறுக்கம் *எனப் பல*

கவிதைகள் காதலைப் பற்றியனவாக உள்ளன. இக்கவிதைகளைப் பற்றி மட்டும் இக்கட்டுரையில் காண்போம்

காதலையும் தும்மலையும் பிறரிடம் இருந்து மறைக்க இயலாது. அது ஒரு விளக்கு போல தன்னையும் விளக்கி, தான் இருக்கும் இடத்தை விளக்கிக் காட்டிக் கொடுத்து விடும் என்பதனால் காதலர்கள் தன் காதலை பொத்தி பொத்தி வைத்து பிறர் அறியாமல் பாதுகாப்பது இயல்பு.. தன காதலைப் பிற அறியாமல் மறைக்க விரும்பிய காதலி பலர் முன்னிலையில் தன் காதலனை ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல் உண்டாம் என்பார் வள்ளுவர்.

சுயம் அழித்து சுகம் தரும் காதல்

விழைவு என்ற கவிதை ஒருவன் தன் மனதில் யாரும் அறியாமல் மறைத்து வைத்திருக்கும் காதலைத் இதுவரை திறந்து காட்ட இயலவில்லை; அந்தக் காதலை பிறர்க்கு உணர்த்தி விட்ட பிறகு 'என்' என்ற இறுமாப்பு தொலைந்து விடும். பிறகு அவளும் அவனும் ஒன்றாக இணைந்து விடக்கூடும் என்று நம்புகிறான். இதனையே

கை மூடி வைத்திருக்க

காணக் கிடக்கிறேன்

திறந்தபோதில்

காணாமல் போவது

நானுடன் நீ

என்று கவிதை ஆக்கியுள்ளார் கவிஞர் முத்தமிழ் விரும்பி. கை மூடி வைத்திருக்கும் காதலைத் திறந்து காட்டி விட்டால் காதல் வெளிப்பட்டு விடும். ஆனால் காதலரின் நான் என்பதும் நீ என்பதும் காணாமல் போய் நாமென்ற

சொந்தம் தோன்றிவிடும். காதல் தான் என்னும் அகந்தையைத் தொலைக்கிறது என்ற இவரின் கருத்து புதிது. இவ் அகந்தை தொலைந்தால் இருவரும் அவ்வையார் பாடியது போல 'கருத்தொருமித்த காதலர்' ஆகிவிடுவர். ஈருடல் ஒருயிர் என்பது போல இருவருக்கும் ஒரே உயிர் ஒரே சிந்தனை ஒரே கருத்து என்ற நிலைமை தோன்றிவிடும்.

'**பரஸ்பரம்**' என்ற கவிதையில் காதலர்களிடம் அழிந்து போகும் நான் நீ என்ற சுயம் அவர்களுக்குள் காதலாய் மலரும் என்று விரித்துரைக்கிறார்.

உன்னில்/ என்னில் விதைத்தால்

என்னில்/உன்னில் விளையும்

பூ

என்ற கவிதை வரிகள் எனக்குள்ளும் உனக்குள்ளும் நாம் காதலை விதைக்கும் போது நம் இருவருக்குள்ளும் அகந்தையற்ற மகிழ்ச்சி மலரும் என்பதை உணர்த்துகின்றன. இங்கு காதலை விதைத்து மகிழ்ச்சியை மலரச் செய்கின்றனர். கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதைகள் காதலின் உணர்ச்சிகளைப் பேசாமல் காதலின் உயர்வையும் அது தரும் மன எழுச்சியையும் பாடு பொருளாக்கி உள்ளது.

ஒரு பூக்காரப் பாட்டி வைத்திருக்கும் கூடையில் விற்பனையாகாத டேலியா பூக்களும் ரோஜாக்களும் காணப்படுகின்றன. அப்போது கவிஞர், இந்தப் பூக்களை நாம் நமக்குள் விதைக்க வேண்டும். பூக்களை விதைக்கும்போது பூக்கள் தானே மலரும் எனவே காதல் பூக்களை விதைத்து மகிழ்ச்சி மலர்களை அறுவடை செய்யலாம், என்கிறார்.

பிரிந்திருக்கும் போது பேசிக்கொண்டிருக்கும் காதலர் நேரில் சந்திக்கும்போது பேச நினைத்ததை

எல்லாம் பேசாமல் மௌனமாக இருக்கும் நிலையை வள்ளுவரும் பேசுகின்றார். கவிஞர் முத்தமிழ் விரும்பியும் கவிதை ஆக்குகிறார்.

காதலும் கற்பனையும்

பயணம் என்ற கவிதையில் வெளியே ஜன்னல் வழியாக வெப்பக் காற்று உள்ளே வருகிறது; அந்த வெயில் உறைக்காமல் அவன் தன் காதலியோடு பேசிக் கொண்டிருக்கிறான். கற்பனையில் காதலியோடு பேசிக்கொண்டிருக்கும் இந்நிலை சந்திப்பில்லாத சந்திப்பாக உருவெடுக்கிறது. நேரில் அவளைக் காணாத போதும் அவளைக் கண்டதாகவும் அவளோடு பேசிக் கொண்டிருப்பதாகவும் அவனுக்குல் ஒரு மாயத் தோற்றத்தை ஏற்படுத்துகிறது. மனதில் தோன்றும் இத்தோற்றம் அவனை ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது. இதனை

உன்னோடு

பேசிக் கொண்டிருக்கிறேன்

சன்னலில் வழியும்

வெயிலின் தனலை உள்வாங்கி

என்கிறார், கற்பனையில் நடக்கும் உரையாடலே காதலியை சந்தித்த மகிழ்ச்சியை அளிக்கிறது. எனவே,

சந்திப்பில்லாவிடினும்

சந்தித்தோம்

நீண்ட நாட்களுக்குப் பின்

என்று இக்கவிதை அந்த கற்பனை உரையாடல் தந்த மன நிறைவை எடுத்துக்காட்டுகிறது. உரையாடலும் மாயை;

சந்திப்பும் மாயை; எனினும் இவ்விருவருக்குள்ளும் இழையோடும் காதல் நிஜம்.

விடை பெற்ற காதலி

'**திருமம்பவும்**' என்ற கவிதை காதலியைச் சந்தித்து விட்டு விடை பெற்று வரும் வேளையில் ஏற்படும் துக்கத்தை எடுத்தியம்புகிறது. ஓர் இளைஞன் தன் காதலியைச் சந்தித்து விட்டு விடை பெற்றுக்கொண்டு திரும்புகிறான்.

விடை பெற்ற பின்பும்

விரல் அசைக்கும் எண்ணங்கள்

பிரியும் வேளையில் எல்லாம்

பிரியாத கண்ணீர்

திரும்பிப்பாராமல்

நடப்பேன்

திசைக்கெதிரே உன்

தீக்கொழுந்து முகம்

என்ற வரிகள் அவள் ஒரு திசையில் போய் விட்டாள். இவன் மறு திசையில் திரும்பி நடந்து வருகிறான். அவள் போன திசையை இவன் திரும்பிப் பார்க்கவில்லை. ஆனால் அவன் கண் எதிரே அவள் முகம் தெரிகிறது அந்த முகம் பிரிவின் துயரையும் உறவின் சுகத்தையும் விளக்கும் தீக்கொழுந்து போலச் சிவந்து காணப்படுகிறது. பிறகு அவன் பேருந்தில் ஏறி விட்டான்.

பேருந்தின் வழியெங்கும்

பேச்சு கொடுக்கும் ஞாபகங்கள்

என்ற வரிகள் பேருந்தில் அவள் தன்னருகில் உட்கார்ந்து பேசிக் கொண்டு வருவதாக நினைத்துக் கொண்டு பயணிக்கின்றான். அப்போது

நினைவுகளில் விரிகூந்தலில்

ஜாதிப்பூ

தனிமையின் கணங்களுக்கு

வாசமூட்ட

என்ற வரிகள் அவளது வாசம் இன்னும் அவனை விட்டு நீங்கவில்லை. அவளது இருப்பும் அவனை விட்டகலவில்லை என்பதைச் சுட்டுகின்றன. அவை இரண்டையும் அவன் தனது மனத்துள் சுமந்தபடியே பயணிக்கிறான். பயணம் முடித்து வீடு சென்று படுத்துறங்கிய பின்பும் கூட,

உறக்கத்திலும் வந்து

உரசிச் செல்லும் உருவம்

எனக் கவிதையை நிறைவு செய்கிறார். விழிப்பிலும் உறக்கத்திலும் அவள் அவனோடு பயணிக்கிறாள். இதில் இருவரது பயணமும் சுட்டப்படுகின்றது. உடலால் பிரிந்தாலும் வெவ்வேறு இடங்களில் வாழ்ந்தாலும் உள்ளத்தால் இணைந்து இருக்கும் காதலின் மகத்துவத்தை இக்கவிதை செவ்வையாக எடுத்துரைகிறது.

*‘**பதிலுக்கு**’* என்ற கவிதையும் சந்திப்புக்குப் பிறகு விடை பெறுதலைப் பற்றிய கவிதையே ஆகும். போய் வருகிறேன் என்று பல முறை சொன்னவள் அப்போதெல்லாம் கிளம்ப வில்லை; ஆனால் திடீரென்று சொல்லாமல் கொள்ளாமல் கிளம்பிச் சென்று விட்டாள். கிளம்பிச் சென்ற போது அவனிடம்

சொல்லவில்லை. நொடி நேரம் நடந்த இந்நிகழ்ச்சி ஏற்படுத்திய பாதிப்பு பல மணி நேரம் நீடிக்கிறது.. கவிஞனின் மனதில் இந்நிகழ்ச்சி நறுக்கென்று நான்கு வரிக் கவிதையாகப் புறப்பட்டு வந்துள்ளது.

சொன்ன போதெல்லாம்

விடை பெறவில்லை

விடைபெற்றபோது

சொல்லவே இல்லை

காதலி சொல்லாமல் போய்விட்ட ஏக்கம் இளைஞனின் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்து பெருமூச்சாக வெளிப்படுகிறது. அந்த ஏக்கப் பெருமூச்சு கடைசி வரியில் **சொல்லவே இல்லை** *என்ற தேற்றாகாரத்தில் தென்படுகிறது.*

காத்திருப்பு ஒரு தவம்

காத்திருப்பு *என்ற கவிதை, சமூகத்தில் கல்வி ஒரு தவம்; சேவை ஒரு தவம்; என்பதைப் போல காதலில் காத்திருப்பும் ஒரு தவம் என்பதை உணர்த்துகிறது. தன் காதலிக்காகக் காத்திருக்கும் காதலன் தவம் செய்வதைப் போன்ற உணர்வோடு இருக்கின்றான். ஒவ்வொரு நொடியும் காலம் கரைந்து கொண்டே போகிறது. அவள் இன்னும் வரவில்லை. அவன் மனதில் அவள் மீதான ஆசை பேயாய் அலைகிறது. ஆனால் அவள் இன்னும் வரவில்லை. அவனுக்கு அந்த இடத்தைவிட்டுச் செல்லவும் மனமில்லை. ஆசை அலைகளால் கட்டுண்டு நின்ற இடம் விட்டு நகராமல் தவ முனியைப் போல காத்துகிடக்கிறான்.*

துகள்கள் உறைந்து

மணிகளாய்த் திகைப்பூட்ட

ஆவியாய்த் திரிகின்றன
ஆசைகள்.

என கவிதையை நிறைவு செய்கிறார்.

கவிதையின் தொடக்கத்தில் காத்திருப்பின் கணம் உணர்த்தப்படுகிறது. அவள் இன்னும் வந்த பாடில்லை. காலம் கரைகிறது. அதனை உருவகமாக்கி படைக்கிறார்.

மணிகள் உருகி

நொடிகளாய் உதிர்கின்றன

பொதுவாக நொடிகள் சேர்ந்து நிமிடங்களாகி மணி நேரம் ஆகும். காதலனுக்கோ மணிகள் நொடிகளாக உதிர்கின்றன. கவிஞருக்கு ஒரு மணி நேரம் இரண்டு மணி நேரம் என்பது மெல்ல மெல்ல உருகி நொடிகளாக உதிர்கின்றனவ. நேரம் காலம் பார்க்காமல் காத்திருக்க வேண்டும் என்பதை அவர்

நொடிமுள் விரையும் ஓசை

பொறுமையைத் தேய்க்க

காத்திருப்பும்

தவம் என்றுணரா நான்

களைப்புற்று விழுகிறேன்

எனச் சொல்லி காதலன் சோர்ந்து போகின்றான்.. காத்திருப்பு என்பது ஐம்புலன்களையும் ஒடுக்கிச் செய்யும் தவம். எனவே காதலனுக்கு அவளுக்காகக் காத்திருப்பதில் களைப்பு உண்டாகிறது. அதே வேளையில் அவன் மனதில் ஆசைகள் அலையாய்ப் பெருகுகின்றன. அவளைச் சந்தித்துப் பேசுவதற்கும் பழகுவதற்கும் உள்ளம் துடிக்கின்றது.

தேவதைகள்

பேய்களாய் ஓலமிட்டோட

பிறைநிலவும் அழுக்காய்

அவனுக்கு மாறி விட்டது. காதலின்பம் தேவதையாய்த் தெரிந்தது. இப்போது அது தரும் துன்பம் பேயாய்த் தோன்றுகிறது. பிறை நிலவாய் வளரும் என நினைத்த காதல் இப்போது காத்திருப்பின் துயரத்தில் அழுக்கேறிவிட்டது. இத்துன்பத்துக்கும் ஏமாற்றத்துக்கும் காரணம் என்னவென்றால் காத்திருப்பும் தவம் என்பதை உணராதத**தே** ஆகும். காதலிப்போருக்கு அவசரம் கூடாது; பொறுமை அவசியம் என்ற அரிச்சுவடிப் பாடத்தை இக்கவிதை கற்றுத் தருகிறது.

'**நினைந்து**' என்ற கவிதை காதலியிடம் இருந்து கடிதம் வந்ததும் அதற்கு தான் பதில் எழுதாததுமாக உள்ள சூழ்நிலையில் தோன்றியது. காதலியின் கடிதம் கிடைத்த போது போது அவளே எதிரில் வந்து நிற்பது போன்ற ஒரு ஆனந்தப் பரவச நிலையைக் காதலன் அடைகிறான். அதனால் அப்போதிருந்த இறுக்கமான சூழ்நிலை கூட தென்றல் வீசும் இனிய நேரமாக மாறி விடுகிறது. அந்தக் கடிதத்தில் காணப்படும் இவனது முகவரியில் அவளது கையெழுத்து அவனது கடந்த கால நினைவுகளின் இன்பத்திற்கு எண்ணெய் ஊற்றுகிறது. கடிதம் கையில் கிடைத்ததால் ஏற்பட்ட முகமலர்ச்சி தன் இறுதி மூச்சின் உயிர்மூச்சாக விளங்குகிறது. என் உயிர்நிலை போன்ற இக்கடிதத்திற்கு பதில் எழுத மறந்தா போனேன் என்ற ஒரு ஏக்கப் பெருமூச்சுடன் கவிதை நிறைவு பெறுகிறது

தபால்காரன் கையில்

தரும்போதே

நேரில் நீ

வந்ததாய்

நினைக்கத் தோன்றும்

நிகழ்வின் புழுக்கம்

நெருக்கும்போது

தென்றலாய் வந்து

வீசும் பேசும்

உன்

முகவரி சொல்லும்

கையெழுத்து

முகம் மலர்த்தி

செலவான காலத்தின்

நினைவுகளுக்கு

எண்ணெயூற்றும்

மரணிக்கும் பொழுதுகளில்

சுவாசமூட்டும்

எனக்கான கடிதத்தை

எதிர்பார்க்கும் நான்

உனக்கெழுத

மறந்தா போனேன் ?

என்ற கவிதை வரிகள் காதலின் மகத்துவத்தை உணர்த்துகின்றன. அவன் செத்து செத்துப் பிழைக்கும் ஒவ்வொரு நொடியும் அவனுக்கு இறுதி மூச்சின் உயிர் மூச்சாக இக்கடிதம் விளங்குகிறது; இக்கடிதத்தைத் திரும்பத் திரும்ப வாசிப்பதால் தான் அவன் சுவாசித்துக் கொண்டிருக்கிறான்; எனவே இக்கடிதம் வெளிப்படுத்தும் அவளது காதல் அவனுக்கு உயிர் மூச்சாக விளங்குகிறது.

காதல் மனமும் சாதீய நிலமும்

வாழ் நிலம் என்ற கவிதை ஒரே இடத்தில் இருவரும் இருந்தாலும் அவர்களின் தெருக்களும் திருவிழாக்களும் கொடிகளும் கோஷங்களும் தனித்தனியாகவே உள்ளன. இருவரின் சாதி மதச் சான்றிதழ்கள் தனித்தனியானவை. அந்த ஊரில் ஜாதி மதப் பிரச்சனையால் காவலர்கள் சீருடையில் வந்து தூக்கிய துப்பாக்கிகளோடு அமைதி காக்க முயன்று வருகின்றனர். இதுபோன்ற ஒரு பதட்டமான சூழ்நிலையில் இருவருக்குள்ளும் ஒரு இதமான காதல் ஓடிக்கொண்டிருக்கிறது. இந்த ஜாதி மறுப்புக் காதலுக்கு மனம் ஆதரவாக இருந்தாலும் நிலம் ஆதரவாக இல்லை என்று சமூகச் சூழலை இக்கவிதை தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

ஒரே நிலத்தில்

நீயும் நானும்

எனத் தொடங்கும் இக்கவிதை அங்குள்ள சாதிமதப் பிரச்னையை பின்வரும் படி

இருக்கிறது இருவருக்குமாய்

ஏதோ ஒரு கடவுள்.

நமது வீதியில் சில நாட்களாய்
காவல் முகாம்

சீருடையில் துருத்தும் துப்பாக்கிகள்.

என விவரித்து சாதிக் கலவரத்தை ஒடுக்கும் முயற்சிகளில் காவலர் ஈடுபட்டிருப்பதொடு நிறைவு செய்கிறது.

தர்க்கம் தவிர்க்கும் காதல்

காதலில் வெற்றி பெற சமுதாயத்தின் சாதி, மத எதிர்ப்புகளோடு மோதலாம். குடும்பத்தில் வரும்

எதிர்ப்புகளைச் சமாளிக்கலாம் ஆனால் காதலர் இருவருக்குள் மறுத்துப் பேசுவதும் தர்க்கித்துப் பேசுவதும் கூடாது. இவர்கள் இருவருக்குள் கருத்தொற்றுமை இருக்க வேண்டும் என்பதைச் சுட்டும் கவிதைகள உள்ளன. **'ஒரு சந்திப்பில்'** என்ற கவிதை ஒரு குறியீட் கவிதையாக அமைந்துள்ளது. ஒரு திறப்பில் மையப்புள்ளி தேடும் ஒளித்திரள் என்பது இந்த சமூகக் கட்டுப்பாட்டு இருளில் இவர்களுக்குப் பேச வாய்ப்புக் கிடைக்கவில்லை.

இக்கணத்தின் இருள் நீங்கி

நாளையில் வாய்க்கலாம்.

என்ற வரிகள் இந்த இருள் மறுநாள் நீங்கலாம் அப்பொழுது ஒளி பிறக்கலாம். அவர்கள் இருவரும் உரையாட ஒரு வாய்ப்பு கிடைக்கலாம்

அதுவரை

புனைவின் போதாமையால்

தர்க்கம் தவிர்த்து

இன்று மட்டும்

விழி மூடியிருக்கப் போவோம்

என முடிவது இப்போதைக்கு அமைதியாக இருப்பதேசாலச் சிறந்தது; அதை விடுத்து ஒருவரோடு ஒருவர் தர்க்கித்துக் கொண்டிருப்பதால் ஆகப்போவது ஒன்றுமில்லை; அமைதி காப்பதே சிறந்த வழி என்று ஒரு நல்ல முடிவுக்கு வந்து இருப்பதாக இக்கவிதை நிறைவு பெறுகிறது. காதலின் வெற்றிக்கு படபடப்பு கூடாது; பொறுமை முக்கியம் என்பதை காதலில் வெற்றி கண்ட இக்கவிஞர் தனது அனுபவப் பாடமாக வாசகருக்கு எடுத்துரைக்கிறார்.

‘பூ மரநிழல்’ தொகுப்பில் உள்ள காதல் கவிதைகள் சொற்சிக்கனமும் பொருள் விரிவும் உடையன. ***‘இறுக்கம்’*** *என்ற கவிதை கவிஞரின் சொல்லாளுமைக்கு ஓர் இனிய எடுத்துக்காட்டாகும். அவன் மறுக்கின்றான் அவளும் மறுக்கவே விரும்புகிறாள். எனவே அவளும் இப்போது மறுக்க வேண்டும் ஆனால் அவளுடைய மறுப்பு இவனுடைய மறுப்புக்கு மறுப்பாக இருக்க வேண்டும். அதாவது அவள் மறுக்கவும் வேண்டும் ஆனால் அது மறுப்பாகத் தோன்றவும் கூடாது.*

வேண்டும் என்று அவன் கேட்டால் இவள் வேண்டாம் என்று சொல்லிவிடலாம். இது எல்லோருக்கும் எளிது. ஆனால் அவனே வேண்டாம் என்று சொல்லிவிட்டால் இவள் வேண்டும் என்றும் சொல்ல இயலாது; சரி என்று ஒப்புக்கொள்ளவும் கூடாது. மறுத்துப் பேச வேண் டும் அல்லவா? இப்போது என்ன சொல்லி மறுப்பால்? . இந்தச் சிக்கலான சூழ்நிலையில் அவள் என்ன செய்வாள்? என்ன சொல்வாள்? அவன் அவளிடம் அவன் குறும்பாகக் கேட்கிறான். இது தான் சவால். இதுவே கவிதை.

நான் மறுக்க

நீ மறுக்க

மறுப்பிற்கு மறுப்பாக

மறுப்பொன்றை வைத்து

மறுக்காமல் மறுப்பாயோ

இந்தக் கவிதையின் சுவை வாசகருக்கு வாசிக்க வாசிக்க மேலும் பெருகும். விடுவிக்க கடினமான விடுகதை போலவும் தோன்றும். ஒரு உரையாடல் காட்சியை மனதில் விரித்து பார்க்கும். இச்சுகானுபவத்துக்கு மேலாக இக்கவிதை கற்றுத் தரும் பாடம் ஒன்று உண்டு.

இக் கவிதை வெறும் சொல்லாடல் அல்ல. பொருள் பொதிந்த அனுபவம். காதலர் தம்முள் ஒருவரை ஒருவர் எதிர்த்து எதிர்த் பேசக் கூடாது. எதற்கெடுத்தாலும் வேண்டாம், மாட்டேன், இல்லை என்று ஒருவருக்கொருவர் மறுத்துப் பேசுவதால் உறவு கெட்டுவிடும். இனிமையும் பொறுமையும் காதலின் வெற்றிக்கு இன்றியமையாதன என்பதை விளக்கிக் கூரம் வழிகாட்டிக் கவிதை இது.

காதலில் கனி மறுத்த காய்கள்

காதலின் சுகம் அதன் மீதான பொறுப்புணர்ச்சியையும் சேர்த்து அனுபவிப்பது ஆகும். காதல் என்பது வெறும் பொழுது போக்கோ பருவக் கிளர்ச்சியின் தூண்டுதலோ மட்டும் அல்ல. இரு மனங்களின் இணைப்பு என்பதால் அது இரு குடும்பங்களின் இனைப்பும் ஆகும். இந்தியாவில் காதல் கல்யாணம் என்பனவெல்லாம் குடும்பங்கள் சார்ந்தனவே தவிர இரண்டு தனி மனிதர்கள் சார்ந்தது அல்ல என்பது உலகோர் அறிந்த உண்மை. காதலினால் ஒரு குடும்பத்தில் ஏற்படும் சிக்கல்களையும் எதிர்ப்புகளையும் வீண் வாக்கு வாதங்களையும் அவற்றைப் பிரதிபலிக்கும் வசைச் சொற்களையும் ***வசை*** *என்ற கவிதையில் காண்கிறோம்.*

இடையிடையில்

நாசியில் நுழையும்

தகா வாசம்

தவிர்த்தெழத் தடைப்படுகிறது

சுவாசம்

என்ற வரிகள் காதலைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கும் போதே சிலர் தகாத சொற்களைச் சொல்கின்றனர். இதனால் கேட்பவரின் மூச்சு ஒரு நிமிடம் நின்று போய்விடுகிறது. இவ்வாறு இவர்கள் பேசுவது இயல்பு

தான் என்று நினைத்து அவர்கள் கனியைத் தவிர்த்து காய் போன்ற சொற்களைப் பேசுவதை மனம் ஏற்றுக் கொள்கிறது.

இயல்பென்றறியாப் பொழுதில்

இடைபட்டுத் திரியும்

சொற்கள் கனி மறுத்த

காய்களை உருளும்

இதுவும் இயற்கை தான் என்று அறிவு எடுத்துரைக்கிறது. இருப்பினும் அவ்விடத்தில் பலரும் காதலை விமர்சித்து வைத்த சொற்கள் வெளியில் பாசமான சொற்களாகத் தோன்றினாலும் உள்ளுக்குள் அவை கசப்பேறியவையே. எனவே அவற்றைக் கவிஞர் ***மூடாக்கு போட்ட சொற்கள்*** *என்கிறார். வளமான காவிரி மண்ணில் வேளாண்மை செய்பவர் என்பதால் சத்தான வேளாண் சொற்கள் அவருக்கு ஆங்காங்கே கை கொடுக்கின்றன. வசைச் சொற்கள் பேசி தன மீது பாய்வோரை* ***பதுங்கல் அறியா புலிகள்*** *என்கிறார்.*

விரிந்த சருகுகள் மத்தியில்

காணாத நற்பொழுதின்

மூடாக்கு போட்ட சொற்கள்

பெருங்காடென வாய் விரிய

பதுங்கலறியாப் புலிகள்

பாயும்

என்ற வரிகளோடு இக்கவிதை நிறைவு பெறுகிறது.

காதல் என்பது அழகு, ஆஸ்தி, சாதி, மதம் பார்த்து வருவதல்ல. இரண்டு மனங்களின் ஈர்ப்பினால் உண்டாவதாகும். அந்தக் காதலினால் ஏற்படும்

மகிழ்ச்சியும் அதனால் ஏற்படும் துன்பங்களும் காதலை நிறைவேற்ற சமூகத்திலும் குடும்பத்திலும் உண்டாகும் எதிர்ப்புகளும் என காதலின் அனைத்துப் பரிமாணங்களையும் 'பூ மர நிழல்' உள்ள காதல் கவிதைகளில் காண முடிகிறது.

6. ‘பூ மர நிழல்’ தொகுப்பில் சமூகம்

பூ மர நிழல் கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள பெரும்பான்மையான கவிதைகள் 1990லிருந்து 1996 வரை எழுதப்பட்டவை. எனினும் இன்றைய வாசிப்பு நிலையிலும் இடைப்பட்ட கால இடைவெளி அதன் மொழி வெளிப்பாட்டில் தெரியவில்லை. பாடு பொருளும் கவி நடையும் இக்காலத்துக்கும் பொருந்துகின்றன. . **‘கவிதையின் அடர்த்தியும் வார்த்தைச் சிக்கனமும் இன்றைய நவீன கவிதையின் நேர்த்தியோடு இருப்பது புதிய வாசிப்பு அனுபவத்தைத் தருகிறது’** என்பார். தென்பாண்டியன். இத்தகைய இனிய வாசிப்பு அனுபவத்தைத் தருவதற்கான முக்கிய காரணம் இக் கவிதைகளில் சமூகம் பற்றிய கூர்ந்த கவனிப்பும் விமர்சனமும் இடம்பெற்றிருப்பது எனலாம். ‘இனி கவிதைகளை ஒரு வளர்ப்புப் பிராணியை போல எவரும் வழி நடத்திச் செல்ல வேண்டிய அவசியமில்லை என்று கருதுவதாக தென் பாண்டியன் குறிப்பிட்டுள்ளார்.

கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதைகளை வாசிக்கும் போதே அவற்றின் சொல்லும் பொருளும் சுவையும் நம்முடன் சேர்ந்து பயணிக்கும் திறன் படைத்தனவாகும் கவிஞரின் சமூகப்பார்வை எத்தனையோ கவிதைகளில் சொல்லப் பட்டிருந்தாலும் அவர் பல காட்சிகளை நடப்புகளைக் கூர்ந்து கவனித்து அவற்றை ஆவணமாகப் பதிய வைத்திருக்கும்

பொறுப்புணர்ச்சியும் அதற்குக் கவிதை என்ற கருவியை எடுத்தாண்டிருக்கும் விதமும் உணர்ந்து இன்புறத் தக்கதாகும். கவிஞரின் சமூகப் பார்வை பொறுப்புணர்ச்சியுடன் கூடியதாக இருப்பதையும் அவரது கவிதைகள் வாசகருக்கு உணர்த்துகின்றன.

பூ மர நிழல் கவிதைத் தொகுப்பில் **மாலைக்காட்சி, சுழற்சி, பதிவில், காத்திருத்தல், மேசை உலகம், வேறு, ஆசுவாசம், புகைவண்டியில், மழைக் கணம், சில புள்ளிகள், வீடு திரும்புதல்** போன்ற கவிதைகள் சமூக நடப்புகளை நடந்தபடியே விவரித்து அவற்றில் ஒரு மென்மையான விமர்சனத்தையும் பொதிந்து வைத்திருக்கின்றன. மாலைக்காட்சி என்ற கவிதையும் மழைக் கணம் என்ற கவிதையும் மாலையில் நடக்கும் நிகழ்ச்சிகளையும் மழை விழும் போது நடக்கும் நிகழ்ச்சிகளையும் வரிசைப்படுத்தி உள்ளன. இவை பட்டியல் போலத் தோன்றினாலும் கவித்துவம் செறிந்தவை ஆகும்.

மழை விழுந்தவுடன் என்னென்ன செயல்கள் நடைபெறுகின்றன என்பதை ஒவ்வொன்றாக சுட்டிச் செல்கிறது. மழை விழுந்ததும் சடசடவென்று சத்தம் கேட்கிறது பூச்சிகள் சின்னச்சின்ன செடியில் இருந்த பூச்சிகள் எல்லாம் ஒதுங்கி ஒடுகின்றன. அணில் தின்ற கொய்யா மரத்தில் குழந்தை தூங்கும் தூளி ஒன்று அவிழ்க்கப்படாமல் தொங்குகின்றது; குரங்குகள் தென்னம் பிஞ்சுகளைச் சுரண்டிப் போட்டு உள்ளன. ஐப்பசி மாதத்தின் தூரல் மத்தாப்பு பொறிகளை போல சடசடவென்று பெய்கின்றது இந்த சத்தத்தை கேட்டு குழந்தைகள் நடுங்குகின்றன. வெள்ளை தும்பைப் பூவில் குளிர்விக்கும் பூச்சிகளின் வண்ணம் கண்களின் கலவை என்று இந்த மழையின் போது நடக்கும் பகலா கவித்துவமான நிகழ்ச்சிகளை கவிஞர் கவிதை ஆக்கியுள்ளார் இறுதியில் குழந்தை நடுங்கும் மத்தாப்பு

என, ஐப்பசி தூறல் பொறிகளைப் பற்றி கூறி நிறைவு செய்கின்றார். மழை விழத் தொடங்கியதும் நடைபெறும் காட்சிகளைக் கண்களால் படம் பிடித்து கவிதையாக்கி தேர்ந்த ஓவியனைப் போல இக்கவிதையை வண்ணக் கோலமாகப் படைத்துள்ளார்.

மழைக்கணம்

கந்தகக் கலவையின்

காற்றுப் பாய்ச்சலில்

அடர்த்தியாய் விழும் மழைத்துளிகள்

என்று மழைத் துளிகளை அதன் மனம், கனம், விரைவு என்ற முப்பண்புகளையும் சுட்டிக்காட்டி

அடுத்து அடைமழை வருணனை

விதைக்கா வயல்

நடு வீடுகளில்

வெடிகளில் சட சட

கனப் பொழிவு

முதலில் துளிகள் விழுந்தன எனக் கவி புனைந்த கவிஞர் அடுத்து 'கனப்பொழிவு' என்கிறார். இடையிடையே கதிரவனும் தன பொன்னொளி பாய்ச்சுகிறான்.

அந்த சூரியக் கதிர்களில் தோன்றும் வானவில்லின் வண்ணக் கலவை தும்பைப் பூக்களின் மீது அமர்ந்திருக்கும் பூச்சிகளின் கண்களில் எதிரொளிக்கின்றது. தன்னைச் சுற்றி நடக்கும் மழைக்கால விந்தையினை கூர்ந்து நோக்கி மனதில் பதிய வைத்து கவிமணம் ஏற்றி வாசனைப் பூக்களாகத் தூவியிருக்கிறார்.

இடைவெளியில் நீளும்

கிரணகளின் வெள்ளை

தும்பைப் பூவில் குளிரொதுக்கித்

திரியும் பூச்சிகளின் வண்ணம்

கண்களின் கலவை

என்று கவி பாடியிருப்பதை ஆராயும் போது கவிஞரின் கூர்த்த பார்வையில் இருந்து தும்பைப் பூவின் மீதமர்ந்த பூச்சியின் கடுகத்தனைய கண்கள் கூடத் தவறவில்லை. அக்கண்களும் கூட அவர் மொழியில் கவிப்பொருள் ஆயின.

குழந்தை நடுங்கும்

மத்தாப்பென ஐப்பசித் தூறல்

பொறிகள்

என்று நிறைவு செய்கிறார். ஐப்பசியில் அடை மலை என்பது பழமொழி. இக்கவிதையில் அடை மலை பெய்து ஓய்ந்து கடைசியில் குழந்தைகள் கண்டாள் நடுங்கும் மத்தாப்பைப் போல சிறு தூறல் வரை கவிதையாக்கி நிறைவு செய்கிறார். கவிஞர் முத்தமிழ் விரும்பியின் பல கவிதைகள் மழை, வறட்சி, வெள்ளம் போன்ற இயற்கை நிகழ்வுகள் மக்கட்சமூகத்தில் ஏற்படுத்தும் விளைவுளைத் தமது பாடு பொருளாகக் கொண்டுள்ளன.

மாலைக் காட்சி *என்ற கவிதை 11 நிகழ்ச்சிகளை வரிசையாக எடுத்துக்கூறுகிறது மாலையில் வேலை முடிந்து வீட்டுக்கு திரும்பும் ஆட்கள், உதிரிப் பூவிற்பனை, பகலில் நிலா இருப்பதாகப் பாவனை காட்டிக் குழந்தைக்குச் சோறு ஊட்டும் தாய், நடந்து வரும் பசுவைத் தொட்டு கண்ணில் ஒற்றிக் கொள்ளும் ஒருவர், வெள்ளிக்கிழமை என்பதால் கோலம்*

போட்டிருக்கும் பாதையில் அது ஒருவழியாகும்; பொது வழி அல்ல என்று தெரிந்திருந்தும் அவ்வழியே சென்று இருப்பதை காட்டும் காலடித்தடங்கள்; கிளைச் சாலையில் புகுந்து விரையும் வாகனங்கள்; மொட்டை மாடியிலே காய்ந்து கொண்டிருக்கும் ஒரு பனியன்; அவசர அவசரமாக ரயில் நிலையத்திற்கு செல்லும் போது சாலை ஓரத்தில் இருக்கும் கோவிலை கண்டதும் கும்பிட் கும்பிடாமலும் குவியும் கரங்கள், புறநகர் புகைவண்டியை நோக்கி விரையும் கால்கள், வழியில் நண்பரிடம் நின்று பேச முடியாமல் கையசைத்து விடை பெற்று ஓடிய பிறகும், வண்டியை விட்டுவிட்டு வருத்தத்தோடு நின்று கொண்டிருக்கும் ஒருவர், என இத்தனை நிகழ்ச்சிகளையும் பார்த்தபடி காற்றில் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கும் அரசமரத்தின் இலைகள் என பதினோரு நிகழ்ச்சிகளை வரிசையாகக் கவிதையாக்கிருக்கிறார். ரயிலைப் பிடிக்க ஓடியவரின் விரைவை கவிதை நடையிலும் காணலாம். அதுவே இக்கவிதையின் தனி சிறப்பு.

கூடு திறந்ததும்

மறு கோட்டை நோக்கிப்

பூச்சுக் கலையாத முகங்கள்

உதிரிப்பூ விளையாடல்

படியாத பேரம்

எட்ட எட்ட நடையோடும்

குறுக்கு சந்தில்

அழும் குழவிக்கு

பகல் நிலா காட்டி

அசைந்து வரும் பசு தொட்டு

கண்ணில் கன்னம் ஒற்றும் காட்சி

வெள்ளிக்கிழமை ஒன்றில்

பொது வழி அல்ல

பலகை மாட்டியிருக்கும் சந்தில்

காலடிபட்ட கோலம் இருக்க

கிளைச்சாலை உட்புகுந்து

விரைய

மொட்டைமாடியில்

பனியன் ஒன்று தென்றல் தேடும்.

சாலையோர சந்நிதியை

கும்பிட்டு கும்பிடாமலும்

குவியும் கரங்கள்

புறநகர் புகைவண்டி நோக்கி

விரையும் கால்கள்

வழியில் மறித்த நண்பருக்கு

நேரமாச்சு என விடை கொடுத்து

ஓட

விடை பெற்றிருக்கும் வண்டி

அடுத்து எப்போது?

அரச மர இலைகளை

அசைக்கும் காற்றோடு

கலக்கும் பெருமூச்சு

இந்த கவிதையில் வரிசைப்படுத்தி இருக்கும் பல நிகழ்ச்சிகளின் இறுதியில் வண்டியைப் பிடிக்க இயலாமல் தவறவிட்டவரின் ஏக்கப் பெருமூச்சு வாசகருக்கு கேட்கிறது. புகை வண்டியை விட்டுவிட்டு நிற்கும் நபரின் பரிதாபநிலை கவிதை வாசிப்பவரை ஒருநிமிடம் நிறுத்திப் பெருமூச்சுவிட வைக்கின்றது இப்பெரு மூச்சு கவிதைக்கு உணர்ச்சி ஆழத்தையும் கண பரிமாணத்தையும் அளிக்கின்றது.

***சுழற்சி** என்னும் கவிதை வயலோரம் சாக்கடை ஓரம் ஒரு எருமை மாட்டின் மீது குருவி உட்கார்ந்திருக்கும் காட்சியை நமக்குப் படம் பிடித்துக் காட்டியுள்ளது. எவர் பார்த்தாலும் அங்கு ஒரு எருமை மாடும் அதன் முதுகில் உட்கார்ந்திருக்கும் குருவி மட்டுமே பார்வைக்குத் தெரியும். ஆனால் கவிஞருக்கு மட்டும் அதன் காலடியில் நிற்கும் கொக்கு, அந்தக் கொக்கின் காலடித் தடத்தில் நெளியும் புழுக்கள், அதன் அருகே வரப்போரம் வளர்ந்திருக்கும் கீரைச் செடி, அன்றிரவுச் சமையலுக்காக அந்தச் செடியில் கீரை பறிக்கும் ஒரு பெண் ஆகிய இத்தனையும் தெரிகின்றது. கவிஞனுக்கு சாதாரண மனிதருக்கு இருப்பது போன்ற தொலைவு பார்வை மற்றும் கிட்டப் பார்வை என்ற பார்வை வேறுபாடுகளோடு முடிந்து விடுவதில்லை. அவருக்கு நுண் நோக்குப் பார்வை [MICROSCOPIC VISION]. தொலை நோக்கும் பார்வை [TELESCOPIC VISION] என்ற பார்வைகளும் இருப்பதால் மட்டுமே கவிஞரால் ஒரு காட்சியை நுணுகிப் பார்த்து அதன்*

அனைத்துக் கூறுகளையும் பாடுபொருளாக்கிக் கவிதை படைக்க முடிகிறது. எருமை மேயும் காட்சியில் அவர உணவு சுழற்சியைக் காண்கிறார்.

எருமையின் மேல் இருக்கும் பூச்சிகளைக் கொத்தித் தின்னும் குருவி; எருமை சாக்கடை நீரைக் கலக்குவதால் அங்கு வெளியே வரும் புழுக்கள், அந்தப் புழுக்களைக் கொத்தித் தின்னும் கொக்கு, அந்த நீர் கசியும் வரப்பருகே வளர்ந்திருக்கும் கீரைச் செடி; இச்செடிகளின் கீரையைப் பறித்து உண்ணும் ஒரு பெண்; இவ்வாறு ஒன்றின் உணவு இன்னொன்றுக்கும் மாறி மாறி வரும் ஓர் அறிவியல் உண்மையைக் கவிதையாக்கி அதனை வாசகர் உணரும் வகையில் சுழற்சி எனப் பெயர் சூட்டியதும் பாராட்டத்தக்கதாகும்.

பேருந்து நிலையக் காட்சிகள்

கவிஞர் தான் அன்றாடம் காணும் காட்சிகளைத் தனது மனதில் படம் பிடித்து கவிதையாக்கிச் சுவைபடத் தந்துள்ளார். அவருடைய கூரிய நோக்கும் கருத்துவிளக்கமும் கவித்துவ நயமும் வாசகருக்கு பிரமிப்பை ஊட்டுகின்றன.

பதிவில் என்ற கவிதை ஒரு வேடிக்கையான சம்பவத்தை எடுத்துக் காட்டுகிறது இச்சம்பவம் இக்கவிதை எழுதப்பட்டுப் பல ஆண்டுகள் கழித்து சரத்குமார் நடித்த சூரிய வம்சம் என்ற திரைப்படத்திலும் அப்படத்தின் இயக்குனர் நடித்து ஒரு நகைச்சுவைக் காட்சியாக வந்துள்ளது.

தெரியாத முகம் ஒன்று

தெரிந்தது போல் கைகாட்ட

புரியாமல் தலையாட்டிப்

போனேன் நானும்

இது ஒருவரின் அனுபவம் ஆகும். இதே காட்சி இரண்டு மூன்று வசனங்களோடு நீட்சி அடைந்து திரைப்படத்தில் வந்து இரசிகர்களால் பெரிதும் இரசிக்கப்பட்டது உண்மையில் தெரியாதவர்களிடம் தெரிந்தவர் போலப் பேசுவது சூழ்நிலை ஆகும் சிக்கலான சூழ்நிலையை கவிஞர் உற்று நோக்கி அதனை கவியாக பதிவு செய்துள்ளார் இக்கவிதையில் ஒரு இயக்குனர் காட்சிகளாக்கி நகைச்சுவை காட்சியாக்கி ரசிகர்களுக்கு விருந்து படைத்து விட்டார்.

பேருந்து நிலையத்தில் பேருந்து ஏற வந்திருக்கும் ஒரு பெண் வெகுநேரமாக மழையில் காத்துக்கொண்டிருக்கிறாள். கவிஞரின் தத்துவப்படி காத்திருத்தல் என்பது ஒரு தவம் ஆகும். இவளும் மழை பெய்யத் தொடங்கிய போது வந்தவள் மழை நின்ற பிறகும் அவ்விடத்தை விட்டகலாமல் அங்கேயே நின்றுகொண்டிருக்கிறாள். இன்னும் அவன் வரவில்லையே என்று கவலையோடு நிற்கிறாள் அவளது கவலையை கவிஞர் கவிதை ஆக்குகிறார். மழையில் குடை பிடித்துக்கொண்டு நடந்து போகும் மற்ற பெண்கள் கவிஞருக்குத் தாமரைகளாகத் தோன்றுகின்றனர். இது புத்தம் புதிய உவமை ஆகும்.

காத்திருத்தல்

குடை பிடித்து

நடக்கும் தாமரைகள்

பள்ளி விட்டாயிற்று

தலை துவட்ட வேணும்

சுக்கு மல்லி காபியின் மணம்

மழை விட்டாச்சு

இன்னும் கிளம்பலையா நீ

மின்கம்பியும்

முத்துக் கோர்க்கும்

மழை விட்டுப் போச்சு

இன்னும் வரவில்லையே அவன்

*என்ற இக்கவிதையில் மின்சாரக் கம்பியில் மழை நீர் துளிகள் முத்து கோர்த்தவை போல காட்சியளிப்பதை 'மின்கம்பி**யும்** முத்துக் கோர்க்**கும்**' என்று இரண்டு சொற்களிலும் 'உம்'சேர்த்துக் கூறியது கவியழகு மிக்கதாகும். 'ஆனால் அவன் இன்னும் வரவில்லையே' என்ற ஏக்கத்துடன் இவள் வழி பார்த்துக் காத்திருக்கின்றாள் என்ற கடைசி வரி வாசகரை ஒரு நொடி நிறுத்திவிடும்.*

கவிஞர் முத்தமிழ் விரும்பியின் தனித்த போக்குகளில் சிறப்பு உத்திகளில் ஒன்றாக இக்கடைசி வரியின் சிறப்பைக் குறிப்பிட வேண்டும், இதனை ஆங்கில இலக்கிய விமர்சகர்கள் RHEME என்று குறிப்பிடுவர். கடைசி வரியில் வைக்கப்படும் முத்தாய்ப்பான அழகு அல்லது திருப்பு முனை [TWIST]. இக்கவிதை உத்தியை இக்கவிஞர் தனது கவிதைகளில் அழகுறப் பயன்படுத்தி இருக்கிறார்.

கலைந்து கிடந்த பொருட்களால் கலைந்து போன மனசு

***மேசை உலகம்** என்ற கவிதை வீட்டில் மேசை என்பதே தனி உலகம். அதில் நாம் ஒன்றைத் தேடும் போது அதைத் தவிர மீதி அனைத்தும் கிடைக்கும். இது*

பலருக்கும் ஏற்பட்ட அனுபவம் ஆகும் ஆனால் இதனைக் கவிதையாக்கலாம் என்ற நினைப்பு ஒருவருக்கும் வந்ததில்லை. இவ்வனுபவத்தை அழகுற கவிப்பொருளாக்கி புனைந்துரைக்கிறார் முத்தமிழ் விரும்பி.

ஒரு பொருளைத் தேடியதை விட்டுவிட்டு அங்குக் கிடைப்பதை எல்லாம் பார்த்து அந்நினைவுகளோடு நாம் ஒன்றிவிடுகிறோம். இக்கவிதையில் கவிஞர் மேசையில் இருக்கும் 13 பொருட்களைப் பட்டியலிட்டாலும் அவர் தேடிச் சென்ற பொருள் கிடைக்காததால் அங்குச் சிதறி கிடப்பவற்றை எடுத்து ஒழுங்காக அடுக்க வேண்டும் என்ற முடிவுக்கு வருகிறார். தொடங்கிய வேலை மனசை கலைத்து விட்டது இதனால் வேலை முடியவில்லை

மேசை உலகம் என்ற கலைந்து போன எண்ணங்களின் நடுவே ஒரு காதல் கீற்று ஒளிர்கின்றது.

நீ கொடுத்த

முகவரி அட்டையும்

இங்கேதான் இருக்கிறது

நானெழுதி

பாதியில் நிற்கும்

கடிதமும் இங்கெங்கோ

என்ற வரிகள் மென்மையான காதலைத் தன்மையாக சொல்லிச் செல்கின்றன. அடுத்து

அந்த புத்தகம் புரட்டும்போது

பொத்தென விழும்

மனசும்

என்ற வரிகள் அந்த புத்தகம் தொடர்பான எண்ணங்கள் மனதை அதன் பால் ஈர்த்து விட்டதனை உறுதி செய்கின்றன. மேசையில் இருக்கும் பொருட்களை அடுக்கி வைக்கும் வேலையை இன்னொரு நாள் தான் செய்ய முடியும் என்ற தொய்வும் ஏற்பட்டுவிட்டது.

மேசையில் தேவையற்ற மூக்குக்கண்ணாடி, மருந்து சீட்டு,வாகனச் சாவி போன்றவை இருப்பதால் இவற்றை வைக்க இதுவா இடம் எனக் கேட்டால் 'அறை சிறியதாக இருப்பதால் அவற்றை வைக்க இடம் இல்லை அதனால் மேசையில் வைத்து இருக்கிறோம் என்ற ஒரு சொல்லாமல் சொன்ன பதிலும் அவ்வேளையில் மனதில் எதிரொலிக்கின்றது

அலுவலகத்திலோ வீட்டிலோ மேசை, அலமாரி, அறை என எதுவாக இருந்தாலும் அது ஒழுங்காக் இருக்க வேண்டும் அந்த இடங்களைத் தூய்மையாகப் பாதுகாக்க வேண்டும் என்றால் அந்தந்த பொருள் அதற்குரிய இடத்தில் இருக்க வேண்டும். அது போல அனைத்துப் பொருளுக்கும் அவற்றிற்கென ஓர் இடம் தனியாக இருக்க வேண்டும். ஆங்கிலத்தில் இதனை every object has a place and every object in its place என்பர்.

அடுக்கத் தொடங்கி

கலையும் மனசு

காணாமல் போக

நாளை இருக்கிறது

இதே வேலை

எனக் கவிதை நிறைவடைகிறது.

விடுதலையின் சுகம்

ஒருவர் ஓய்வு பெற்ற பின் அவருடைய வாழ்க்கையில் அவர் ரசிக்கும் இயற்கை அழகும்

அவருடைய நிதானமான போக்கும் ஆசுவாசப்படுத்திக் கொள்ளும் அழகும் **ஆசுவாசம்** என்ற பெயரில் கவிதை வடிவம் பெற்றுள்ளன அதுவரை அவர் கோப்புகளை புரட்டிக் கொண்டு காபியை அருந்திக் கொண்டும் புழுங்கித் தவித்த அலுவலகச் சூழ்நிலை இன்று மாறி விட்டது. இப்போது அவர் மிதிவண்டி மிதித்தபடி அழகர் மலைப் பக்கம் செல்கிறார். அப்போது அவர் முகத்தை உரசிக் கொண்டு செல்கின்ற வண்ணத்துப்பூச்சி அவருடைய சுதந்திரத்துக்குக் குறியீடாக அமைந்துள்ளது. அவர் சாப்பாட்டுக் கடையை நோக்கி மதிய உணவுக்காக செல்கிறார். இக்காட்சியை கவிஞர் அழகாக ஒரு ஓவியம் போலத் தீட்டியுள்ளார்

ஆசுவாசம் என்ற கவிதை

பழுப்புத் தாட்களைப் புரட்டி புரட்டி

எடுத்துக் கூட்டிய எண்களில் நழுவி

விழுந்த கணங்களில்

கோப்புகளில்

கோப்பைத் தேநீரில்

புழுங்கித் தவிக்கும் உத்தியோகம் கழற்றி

என்ற வரிகளில் ஒரு அலுவலகத்தின் இறுக்கமான சூழ்நிலையையும் அலுவலகப் பணியாளர் அனுபவிக்கும் புழுக்கத்தையும் காண முடிகிறது. அடுத்து வரும் வரிகள் அவருடைய சுதந்திர சுவாசத்தைச் சுட்டுகின்றன

உச்சிக் கதிரில் மிதிவண்டி

அழகர் மலைத் தொடர்

எதிர்காணும் சாலையில்

நெல் காய வைத்த பெண்ணொருத்தி

மூக்குப்பொடியிட்ட தும்மல் விலக்கி

சாப்பாட்டுக்கடை நோக்கி

மிதிக்கையில்

முகத்தில் உரசிச் செல்லுமொரு

வண்ணத்துப்பூச்சி

இங்கு வண்ணத்துப்பூச்சி கட்டுப்பாடற்ற விடுதலையின் குறியீடாக விளங்குகிறது.

புகைவண்டியில் நீளும் பயணத்தில்; *என்ற கவிதை புகை வண்டியில் பயணிக்கும் போது அங்கு நடக்கும் நிகழ்வுகளை அவதானிக்கும் கவிஞர் அங்கே பயணிக்கும் சிறு குழந்தைகளிடம் பேசி மகிழ்வதும் அக்யில் குழந்தைகளின் மறுமொழியும் அழகாகப் பதிவு செய்திருக்கிறார்.*

தூங்கிய குழந்தைகள் எழுந்து

உணவு கொள்கின்றன

அழுத குழந்தை ஒன்று

தூக்க மயக்கத்தில் தழுவலில்

பிஞ்சுவிரல் அசைகிறது

இவை காலையில் கண்டு ரசித்த காட்சி. அடுத்து மதியமும் மாலையும் கவிதையாகிறது.

புழுக்கம் மதியம்

கலைந்து

நல்ல பிரதியின் ஊடுருவலாய்

கோடை மாலைக்காற்று

மயக்குகிறது

இவ்வரிகள் மாலையில் வீசும் குளிர்ச்சியான தென்றல் காற்றை உணர்ந்து மகிழும் மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றன. அடுத்து ஒரு வசனக் காட்சி

சேலத்தில் படிக்கிறாயா?

தம்பி படிக்கவில்லை

நீ குறும்பா? தம்பியா?

மௌனம்

இவர் கேட்கும் எந்தக் கேள்விக்கும் அந்தச் சிறுமி பதிலளிக்கவில்லை. இவரும் விடுவதாக இல்லை. மீண்டும் கேட்கிறார்.

சொல் சுவேதா

அந்தச் சிறுமி என்ன செய்தாள் தெரியுமா?

கைக்குட்டை மடித்து

துப்பாக்கியாக்கித்

தம்பியை சுட்ட சுவேதா

அவரிடம் சொன்னாள்

நீ தான் குறும்பு

இத்துடன் கவிதை நிறைவு பெறுகின்றது. சிறுவர்களைப் பார்த்துக் குறும்புக்காரரர்கள் என்றால் அவர்கள் பெரியவர்களைப் பார்த்து 'நீ தான் குறும்பு' என்று பட்டெனப் பதில் சொல்லக் கூடும். ஒவ்வொரு வினைக்கும் குழந்தைகளிடம் எதிர்வினை உண்டு என்பதை சுட்டிச் செல்லும் சுட்டிகளின் கவிதை இது.

சில புள்ளிகள் என்ற கவிதை மரணத்தைப் பற்றிய கவிஞரின் மன உணர்வை வெளிப்படுத்தும் கவிதையாகும் ஒரு சாலையில் அமரர் ஊர்தி சென்றதற்கான அடையாளமாக சாலை எங்கும் பூக்கள் தூவப்பட்டிருக்கும் காட்சி தெரிகின்றது

மாசிக்குளிரின் பின்னிரவில்

இரவு நேரத்தில்

இரவைத் துவம்சிக்கும்

பறையொலி

எங்கேயோ தொலைவில் ஓர் மரணம் நடந்திருப்பதை உணர்த்துகிறது. மரணம் என்ற உணர்வு ஒரு மனிதனிடம் எழுப்பும் தொடர் அதிர்வலைகளை இக்கவிதை காட்டுகிறது. மரண யார் வீட்டில் மரணம் நடந்து இருக்கிறது என்ற கேள்வியையும் எழுப்புகிறது இக்கேள்விக்கான பதில் கிடைத்ததும் அதிகாலையில் முதல் ரயிலில் மரணம் சம்பவித்த வீட்டாருக்கு ஆறுதல் சொல்வதற்கான பயணம் தொடங்குகிறது மரணம் பற்றிய தனித்தனி தகவல்களாயினும் இவை அனைத்தும் ஏற்படுத்தும் மன அழுத்தம் கவிதையில் உணர்த்தப்படுகிறது.

பூமர நிழல் கவிதை தொகுப்பில் மரணம் இரக்கம் போன்ற உணர்ச்சி சார்ந்த கவிதைகளும் ஆங்காங்கே இடம் பெற்றுள்ளன மரணம் துக்கத்தை தருவதாக

இருந்தாலும் மரணம் நடந்த வீட்டாரிடம் போய்ப் பேசி அவர்களுடைய துக்கத்தை ஆற்றுவது ஒவ்வொரு தனி மனிதனின் கடமை என்பதால் அதனை நிறைவேற்ற வேண்டும் என்ற தனி மனிதனின் கடமை உணர்ச்சியையும் கவிஞரின் கவிதையின் வாயிலாக சுட்டிக்காட்டுகின்றார்

பூ மர நிழல் தொகுப்பின் நிறைவு கவிதையான **நாளை வீடு திரும்புதல்** வீட்டினர் வேற்றூருக்குச் சென்ற பிறகு ஒரே ஒரு நபர் மட்டும் அவ்வீட்டில் தனித்து இருந்தால் அவருக்கு உண்டாகும் உணர்வுகள் குறித்து இக்கவிதை விளம்புகிறது. அவருடைய தனிமையையும் அவர் வாயிலாகவே கூறுவதான கூற்று மொழியில் இக்கவிதை அமைக்கப்பட்டுள்ளது

நான் மட்டுமே

இருக்கும் வீட்டின்

தனிமையைப் பாட

வந்துவிடுகின்றன சிள்வண்டுகள்

அவ்வீட்டில் சிள்வண்டுகளின் ஒலி மட்டுமே கேட்கின்றன. இது

எத்தனை முறை பெருக்கினாலும்

அழுக்கு போவதேயில்லை

சுத்தம் செய்யப்பட்ட

சமையலறையில் இருந்து

கசியும் நெடி

பெண்கள் இல்லாத வீட்டில் வீட்டைச் சுத்தம் செய்வது என்பது ஒரு சுமையான பணியாகும். அவர்களைப் போல நேர்த்தியாக வீட்டு வேலைகளைச் செய்வது கடினமான

பணியாகும். பலர் இருந்து புழங்கிய வீட்டில் இன்று தான் தனிமையில் இருந்தாலும் அவர்கள் இருந்தது போன்ற பேச்சரவம் கேட்டுக் கொண்டிருக்கின்றது

இரைச்சலும் பேச்சொலி

நிறைந்த வீட்டின் கதகதப்பு

இன்னும் ஏதோவொரு

மூலையிலிருந் சுரக்கிறது

ஒரு வீட்டில் ஆட்கள் இருப்பதே கதகதப்பாகவும் பாதுகாப்பாகவும் தோன்றும் ஆள் அரவமற்ற வீட்டில் தனிமையில் இருப்பது தூக்கத்தை கெடுக்கும்; நிம்மதியை குலைக்கும். எனவே

நாளை எல்லோரும்

வீடு திரும்புவார்கள் எனப்

பின்னிரவில்

நல்லுறக்கம் காண்பேன்

பின்னிரவு வரை தூக்கம் இல்லாமல் தவித்துவிட்டு பிறகு உறங்குவதாக கவிதை நிறைவடைகிறது.

பூ மரநிழல் கவிதை தொகுப்பில் ஒவ்வொரு மனித வாழ்வின் தனிமனித வாழ்வின் சின்னஞ்சிறு விஷயங்களும் சமூக வாழ்வின் பெரிய பிரச்சனைகளும் கவிதை ஆக்கப்பட்டுள்ளன. கவிஞரின் சமூகப்பார்வை ஆழமானதாகவும் அகலமானதாகவும் இருப்பதை இக்கவிதைகள் உறுதி செய்கின்றன. கவிதைத் தொகுப்பு தஞ்சாவூரின் மண்ணின் மைந்தனால் இயற்றப்பட்டு அதே தஞ்சாவூர்க் கதம்ப மாலையைப் போல மனமும் நிறமும் கொண்ட பல மலர்களாலான சுவையான தொகுப்பாக அமைந்து வாசிப்பவருக்கு வாசிப்பு அனுபவத்தை இனிமையாக்குகிறது.

7. பூ மர நிழல் - தலைப்புக் கவிதையில் பெண் உறவுகள்

பூ மர நிழல் கவிதை நீண்ட கவிதையாகக் கவிஞரின் தந்தையாரின் மரணத்தையும் அதன் பின் நடந்த சடங்குகளையும் அவரது சிறப்புக்களையும் கவிஞரின் தாயும் அம்மாச்சியும் அழுது தவித்ததையும் தன் தங்கையை அப்பா ஒர் ஆணைப் போல வளர்த்த விதத்தையும் விளக்குகிறது. இக்கவிதையில் பெண்கள் பற்றிய பதிவுகளை மட்டும் இங்கு காண்போம்.

கவிஞரின் தந்தையார் இரண்டாவதாகப் பிறந்த பெண் குழந்தையை ஆண் பிள்ளை போல துணிவோடும் உடல் வலுவோடும் திகழும்படி வளர்த்தார்..

பெண்ணாய் இரண்டாவதாய்

பிறந்தாலும்

பெண் பிள்ளையாய் வளர்க்கவில்லை

சொல்லிச் சொல்லித்

தங்கையை

உயர்நிலைப்பள்ளி விளையாட்டிலே

சடுகுடு ஆடச் சொல்வார்.

நீள அகலம்

ஓடியாடித் தாண்ட வைப்பார்.

என் பெண் பிள்ளை தான்

எனக்கு மூத்த ஆண் பிள்ளை

என்றே சொல்லி

நெஞ்சுரம் தந்து

தங்கையை வளர்த்தார்

என்று பெண் குழந்தையை ஆண் குழந்தை போல தன் தந்தை வளர்த்த விதத்தை இக்கவிதையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

மருமகன் இழந்ததைக் கேட்ட மாமியார் தன் மகளுக்கு ஆறுதல் சொல்ல இயலாமல் அவரே தவித்துக் கலங்குகிறார். அவ்வாறு கலங்கி அழும்போது தன் மருமகனின் சிறப்புகளை அவர் அந்த மருமகனைத் தன் மகளுக்கு மணாளனாகத் தேர்ந்தெடுத்த காரணங்களை எடுத்துச் சொல்கிறார்.

வீரபாண்டி மீசை வளர்த்தவரு

அந்தக்கால மிலிட்டரி வீரருன்னு

ஆசையாய் மதிப்பாய். என்னை

அத்தையின்னு அழைச்சவரு

பெரிய வாத்தியாரும் மருமகன்னு

நெஞ்சுரத்தை மீசை காட்ட

எங்க கிராமத்தில் முதல் முதல்ல

கோட்டு சூட்டு போட்ட வரை

ராசாதி ராசாவா

என் மக கையைப் பிடிச்சவரு

என்று மருமகனின் அருமை பெருமைகளை மாமியார் எடுத்துக்கூறி அழுகின்றார். தன் மருமகன் இறந்துவிட்டார் தன் மகள் தவிக்கின்றாள் என்பதை அறிந்த தாய் தன் மகளுக்காகவும் கலங்கித் தவித்து புலம்புகிறார்.

அந்தக் காலத்திலேயே

பொட்டி வண்டி கட்டி

புள்ளய படிக்க வச்சேன்

என் மகளை பெரிய வாத்தியாரு

ஆக்கி வெச்சேன்

இந்த மகராசன் கையை

பிடிக்க வச்சேன்.

கல்யாண வயசுல

ரெண்டு பிள்ளைகளை

விட்டு போனாரே - முழுசா

வீடு வந்து சேரலையே

என்ற வரிகள் தன் மகளைச் சிறப்பாக படிக்க வைத்து வாத்தியார் வேலை வாங்கிக் கொடுத்து பின்பு அப்பெண்ணுக்கு சமமான வாத்தியார் வேலை பார்க்கும் மணமகனைக் கண்டறிந்து திருமணம் செய்து வைத்து தன்னுடைய கடமைகளைச் சிறப்பாகச் செய்ததை அந்த வயதான தாய் நினைவு கூர்கின்றார்.

மேலும் தான் சுமங்கலியாக இருக்கும் போது தன்னுடைய மகளுக்குக் கணவன் இறந்துவிட்டார் என்ற வருத்தமும்

எனக்கு முன்னாலே

என் மகள் தாலி போச்சே

விடியாம போயிருச்சு

மிச்ச வாழ்க்கை

வீணா போயிடுச்சே

என்று சொல்லி அழும் வரிகள் வாசகருக்கும் கண்ணீரை வரவழைக்கின்றது.

தாய் தன் மகளுக்குத் தான் தேடித்தந்த கணவரின் சிறப்புகளைத் தொடர்ந்து சொல்லிக் கொண்டு இருக்கின்றார்.

என் மருமகன் மன்னவரு

கல்லணை கட்டிய கரிகாலன்

ராசாதிராசன் பரம்பரையில் வந்தவர்

எங்க மருமகனா நின்னவரு

என்று அவருடைய பெருமைகளை அடுத்தடுத்துச் சொல்லிக் கொண்டு செல்கிறார். இவ்வாறு அம்மாச்சி அழுது கொண்டிருந்த போது அம்மாவின் அழுகையைக் கேட்டு கவிஞரின் தாய் மூர்ச்சை ஆகி விடுகிறார்.

அடுத்து,

ஒப்பாரி சொன்ன அம்மாச்சியும்

மாரடித்து மூர்ச்சையானார்

என்ற வரிகள் தாயும் மகளும் தங்களுக்கு ஏற்பட்ட துக்கத்தைத் தாங்காமல் மூர்ச்சையாகிப் போன சம்பவத்தை கவிஞர் கவிதையில் பதிவு செய்து உள்ளார்.

ஒரு பெண் மறைந்து போன தனது கணவனுக்காக அலுத்து புலம்ப அதே இடத்தில் இன்னொரு பெண், தாலி இழந்த தனது மகளுக்காகக் கலங்கி அழ கவிஞர் முத்தமிழ் விரும்பி இரண்டையும் பதிவு செய்துள்ளார்.

கவிஞரின் பூ மர நிழல் கவிதைத் தொகுப்பில் பெண்களைப் பற்றிய உயர்வான தெளிவான நல்ல ஆக்கப்பூர்வமான சிந்தனைகளும் கருத்துக்களும் இடம்பெற்றுள்ளன. அன்பான தாய், பாசமான தங்கை, காதலில் கசிந்துருகும் மனைவி, நேச மகள், நினைந்து இன்புறத்தக்க சிறுவயது தோழிகள் என இவருடைய உலகம் அழகான அன்பான அறிவான பெண்கள் சூழ்ந்த உலகமாக விளங்குகிறது. தன்னைச் சுற்றியுள்ள அழகான உலகத்தை கவிதையாக்கி இருப்பதால் கவிதைகளும் மென்மையாகவும் இனிமையாகவும் அமைந்துள்ளன.

முனைவர் செ.இராஜேஸ்வரி அவர்களின் பிற நூல்கள்

